**அகிலத்தையும் ஆகாயத்தையும்**

அகிலத்தையும் ஆகாயத்தையும்
உந்தன் வல்ல பராக்கிரமத்தாலே
ஆண்டவரே நீர் சிருஷ்டித்தீரே
உந்தன் நல்ல கரத்தினாலே
ஆகாதது ஒன்றுமில்லை உம்மால்
ஆகாதது ஒன்றுமில்லை
சர்வ வல்லவரே கனமகிமைக்கு
பாத்திரரே ஆகாதது என்று
ஏதுமில்லை உம்மால்
ஆகாதது ஒன்றுமில்லை

Ah! Lord God, Thou hast made the Heavens
And the earth by Thy great power
Ah Lord God, Thou hast made the heavens
And the earth by Thine outstretched arm.
Nothing is too difficult for thee (2)
Great mighty God.
Great in counsel and mighty in deed
Nothing Nothing, Absolutely nothing
Nothing is too difficult for Thee.

# அசைவாடும் ஆவியே

1.அசைவாடும் ஆவியே
தூய்மையின் ஆவியே (2)
இடம் அசைய உள்ம் நிரம்ப
இறங்கி வாருமே(2)

2.பெலனடைய நிரப்பிடுமே
பெலத்தின் ஆவியே (2)
கனமடைய ஊற்றிடுமே
ஞானத்தின் ஆவியே (2)
அசைவாடும்...

3.தேற்றிடுமே உள் sங்களை
இயேசுவின் நாமத்தினால் (2)
ஆற்றிடுமே காயங்களை
அபிஷேக தைலத்தினால் (2)
அசைவாடும்...

4.துடைத்திடுமே கண்ணீரெல்லாம்
கிருபையின் பொற்கரத்தால் (2)
நிறைத்திடுமே ஆனந்தத்தால்
மகிழ்வுடன் துதித்திடவே (2)
அசைவாடும்...

## அடைக்கலமே உமதடிமை நானே

1.அடைக்கலமே உமதடிமை நானே
ஆர்ப்பரிப்பேனே அகமகிழ்ந்தே
கர்த்தர் நீர் செய்த நன்மைகளையே
நித்தம் நித்தம் நான் நினைப்பேனே

2.அளவற்ற அன்பினால் அணைப்பவரே
எண்ணற்ற நன்மையால் நிறைப்பவரே
மாசில்லாத நேசரே மகிமை பிரதாபா
பாசத்தால் உம்பாதம் பற்றிடுவேனே - ஆ

3.கர்த்தரே உம் செய்கைகள் பெரியவைகளே
சுத்தரே உம் செயல்கள் மகத்துவமானதே
நித்தியரே உம் நியாயங்கள் என்றும் நிற்குமே
பக்தரின் பேரின்ப பாக்கியமதே - ஆ

4.என்னை என்றும் போதித்து நடத்துபவரே
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவரே
நடக்கும் வழிதனை காட்டுபவரே
நம்பி வந்தோரைக் கிருபை சூழ்ந்து கொள்ளுதே - ஆ

5.கரம் பற்றி நடத்தும் கர்த்தர் நீரல்லோ
கூப்பிட்ட என்னைக் குணமாக்கினீரல்லோ
குழியில் விழாதபடி காத்துக் கொண்டீரே
அழுகையை களிப்பாக மாற்றி விட்டீரே - ஆ

## அதி சீக்கிரத்தில் நீங்கிவிடும்

அதி சீக்கிரத்தில் நீங்கிவிடும்
இந்த லேசான உபத்திரவம்
சோர்ந்து போகாதே - நீ

1. உள்ளார்ந்த மனிதன் நாளுக்கு நாள்
புதிதாக்க படுகின்ற நேரமிது சோர்ந்து

2. ஈடு இணையில்லா மகிமை
இதனால் நமக்கு வந்திடுமே

3. காண்கின்ற உலகம் தேடவில்லை
காணாதப் பரலோகம் நாடுகிறோம்

4. கிறிஸ்துவின் பொருட்டு நெருக்கப்பட்டால்
பாக்கியம் நமக்கு பாக்கியமே

5. மன்னவன் இயேசு வருகையிலே
மகிழ்ந்து நாமும் களிகூருவோம்

6. மகிமையின் தேவ ஆவிதாமே
மண்ணான நமக்குள் வாழ்கின்றா

அதிகாலை ஸ்தோத்திர பலி
அப்பா அப்பா உங்களுக்குத் தான்
ஆராதனை ஸ்தோத்திர பலி
அப்பா அப்பா உங்களுக்குத் தான் - 2

1. எபிநேசர் எபிநேசர்
இதுவரை உதவி செய்தீர்
இதுவரை உதவி செய்தீர்
எபிநேசர் எபிநேசர்

2. பரிசுத்தர் பரிசுத்தர்
பரலோக ராஜாவே
பரலோக ராஜாவே
பரிசுத்தர் பரிசுத்தர்

3. எல்ஷடாய் எல்ஷடாய்
எல்லாம் வல்லவரே
எல்லாம் வல்லவரே
எல்ஷடாய் எல்ஷடாய்

4. எல்ரோயி எல்ரோயி
என்னை காண்பவரே
என்னை காண்பவரே
எல்ரோயி எல்ரோயி

5. யேகோவா யீரே
எல்லாம் பார்த்துக் கொள்வீர்
எல்லாம் பார்த்துக் கொள்வீர்
யேகோவா யீரே

6. அதிசய தெய்வமே
ஆலோசனை கர்த்தரே
ஆலோசனை கர்த்தரே
அதிசய தெய்வமே

7. யேகோவா ஷம்மா
எங்களோடு இருப்பவரே
எங்களோடு இருப்பவரே
யேகோவா ஷம்மா

8. யேகோவா ஷாலோம்
சாமாதானம் தருகிறீர்
சாமாதானம் தருகிறீர்
யேகோவா ஷாலோம்

9. யேகோவா நிசியே
எந்நாளும் வெற்றி தருவீர்
எந்நாளும் வெற்றி தருவீர்
யேகோவா நிசியே

10. யேகோவா ரஃப்பா
சுகம் தரும் தெய்வம்
சுகம் தரும் தெய்வம்
யேகோவா ரஃப்பா

# அதிகாலையில் பாலனைத் தேடி

அதிகாலையில் பாலனைத் தேடி
செல்வோம் நாம் யாவரும் கூடி
அந்த மாடடையும் குடில் நாடி,
தெய்வ பாலனைப் பணிந்திட வாரீர்...
அதிகாலையில் பாலனைத் தேடி...
வாரீர்... வாரீர்... வாரீர்...
நாம் செல்வோம்

1. அன்னை மரியின் மடிமேலே
மன்னன் மகவாகவே தோன்ற
விண் தூதர்கள் பாடல்கள் பாட,
விரைவாக நாம் செல்வோம் கேட்க...
- அதிகாலையில்

2. மந்தை ஆயர்கள் யாவரும் அங்கே
அந்த முன்னணை முன்னிலை நின்றே
உன் சிந்தை குளிர்ந்திட போற்று
நல் காட்சியை கண்டிட நாமே...
- அதிகாலையில்

## அதிசயமான ஒளிமய நாடாம்

அதிசயமான ஒளிமய நாடாம்
நேசரின் நாடாம் - நான் வாஞ்சிக்கும் நாடாம்

1. பாவம் இல்லாத நாடு
ஒரு சாபமும் காணா நாடு - 2
நித்திய மகிழ்ச்சி ஓயாத கீதம்
உன்னதத்தில் ஓசன்னா - அல்லேலூயா

2. சந்திர சூரியன் இல்லை ஆனால்
இருள் ஏதும் காணவில்லை - 2
தேவகுமாரன் ஜோதியில் ஜோதி
நித்திய வெளிச்சமவர் - என்றும் பகல்

3. விதவிதக் கொள்கையில்லை
பலப்பிரிவுள்ள பலகை இல்லை - 2
ஒரே ஒரு குடும்பம் ஒரே ஒரு தலைவர்
எங்குமே அன்புமயம் - அன்புள்ளோர் செல்லும்

4. பிரச்சனை ஏதும் இல்லை
வீண் குழப்பங்கள் ஒன்றும் இல்லை - 2
மொழி நிறம் ஜாதி பற்று உடையோர்
எவருமே அங்கு இல்லை - அன்பே மொழி

5. பல பல திட்டம் இல்லை
ஆளும் சட்டங்கள் ஏதும் இல்லை - 2
காவல்துறையில்லை கண்டிப்பும் இல்லை
மனிதனின் ஆட்சியில்லை - பேரானந்தமே

6. கடைத்தெரு ஏதும் இல்லை
தொழிற்சாலைகள் ஒன்றும் இல்லை - 2
தரித்திரர் செல்வர் சிறியவர் பெரியோர்
ஆகிய சிறப்பும் இல்லை - எல்லாம் சமம்

7. இயேசுவின் இரத்ததினால்
பாவம் கழுவினால் செல்லலாமே - 2
இத்தனை பெரிய சிலாக்கியம் இழப்போர்
இப்பூமியில் எவரும் வேண்டாம் - இன்றே வாரீர்

## அத்திமரம் துளிர்விடாமல் போனாலும்

அத்திமரம் துளிர்விடாமல் போனாலும்
திராட்சை செடி பலன் கொடாமல் போனாலும்

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்
என் தேவனுக்குள் களி கூருவேன்

1.ஒலிவ மரம் பலன் அற்றுப் போனாலும்
வயல்களிலே தானியமின்றிப் போனாலும்

2.மந்தையிலே ஆடுகளின்றிப்போனாலும்
தொழுவத்திலே மாடுகளின்றிப் போனாலும்

3.எல்லாமே எதிராக இருந்தாலும்
சூழ்நிலைகள் தோல்வி போல தெரிந்தாலும்

4.உயிர் நண்பன் என்னை விட்டுப் பிரிந்தாலும்
ஊரெல்லாம் என்னைத் தூற்றித்திரிந்தாலும்

அனாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே

இந்த தேவன் என்றென்றுமுள்ள
சதா காலமும் நமது தேவன்
மரணபரியந்தம் நம்மை நடத்திடுவார்

1. காருண்யத்தாலே இழுத்துக்கொண்டார்
தூய தேவ அன்பே
இவ் வனாந்திரத்தில் நயங்காட்டி உன்னை
இனிதாய் வருந்தி அழைத்தார்

2. கானகப் பாதை காரிருளில்
தூய தேவ ஒளியே
அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளை
அரும் நீரூற்றாய் மாற்றினாரே

3. கிருபை கூர்ந்து மனதுருகும்
தூய தேவ அன்பே
உன் சமாதானத்தின் உடன்படிக்கைதனை
உண்மையாய்க் கர்த்தர் காத்துக்கொள்வார்

4. இப்புவி யாத்திரை கடந்திடுவாய்
தூய தேவ தயவால்
கடும் கானகத்தில் கர்த்தர் மார்பினில்
கிடைக்கும் இளைப்பாருதல்

5. வறண்ட வாழ்க்கை செழித்திடுதே
தூய தேவ அருளால்
நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம

## அனாதியான கர்த்தரே

1. அனாதியான கர்த்தரே,
தெய்வீக ஆசனத்திலே
வானங்களுக்கு மேலாய் நீர்
மகிமையோடிருக்கிறீர்.

2. பிரதான தூதர் உம்முன்னே
தம் முகம் பாதம் மூடியே
சாஷ்டாங்கமாகப் பணிவார்,
'நீர் தூய தூயர்' என்னுவார்.

3. அப்படியானால், தூசியும்
சாம்பலுமான நாங்களும்
எவ்வாறு உம்மை அண்டுவோம்?
எவ்விதமாய் ஆராதிப்போம்?

4. நீரோ உயர்ந்த வானத்தில்,
நாங்களோ தாழ்ந்த பூமியில்
இருப்பதால், வணங்குவோம்,
மா பயத்தோடு சேருவோம்.

## அன்பில் என்னை பரிசுத்தனாக்க

1. அன்பில் என்னை பரிசுத்தனாக்க
உம்மைக் கொண்டு சகலத்தையும்
உருவாக்கியே நீர் முதற்பேறானீரோ
தந்தை நோக்கம் அநாதியன்றோ

என் இயேசுவே நேசித்தீரோ
எம்மாத்திரம் மண்ணான நான்
இன்னும் நன்றியுடன் துதிப்பேன்

2. மரித்தோரில் முதல் எழுந்ததினால்
புது சிருஷ்டியின் தலையானீரே
சபையாம் உம் சரீரம் சீர் பொருந்திடவே
ஈவாய் அளித்தீர் அப்போஸ்தலரை – என்

3. முன்னறிந்தே என்னை அழைத்தீரே
முதற்பேராய் நீர் இருக்க
ஆவியால் அபிஷேகித்தீர் என்னையுமே
உம் சாயலில் நான் வளர – என்

4. வருங்காலங்களில் முதற்பேராய்
நீர் இருக்க நாம் சோதரராய்
உம் கிருபையின் வார்த்தையை வெளிப்படுத்தி
ஆளுவோம் புது சிருஷ்டியிலே – என்

5. நன்றியால் என் உள்ளம் நிறைந்திடுதே
நான் எப்படி பதில் செய்குவேன்
உம்மகா நோக்கம் முற்றுமாய் நிறைவேறிட
என்னை தந்தேன் நடத்திடுமே – என்

அன்பு கூருவேன் இன்னும் அதிகமாய்

1. அன்பு கூருவேன் இன்னும் அதிகமாய்
ஆராதிப்பேன் இன்னும் ஆர்வமாய் (2)

முழு உள்ளத்தோடு ஆராதிப்பேன்
முழு பெலத்தோடு அன்பு கூருவேன்
ஆராதனை ஆராதனை - 4

2. எபிநேசரே எபிநேசரே
இதுவரையில் உதவினீரே (2)
இதுவரையில் உதவினீரே - உம்மை

3. எல்ரோயீ எல்ரோயீ
என்னைக் கண்டீரே நன்றி ஐயா
என்னைக் கண்டீரே நன்றி ஐயா - உம்மை

4. யெகோவா ராப்பா யெகோவா ராப்பா
சுகம் தந்தீரே நன்றி ஐயா
சுகம் தந்தீரே நன்றி ஐயா - உம்மை

அன்பே பிரதானம், - சகோதர அன்பே
பிரதானம்.

1. பண்புறு ஞானம்,- பரம நம்பிக்கை,
இன்ப விஸ்வாசம், - இவைகளிலெல்லாம்

2. பலபல பாஷை – படித்தறிந்தாலும்,
கலகல வென்னும் – கைம்மணியாமே

3. என் பொருள் யாவும் - ஈந்தளித்தாலும்,
அன்பில்லையானால் - அதிற்பயனில்லை

4. துணிவுட னுடலைச் – சுடக்கொடுத்தாலும்,
பணிய அன்பில்லால் – பயனதிலில்

5. சாந்தமும் தயவும் – சகல நற்குணமும்
போந்த சத்தியமும் – பொறுமையுமுள்ள

6. புகழிறு மாப்பு, - பொழிவு பொறாமை,
பகைய் நியாயப் – பாவமுஞ் செய்யா

7. சினமடையாது, - தீங்கு முன்னாது,
தினமழியாது, - தீமை செய்யாது

8. சகலமுந் தாங்கும், - சகலமும் நம்பும்,
மிகைபட வென்றும் – மேன்மை
பெற்றோங்கும்

## அன்பே! அன்பே! அன்பே!

அன்பே! அன்பே! அன்பே!
ஆருயிர் உறவே,
ஆனந்தம்! ஆனந்தமே!

1. ஒருநாள் உம்தயை கண்டேனையா,
அந்நாளென்னை வெறுத்தேனையா,
உம் தயை பெரிதையா - என்மேல்
உம் தயை பெரிதையா.

2. பரலோகத்தின் அருமைப் பொருளே,
நரலோகரிலன்பேனையா?
ஆழம் அறிவேனோ - அன்பின்
ஆழம் அறிவேனோ?

3. அலைந்தேன் பலநாள் உமையுமறியா
மறந்தே திரிந்த துரோகியை
அணைத்தீர் அன்பாலே - எனையும்
அணைத்தீர் அன்பாலே.

4. ப+லோகத்தின் பொருளின் மகிமை
அழியும் புல்லின் ப+வைப்போல்
வாடாதே ஐயா - அன்பு
வாடாதே ஐயா.

5. இப்பாரினில் உம் அன்பின் இனிமை
இயம்பற்கியலாதாகில் யான்
இசைக்கவும் எளிதாமோ - பரத்தில்
இசைக்கவும் எளிதாமோ!

**அப்பா நான் உம்மைப் பார்க்கிறேன்**

அப்பா நான் உம்மைப் பார்க்கிறேன்
அன்பே நான் உம்மைத் துதிக்கிறேன்

1. நீரே என் வழி நீரே என் சத்தியம்
நீரே என் ஜீவனன்றோ

2. அப்பாவும் நீரே அம்மாவும் நீரே
நான் உந்தன் பிள்ளையன்றோ

3. நல்ல மேய்ப்பன் நீர் தானே
நான் உந்தன் ஆட்டுக்குட்டி

4. ஜீவ நீருற்று நீர் தானே
உந்தன்மேல் தாகம் கொண்டேன

# அப்பா பிதாவே அன்பான தேவா

அப்பா பிதாவே அன்பான தேவா
அருமை இரட்சகரே ஆவியானவரே

1. எங்கோ நான் வாழ்ந்தேன் அறியாமல் அலைந்தேன்
என் நேசர் தேடி வந்தீர்
நெஞ்சார அணைத்து முத்தங்கள் கொடுத்து
நிழலாய் மாறி விட்டீர்
நன்றி உமக்கு நன்றி (அப்பா)

2. தாழ்மையில் இருந்தேன் தள்ளாடி நடந்தேன்
தயவாய் நினைவு கூர்ந்தீர்
கலங்காதே என்று கண்ணீரைத் துடைத்து
கரம் பற்றி நடத்துகிறீர்

3. உளையான சேற்றில் வாழ்ந்த என்னை
தூக்கி எடுத்தீரே
கல்வாரி இரத்தம் எனக்காக சிந்தி
கழுவி அணைத்தீரே

4. இரவும் பகலும் ஐயா கூட இருந்து
எந்நாளும் காப்பவரே
மறவாத தெய்வம் மாறாத நேசர்
மகிமைக்குப் பாத்திரரே

5. ஒன்றை நான் கேட்பேன்
அதையே நான் தேடி ஆர்வமாய் நாடுகிறேன்
உயிரோடு வாழும் நாட்களெல்லாம்
உம்பணி செய்திடுவேன் - நன்றி

**அமர்ந்திருப்பேன் அருகினிலே**

1.அமர்ந்திருப்பேன் அருகினிலே
சாய்ந்திருப்பேன் உம் தோளினிலே
இயேசய்யா என் நேசரே
அன்பு கூர்ந்தீர் ஜீவன் தந்தீர்

2.நேசிக்கிறேன் உம்மைத்தானே
நினைவெல்லாம் நீர்தானய்யா
துதிபாழ மகிழ்ந்திருப்பேன்
உயிருள்ள நாளெல்லாம் - 2

## அரசனைக் காணாமலிருப்போமோ?

### பல்லவி

அரசனைக் காணாமலிருப்போமோ? – நமது
ஆயுளை வீணாகக் கழிப்போமோ?

### அனுபல்லவி

பரம்பரை ஞானத்தைப் பழிப்போமோ? – யூதர்
பாடனுபவங்களை ஒழிப்போமோ? – யூத

### சரணங்கள்

1. யாக்கோபிலோர் வெள்ளி உதிக்குமென்றே, - இஸ்ரேல்
ராஜ செங்கோலெங்கும் கதிக்குமென்றே,
ஆக்கமிழந்து மறுவாக்குரைத்த பாலாம்
தீர்க்கன் மொழிபொய்யாத பாக்கியமே – யூத

2. தேசோ மயத்தாரகை தோன்றுது பார்! – மேற்குத்
திசை வழி காட்டிமுன் செல்லுது பார்!
பூசனைக் காண நன்கொடைகள் கொண்டே – அவர்
பொன்னடி வணங்குவோம், நடவுமின்றே! – யூத

3. அலங்காரமனை யொன்று தோணுது பார்! – அதன்
அழகு மனமுங் கண்ணும் கவர்ந்தது பார்!
இளவர சங்கிருக்கும் நிச்சயம் பார்! – நாம்
எடுத்த கருமம் சித்தியாகிடும் பார்! – யூத

## அரணும் கோட்டையும்

அரணும் கோட்டையும்
பெலனாய் காப்பவர்
திடமாய் ஜெயித்திட
எனது என்றென்றும் துணையே

1. ஜீவ நம்பிக்கை நல்க
இயேசு மரித்து எழுந்தார் (2)
அழிந்திடாத உரிமை பெறவே
புது ஜீவன் அடையச் செய்தார் (2)

2. மகிழ்ச்சி ஆனந்தம் தங்க
மகிமை நம்பிக்கை ஈந்தார் (2)
நீதிமானை செழிக்கச் செய்து
என்றென்றும் ஜெயம் நல்குவார் (2)

3. தம்மால் மதிலைத் தாண்டி
உம்மால் சேனைக்குள் பாய்வேன் (2)
எதிர்த்து நின்று ஜெயமே அடைவேன்
என்றென்றும் துணைசெய்கின்றார் (2)

## அருள் ஏராமாய் பெய்யும் உறுதி வாக்கிதுவே

அருள் ஏராமாய் பெய்யும் உறுதி வாக்கிதுவே
ஆறுதல் தேறுதல் செய்யும் சபையை உயர்ப்பிக்குமே

1.அருள் ஏராளம் அருள் அவசியமே
அற்பமாய் சொற்பமாய் அல்ல திரளாய் பெய்யட்டுமே

2.அருள் ஏராமாய் பெய்யும் மேக மந்தாரமுண்டாம்
காடான நிலத்திலேயும் செழிப்பும் பூரிப்புமாம் அருள்...

3.அருள் ஏராளமாய் பெய்யும் இயேசுவின் நாமத்திலே
இங்குள் கூட்டத்திலேயும் கிரியை செய்தருளுமே
அருள்...

4.அருள் ஏராளமாய் பெய்யும் பொழியும் இணமே
அருளின் மாரியைத் தாரும் ஜீவ தயாபரரே அருள்...

## அருள் நிறைந்தவர்

1. அருள் நிறைந்தவர்
பூரண ரட்சகர் தேவரீரே,
ஜெபத்தைக் கேட்கவும்
பாவத்தை நீக்கவும்
பரத்தில் சேர்க்கவும்
வல்லவரே.

2. சோரும் என் நெஞ்சுக்கு
பேரருள் பொழிந்து பெலன் கொடும்.
ஆ! எனக்காகவே
மரித்தீர் இயேசுவே@
என் அன்பின் ஸ்வாலையே
ஓங்கச் செய்யும்.

3. பூமியில் துக்கமும்
சஞ்சலம் கஸ்தியும் வருகினும்,
இரவில் ஒளியும்
சலிப்பில் களிப்பும்
துன்பத்தில் இன்பமும்
அளித்திடும்.

4. மரிக்கும் காலத்தில்
கலக்கம் நேரிடில், சகாயரே,
என்னைக் கைதூக்கவும்
ஆறுதல் செய்யவும்
மோட்சத்தில் சேர்க்கவும்
வருவீரே.

## அருவிகள் ஆயிரமாய்

1. அருவிகள் ஆயிரமாய்
பாய்ந்து இலங்கிடச் செய்வார்
அனைத்தும் ஆள்வோர், “தாகமாய்
இருக்கிறேன்”என்றார்.

2. வெம்போரில் சாவோர் வேதனை
வியாதியஸ்தர் காய்ச்சலும்,
குருசில் கூறும் இவ்வோரே
ஓலத்தில் அடங்கும்.

3. அகோரமான நோவிலும்,
மானிடர் ஆத்துமாக்களை
வாஞ்சிக்கும் தாகம் முக்கியம்,
என் ஆன்மாவும் ஒன்றே.

# அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்

1.அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்
அற்புத நாதா உம் கரத்தில்
அனைத்தும் உமக்கே சொந்தம் என்று
அன்பரே என்னையே தத்தம் செய்தேன்

அனைத்தும் கிறிஸ்துவுக்கே - எந்தன்
அனைத்தும் அர்ப்பணமே
என் முழுத்தன்மைகள் ஆவல்களும்
அனைத்தும் கிறிஸ்துவுக்கே

2.என் எண்ணம்போல நான் அலைந்தேனே
என்னைத் தடுத்திட்டதாருமில்லை
உம் சிலுவை அன்பைச் சந்தித்தேனே
நொறுங்கி வீழ்ந்தேனே உம் பாதத்தில்

3.ஐம்புலன்கள் யாவும் அடங்கிட
ஐம்பெருங் காயங்கள் ஏற்ற நாதா
வான்புவி கிரகங்கள் ஆள்பவரே
என்னையும் ஆண்டிட நீரே வல்லோர்

4.என் வாழ்வில் இழந்த நன்மைக்கீடாய்
எஞ்சிய நாட்களில் உழைப்பேனே
நீர் தந்த ஈவு வரங்கள் யாவும்
உம் பணி சிறக்க முற்றும் தந்தேன்

# அலங்கார வாசலாலே

1. அலங்கார வாசலாலே
கோவிலுக்குள் போகிறேன்@
தெய்வவீட்டின் நன்மையாலே
ஆத்துமத்தில் பூரிப்பேன்@
இங்கே தெய்வ சமுகம்,
மெய் வெளிச்சம், பாக்கியம்

2. கர்த்தரே, உம்மண்டை வந்த
என்னண்டைக்கு வாருமேன்.
நீர் இறங்கும்போதனந்த
இன்பத்தால் மகிழுவேன்.
என்னுட இதயமும்
தெய்வ ஸ்தலமாகவும்.

3. பயத்தில் உம்மண்டை சேர,
என் ஜெபம் புகழ்ச்சியும்
நல்ல பலியாக ஏற
உமதாவியைக் கொடும்.
தேகம் ஆவி யாவையும்
சுத்தமாக்கியருளும்.

4. நல்ல நிலத்தில் விழுந்த
விதை பயிராகுமே;
நானும் அவ்வாறே மிகுந்த
கனிகளைத் தரவே,
வசனத்தைக் காக்க நீர்
ஈவளிக்கக் கடவீர்.

## அல்லேலூயா அல்லேலூயா

அல்லேலூயா அல்லேலூயா (2)
அல்லேலூயா அல்லேலூயா (2)

1. யெகோவா ஷாலோம் அல்லேலூயா
யெகோவா நிஸியே அல்லேலூயா
யெகோவா யீரே அல்லேலூயா
பரிசுத்த பிதாவே அல்லேலூயா

2. சாரோனின் ரோஜாவே அல்லேலூயா
லீலி புஷ்பமே அல்லேலூயா
அழகில் சிறந்தவரே அல்லேலூயா
இயேசு கிறிஸ்துவே அல்லேலூயா

3. தேற்றரவாளனே அல்லேலூயா
பெலத்தின் ஆவியே அல்லேலூயா
சத்திய ஆவியே அல்லேலூயா
பரிசுத்த ஆவியே அல்லேலூயா

அல்லேலூயா கர்த்தரையே

1. அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய்க் கிரியை செய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் இயேசுவைத் துதியுங்கள்

இராஜாதி இராஜனாம் இயேசுராஜன்
ப+மியில்ஆட்சிசெய்வார்
அல்லேலூயா அல்லேலூயா தேவனைத் துதியுங்கள்

2. தம்புரோடும் வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள்

3. சூரியனே, சந்திரனே தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்
அக்கினியே, கல்மழையே படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மன்தை உடைப்போரைத் துதியுங்க

4. பிள்ளைகளே, வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர்பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே, பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்

5. ஆழ்கடலே, சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலைஅலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்
தூதர்களே முன்னோடிகளே தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை இந்தியர்கள் நிரப்புவார் துதியுங்கள

அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா!

1. அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா!
இப்போது போர் முடிந்ததே
சிறந்த வெற்றி ஆயிற்றே
கெம்பீர ஸ்துதி செய்வோமே.
அல்லேலூயா!

2. கொடூர சாவை மேற்கொண்டார்
பாதாள சேனையை வென்றார்
நம் ஸ்தோத்திரப் பாட்டைப் பெறுவார்.
அல்லேலூயா!

3. இந்நாள் எழுந்த வேந்தரே
என்றைக்கும் அரசாள்வீரே
களித்து ஆர்ப்பரிப்போமே!
அல்லேலூயா!

4. எல்லாரும் உம்மைப் போற்ற நீர்
மரித்துயிர்த்திருக்கிறீர்
சாகாத ஜீவன் அருள்வீர்.
அல்லேலூயா!

## அழகாய் நிற்கும் யார் இவர்கள்?

அழகாய் நிற்கும் யார் இவர்கள்?
திரளாய் நிற்கும் யார் இவர்கள்?
சேனைத்தலைவராம் இயேசுவின் பொற்தளத்தில்
அழகாய் நிற்கும் யார் இவர்கள்?

1. ஒரு தாலந்தோ இரண்டு தாலந்தோ
ஐந்து தாலந்தோ உபயோகித்தோர்
சிறிதானதோ பெரிதானதோ
பெற்றப்பணி செய்து முடித்தோர்

2. காடு மேடு கடந்த சென்று
கர்த்தர் அன்பை பகிர்ந்தவர்கள்
உயர்வினிலும் தாழ்வினிலும்
ஊக்கமாக ஜெபித்தவர்கள்!

3. தனிமையிலும் வறுமையிலும்
லாசரு போன்று நின்றவர்கள்
யாசித்தாலும் போஷித்தாலும்
விசுவாசத்தைக் காத்தவர்கள்

4. ஒன்றே ஒன்று என்வாஞ்சையாம்
அழகாய் நிற்போர் வரிசையில் நான்
ஓர் நாளினில் நின்றிடவும்
இயேசு தேவா அருள்புரியும்

# அழைக்கிறார் அழைக்கிறார் இதோ

அழைக்கிறார் அழைக்கிறார் இதோ
நீயும் வா உந்தன் நேசர்
ஆவலாய் அழைக்கிறார் இதோ

1. பாவத்தை ஏற்றவர் பலியாய் மாண்டவர்
கல்வாரியின் மேட்டினில் கண் கொள்ளாத காட்சியே
கண்டிடும் வேண்டிடும் பாவப்பாரம் நீங்கிடும்

2. நோயை ஏற்றவர் பேயை வென்றவர்
நீதிபரன் உன்நோயை நிச்சயமாய்த் தீர்த்தாரே
நோயுற்ற உன்னையே நேயமாய் அழைக்கிறார்

3. துன்பம் சகித்தவர் தூயரடைந்தவர்
இன்னலுற்ற உன்னையே அண்ணல்
இயேசழைக்கிறார்
துன்புறும் நெஞ்சமே துரிதமாய் நீ வாராயோ

4. கல்லறை திறக்க காவலர் நடுங்க
கஸ்திகளடைந்தாரே கட்டுகளறுத்தாரே
உயிர்த்தார் ஜெயித்தார் உண்டு
மீட்புனக்குமே

5. சாந்த சொரூபனே சத்திய வாசனே
வஞ்சமற்ற வாயனே வந்தழைக்கும்
நேயனே
தஞ்சமே தன்னையே தந்துன்னை
அழைக்கிறார்

அழைத்தீரே இயேசுவே
அன்போடே என்னை அழைத்தீரே
ஆண்டவர் சேவையிலே மரிப்பேனே
ஆயத்தமானேன் தேவே

1. என் ஜனம் பாவத்தில் மாள்கிறதே
என் உயிர் தந்தேன் மன்னுயிர்க்கே
என் துயர தொனியோ இதை யார் இன்று கேட்பாரோ
என் காரியமாக யாரை அழைப்பேன்
என்றீரே வந்தேனிதோ அழைத்தீரே...

2. என்னதான் தீங்கு நான் இழைத்தேன்
என்னை விட்டோடும் என் ஜனமே
எத்தனை நன்மைகளோ உனக்காக நான்
செய்தேனல்லோ என்றே உரைத்தென்னை
ஏங்கி அழைத்தீர் எப்படி நான் மறப்பேன் அழைத்தீரே...

3. ஆதி விசுவாசம் தங்கிடவே
ஆண்டவர் அன்பு பொங்கிடவே
ஆதி அப்போஸ்தலரே உபதேசம் அளித்தனரே
நல் பூரண தியாகப் பாதை நடந்தே
நன்றியுடன் உழைப்பேன் அழைத்தீரே...

4. எந்தன் ஜெபத்தைக் கேட்டிடுமே
ஏழை ஜனத்தை மீட்டிடுமே
எந்தன் பிதா சித்தமே என் போஜனமும் அதுவே
என் பிராணனைக்கூட நேசித்திடாமல்
என்னையும் ஒப்படைத்தேன் அழைத்தீரே...

5. ஆடம்பரங்கள் மேட்டிமைகள்
ஆசாபாசங்கள் பெருகிடுதே
ஆயிரம் ஆயிரமே நரக வழி போகின்றாரே
ஆ! நீரேயல்லாமல் யாருண்டு மீட்க
ஆண்டவரே இரங்கும் அழைத்தீரே...

6. பாக்கியமான சேவையிதே
பாதம் பணிந்தே செய்திடுவேன்
ஆயுள் முடியும் வரை கிறிஸ்தேசு வருகை வரை
அன்பு மனத்தாழ்மை உண்மையும் காத்து
ஆண்டவரை அடைவேன் அழைத்தீரே...

ஆ சகோதரர் ஒன்றாய்

1. ஆ சகோதரர் ஒன்றாய்
ஏகமான சிந்தையாய்
சஞ்சரித்தல் எத்தனை
நேர்த்தியான இனிமை!

2. அது ஆரோன் சிரசில்
வார்த்துக் கீழ்வடிகையில்
கந்தம் வீசும் எண்ணையே
போன்றதாயிருக்குமே.

3. அது எர்மோன்மேலேயும்
சீயோன் மேடுகளிலும்
பெய்கிற ஆகாசத்து
நற்பனியைப்போன்றது.

4. அங்கேதான் தயாபரர்
ஆசீர்வாதம் தருவார்
அங்கிப்போதும் என்றைக்கும்
வாழ்வுண்டாகிப் பெருகும்.

5. மேய்ப்பரே நீர் கிருபை
செய்து சிதறுண்டதை
மந்தையாக்கி யாவையும்
சேர்த்தணைத்துக்கொள்ளவும்.

6. எங்கள் நெஞ்சில் சகல
நற்குணங்களும் வர
தெய்வ அன்பை அதிலே
ஊற்றும் இயேசு கிறிஸ்துவே.

7. நீரே நெஞ்சை நெஞ்சுடன்
கட்டி நேசத்தின் பலன்
நன்மை தீமை நாளிலும்
காணக் கட்டளையிடும்.

8. மூன்றொன்றாகிய பிதா
மைந்தன் ஆவியும் எல்லா
நாளும் ஒருமைப்படும்
போல் இம்மந்தை ஒன்றவும்.

## ஆகாதது எதுவுமில்லை

ஆகாதது எதுவுமில்லை – உம்மால்
ஆகாதது எதுவுமில்லை
அகிலம் அனைத்தையும்
உண்டாக்கி ஆளுகின்றீர்

1. துதி செய்யத் தொடங்கியதும் எதிரிகள் தங்களுக்குள்
வெட்டுண்டு மடியச் செய்தீர்
உம்மால் ஆகும், எல்லாம் உம்மால் ஆகும்

2. அலங்கார வாசலிலே அலங்கோல முடவனன்று
நடந்தானே இயேசு நாமத்தில்
உம்மால் ஆகும், எல்லாம் உம்மால் ஆகும்

3. கோலும் கையுமாக பிழைக்கச் சென்றார் யாக்கோபு
பெருகச் செய்தீர் பெருங்கூட்டமாய்
உம்மால் ஆகும், எல்லாம் உம்மால் ஆகும்

4. கண்ணீரைக் கண்டதாலே கல்லறைக்குச் சென்றவனை
கரம் பிடித்துத் தூக்கி விட்டீர்
உம்மால் ஆகும், எல்லாம் உம்மால் ஆகும்

5. ஈசாக்கு ஜெபித்ததாலே ரெபேக்காள் கருவுற்று
இரட்டையர்கள் பெற்றெடுத்தாளே
உம்மால் ஆகும், எல்லாம் உம்மால் ஆகும்

6. எலியாவின் வார்த்தையாலே சாறிபாத் விதவை வீட்டில்
எண்ணெய் மாவு குறையவில்லையே
உம்மால் ஆகும், எல்லாம் உம்மால் ஆகும்

7. ஜெப வீரன் தானியேலை சிங்கங்களின் குகையினிலே
சேதமின்றிக் காப்பாற்றினீர்
உம்மால் ஆகும், எல்லாம் உம்மால் ஆகும்

8. கானவ+ரில் வார்த்தை சொல்ல கப்பர்நாகூம் சிறுவனங்கே
சுகமானான் அந்நேரமே
உம்மால் ஆகும், எல்லாம் உம்மால் ஆகும்

9. தண்ணீரால் ஜாடிகளை கீழ்படிந்து நிரப்பினதால்
திராட்சை ரசம் வந்ததையா
உம்மால் ஆகும், எல்லாம் உம்மால் ஆகும்

## ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்தம் மிகவே

1. ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்தம் மிகவே
நேசா உதியும் சுத்தரே நித்தம் மகிழவே
வீசீரோ வான ஜோதி கதிரிங்கே
மேசியா எம்மணவாளனே
ஆசாரியரும் வான் ராஜனும்
ஆசீர்வதித்திடும்.

2. இம் மணமக்களோ டென்றும் என்றென்றும்
தங்கிடும்
உம்மையே கண்டும் பின் சென்றும் ஓங்கச்
செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே
இன்பத்தோ டன்பாக்கி சூட்சமே
உம்மிலே தங்கிதரிக்க
ஊக்கமருளுமே.

3. ஒற்றுமையாக்கும் இவரை ஊடாக நீர் நின்றே
பற்றோடும்மீது சார்ந்துமே பாரில் வசிக்கவே
வெற்றி பெற்றோங்கும் இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் ஏக ராஜனாய்
ஏற்றவான் ராயர் சேயர்க்கே
ஒப்பாய் ஒழுகவே.

4. பூதல ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதரித்தாளும் கர்த்தரே ஆசீர்வதித்திடும்
மாதிரளாக இவர் சந்ததியார்
வந்துதித்தும் பிரஸ்தாபிக்க
ஆ தேவ கிருபை தீர்மானம்
ஆம் போல் அருளுமேன்.

## ஆண்டவா பிரசன்னமாகி

1. ஆண்டவா பிரசன்னமாகி
ஜீவன் ஊதி உயிர்ப்பியும்
ஆசை காட்டும் தாசர்மீதில்
ஆசீர்வாதம் ஊற்றிடும்.

அருள்மாரி எங்கள் பேரில்
வருஷிக்கப்பண்ணுவீர்!
ஆசையோடு நிற்கிறோமே
ஆசீர்வாதம் ஊற்றுவீர்

2. தேவரீரின் பாதத்தண்டை
ஆவலோடே கூடினோம்
உந்தன் திவ்விய அபிஷேகம்
நம்பி நாடி அண்டினோம்

3. ஆண்டவா! மெய்பக்தர் செய்யும்
வேண்டுகோளைக் கேட்கிறீர்
அன்பின் ஸ்வாலை எங்கள் நெஞ்சில்
இன்று மூட்டி நிற்கிறீர்

4. தாசர் தேடும் அபிஷேகம்
இயேசுவே! கடாட்சியும்
பெந்தெ கொஸ்தின் திவ்விய ஈவை
தந்து ஆசீர்வதியும்.

1. God is here, and that to bless us
With the Spirit's quick'ning power;
See, the cloud already bending,
Waits to drop the grateful shower.

Let it come, O Lord, we pray Thee,
Let the shower of blessing fall;
We are waiting, we are waiting,
Oh, revive the hearts of all.

2. God is here! we feel His presence
In this consecrated place;
But we need the soul refreshing
Of His free, unbounded grace.

3. God is here! oh, then, believing,
Bring to Him our one desire,
That His love may now be kindled,
Till its flame each heart inspire.

4. Savior, grant the prayer we offer,
While in simple faith we bow,
From the windows of Thy mercy
Pour us out a blessing now.

## ஆதித் திருவார்த்தை

ஆதித் திருவார்த்தை திவ்விய அற்புதப் பாலனாகப் பிறந்தார்
ஆதந் தன் பாவத்தின் சாபத்தை தீர்த்திட
ஆதிரையோரையீ டேற்றிட

மாசற்ற ஜோதி திரித்துவத்தோர் வஸ்து
மரியாம் கன்னியிட முதித்து
மகிமையை மறந்து தமை வெறுத்து
மனுக்குமாரன் வேஷமாய்
உன்ன தகஞ்சீர் முகஞ்சீர் வாசகர்
மின்னுச்சீர் வாசகர் மேனிநிறம் எழும்
உன்னத காதலும் பொருந்தவே சர்வ
நன்மைச் சொருபனார் ரஞ்சிதனார்
தாம் தாம் தன்னரர் வன்னரர்
தீம் தீம் தீமையகற்றிட
சங்கிர்த சங்கிர்த சங்கிர்த சந்தோ
ஷமென சோபனம்பாடவே
இங்கிர்த இங்கிர்த இங்கிர்த நமது
இருதயத்திலும் எங்கும் நிறைந்திட – ஆதி

1. ஆதாம் சாதி ஏவினர் ஆபிரகாம் விசுவாசவித்து
பூதர் சிம்மாசனத்தாளுகை செய்வோர்
ஈசாய் வங்கிஷத்தானுதித்தார்

2. பூலோகப் பாவ விமோசனர் பூரண கிருபையின் வாசனர்
மேலோக இராஜாதி இராஜன் சிம்மாசனன்
மேன்மை மகிமைப் பிரதாபன் வந்தார்

3. அல்லேலூயா! சங்கீர்த்தனம் ஆனந்த கீதங்கள் பாடவே
அல்லைகள் தொல்லைகள் எல்லாம் நீங்கிட
அற்புதன் மெய்ப்பரன் தற்பரனார்

## ஆதியாகமம், யாத்திராகமம்

The Grand Old Book, the Grand Old Book
You'll find the words of comfort, wherever you may
Look; In sorrow and in pain, its promises are plain
So keep on believing in the Grand Old Book

1. Genesis, Exodus, Leviticus, Numbers, Deuteronomy,
Joshua, Judges, Ruth and Samuel, Samuel, Kings,
Kings, Chronicles, and Chronicles, Ezra, Nehemiah,
Esther, Job, and Psalms, Proverbs,
Ecclesiastes, the Song of Solomon, Isaiah, Jeremiah,
Lamentations, Ezekiel, Daniel, Hosea, Joel, Amos,
Obadiah, Jonah, Micah, Nahum, Habakkuk,
Zephaniah, Haggai, Zechariah, Malachi.

2. Matthew, Mark, Luke, John, Acts, Romans,
Corinthians, Corinthians, Galatians, Ephesians,
Philippians, Colossians, Thessalonians, and
Thessalonians; Timothy, Timothy, Titus, Philemon,
Hebrews, James, Peter, Peter, John, John, John,
Jude, Revelation.

1. ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம்,
யோசுவா, நியாயாதிபதிகள், ரூத், 1 சாமுவேல், 2 சாமுவேல், 1 இராஜாக்கள்
2 இராஜாக்கள், 1 நாளாகமம், 2 நாளாகமம், எஸ்றா, நெகேமியா, எஸ்தர், யோபு, சங்கீதம், நீதிமொழிகள்
பிரசங்கி, உன்னதப்பாட்டு, ஏசாயா, எரேமியா,
புலம்பல், எசேக்கியேல், தானியேல், ஓசியா, யோவேல், ஆமோஸ்,
ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக்,
செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா.

2. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அப்போஸ்தலர், ரோமர், 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர்,
பிலிப்பியர், கொலோசேயர், 1 தெசலோனிக்கேயர்,
2 தெசலோனிக்கேயர், 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து, பிலேமோன்,
எபிரெயர், யாக்கோபு, 1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான், 3 யோவான்,
யூதா, வெளிப்படுத்தின விசேஷம்.

## ஆத்துமமே, என் முழு உள்ளமே

ஆத்துமமே, என் முழு உள்ளமே - உன்
ஆண்டவரை தொழுதேத்து, இந்நாள்வரை
அன்பு வைத்தாதரித்த - உன்
ஆண்டவரைத் தொழுதேத்து

1. போற்றிடும் வானோர், ப+தலத்துள்ளோர்
சாற்றுதற்கரிய தன்மையுள்ள

2. தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலகமுன் தோன்றி ஒழியாத

3. தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத்தருளும், மேலான

4. வாதை, நோய், துன்பம் மாற்றி, அனந்த
ஓதரும் தலைசெய் துயிர்தந்த

5. உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்,
முற்றும் கிருபையினால் முடிசூட்டும்

6. துதி மிகுந்தேற தோத்திரி தினமே
இதயமே, உள்ளமே, என் மனமே

**ஆனந்த கீதங்கள் - பாடுங்கள் - வாழ்த்துங்கள்**

ஆனந்த கீதங்கள் - பாடுங்கள் - வாழ்த்துங்கள்
ஆண்டவர் பாலனாய் - மண்ணிலே தோன்றினார்
ஆதாம் செய் பாவங்கள் - சாபங்கள் - நீக்கவே
அன்னையின் மைந்தனாய் - தாழ்மையாய் - தோன்றினார்
- ஆனந்த கீதங்கள்

1. மேலோக தூதர்கள் பாட – பூலோக மாந்தர்கள் போற்ற
தாலேலோ கீதம் எங்கும் கேட்குதே (2)
வானாதி வானங்களே களிகூர்ந்து பாடிடுங்கள்
விண்ணில் நல்லாட்சி தோன்ற – மண்வீழ்ச்சி காண – வந்தார்
(2)
- ஆனந்த கீதங்கள்

2. சர்ப்பத்தின் தலையை நசுக்க – சந்தோஷம் எங்கும் பெருக
சாந்த குமாரன் இயேசு - தோன்றினார் (2)
சாலேமின் ராஜனிவர் - மகிழ்ந்து கண் தூங்கிடவே
ஜீவனோர் தொட்டில் இல்லை – மாடடையும் கொட்டில் உண்டு
(2)
- ஆனந்த கீதங்கள்

**ஆனந்தமாய் இன்பக் கானான்**

ஆனந்தமாய் இன்பக் கானான் ஏகிடுவேன்
தூய பிதாவின் முகம் தரிசிப்பேன்
நாளுக்கு நாள் அற்புதமாய் என்னைத் தாங்கிடும்
நாதன் இயேசு என்னோடிருப்பார்

1. சேற்றினின்றென்னைத் தூக்கியெடுத்து
மாற்றி உள்ளம் புதிதாக்கினாரே
கல்லான என் உள்ளம் உருக்கின கல்வாரியை
கண்டு நன்றியுடன் பாடிடுவேன்

2. வாலிப நாளில் இயேசுவைக் கண்டேன்
வாஞ்சையுடன் என்னைத்தேடி வந்தார்
எதற்குமே உதவா என்னையும் கண்டெடுத்தார்
இயேசுவின் அன்பை நான் என் சொல்லுவேன்?

3. கர்த்தரின் சித்தம் செய்திட நித்தம்
தத்தம் செய்தே என்னை அர்ப்பணித்தேன்
இயேசு அல்லால் ஆசை இப்ப+வில் வேறே இல்லை
என்றும் எனக்கவர் ஆதரவே

4. உம்மைப் பின் சென்று ஊழியம் செய்து
உம் பாதம் சேர்த்திட வாஞ்சிக்கிறேன்
தாரும் தேவா ஏழைக்கு மாறாத உம் கிருபை
கண்பாரும் என்றும் நான் உம் அடிமை

5. தேற்றிடுதே உம் வாக்குகள் என்னை
ஆற்றிடுதே உந்தன் சமூகமே
பெலத்தின் மேல் பெலனடைந்து நான் சேருவேன்
பேரின்ப சீயோனில் வாழ்ந்திடுவேன

## ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே

1. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
அருமையாய் இயேசு நமக்களித்த
அளவில்லாக் கிருபை பெரிதல்லவோ
அனுதின ஜீவியத்தில்

ஆத்துமமே என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்தரி
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெரு வெள்ளமே - அல்லேலூயா
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெரு வெள்ளமே

2. கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணி போல் என்னைக் காத்தாரே
கவலைகள் போக்கி கண்ணீர் துடைத்தார்
கருத்துடன் பாடிடுவோம்

3. படகிலே படத்து உறங்கினாலும்
கடும் புயல் அடித்து கவிழ்ந்தாலும்
காற்றையும் கடலையும் அமர்த்தி எம்மைக்
காப்பாரே அல்லேலூயா

4. பரிசுத்தவான்களின் பாடுகளெல்லாம்
அதி சீக்கிரமாய் முடிகிறதே
விழிப்புடன் கூடி தரித்திருப்போம்
விரைந்தவர் வந்திடுவார்

## ஆனந்தமே! ஜெயா! ஜெயா!

ஆனந்தமே! ஜெயா! ஜெயா!
அகமகிழ்ந்தனைவரும் பாடிடுவோம்
ஞானரட்சகர் நாதர் நமை - இந்த
நாள்வரை ஞாலமதினில் காத்தார் - புகழ்

1. சங்கு கனம் வளர் செங்கோலரசிவை
தளராதுள கிறிஸ்தானவராம்
எங்கள் ரட்சகரேசு நமை – வெகு
இரக்கங் கிருபையுடன் ரட்சித்ததால் - புகழ்

2. முந்து வருட மதனில் மனுடரில் வெகு
மோசகஸ்திகள் தனிலேயுழல
தந்து நமக்குயிருடையுணவும் - வெகு
தயவுடன் யேசு தற்காத்ததினால் - புகழ்

3. பஞ்சம்பசிக்கும் பட்டயத்துக்கும் வெகு கொடும்
பாழ் கொள்ளைநோய் விஷதோஷத்திற்கும்
தஞ்சரட்சகர் தவிர்த்து நமை - இத்
தரைதனில் குறைதணித் தாற்றியதால் - புகழ்

**ஆமென், அல்லேலூயா! மகத்துவத் தம்பராபரா
ஆமென், அல்லேலூயா! ஜெயம்! ஜெயம்! அனந்த
கோடினரா**

**1. வெற்றிகொண் டார்ப்பரித்து - கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து, - முறித்து
பத்ராசனக் கிறிஸ்து - மரித்து
பாடுபட்டுத்தரித்து, முடித்தார்**

**2. சாவின் கூர் ஒடிந்து, - மடிந்து,
தடுப்புச் சுவர் இடிந்து, - விழுந்து,
ஜீவனே விடிந்து, - தேவாலயத்
திரை ரண்டாய்க் கிழிந்து ஒழிந்தது**

**3. வேதம் நிறைவேற்றி, - மெய் தோற்றி,
மீட்டுக் கரையேற்றி, - பொய் மாற்றி,
பாவிகளைத் தேற்றி, - கொண்டாற்றி,
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார்**

## ஆயிரம் ஆயிரம் பாடல்களை

1. ஆயிரம் ஆயிரம் பாடல்களை ஆவியில் மகிழ்ந்தே பாடுங்களே!
யாவரும் தேன் மொழிப் பாடல்களால் இயேசுவைப் பாடிடவாருங்களே!

அல்லேலூயா! அல்லேலூயா! என்றெல்லாரும் பாடிடுவோம்!
அல்லலில்லை! அல்லலில்லை! ஆனந்தமாய் பாடிடுவோம்!

2. புதிய புதிய பாடல்களை புனைந்தே பண்களும் சேருங்களே!
துதிகள் நிறையும் கானங்களால் தொழுதே இறைவனைக் காணுங்களே!

3. நெஞ்சின் நாவின் நாதங்களே நன்றி கூறும் கீதங்களாம்!
மிஞ்சும் ஓசைத் தாளங்களால் மேலும் பரவசம் நாடுங்களே!

4. எந்த நாளும் காலங்களும் இறைவனைப் போற்றும் நேரங்களே!
சிந்தை குளிர்ந்தே ஆண்டுகளாய் சீயோனில் கீதம் பாடுங்களே

## ஆராதனை ஆராதனை துதி

ஆராதனை ஆராதனை துதி
ஆராதனை ஆராதனை -(2)
காலயிலும் மாலையிலும்
ஆராதனை அப்பாவுக்கே

1. தூய ஆவியே உமக்கு ஆராதனை
துணையாளரே உமக்கு ஆராதனை -(2)
வான பிதாவே உமக்கு ஆராதனை
வழிகாட்டியே உமக்கு ஆராதனை

2. ஜீவ பலியே உமக்கு ஆராதனை
ஜீவ தண்ணிரே உமக்கு ஆராதனை -(2)
மேகஸ்தம்பமே உமக்கு ஆராதனை
மேசியாவே உமக்கு ஆராதனை -(2)

## ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்

ஆராதிப்பேன் நான் ஆராதிப்பேன்
ஆண்டவர் இயேசுவை ஆராதிப்பேன்

1. வல்லவரே உம்மை ஆராதிப்பேன்
நல்லவரே உம்மை ஆராதிப்பேன்

2. பரிசுத்த உள்ளத்தோடு ஆராதிப்பேன்
பணிந்து குனிந்து ஆராதிப்பேன்

3. ஆவியிலே உம்மை ஆராதிப்பேன்
உண்மையிலே உம்மை ஆராதிப்பேன்

4. தூதர்களோடு ஆராதிப்பேன்
ஸ்தோத்திர பலியோடு ஆராதிப்பேன்

5. காண்பவரை நான் ஆராதிப்பேன்
காப்பவரை நான் ஆராதிப்பேன்

6. வெண்ணாடை அணிந்து ஆராதிப்பேன்
குருத்தோலை ஏந்தி ஆராதிப்பேன்

## ஆரிரோ பாலகா

ஆரிரோ பாலகா
ஆரிரோ நாயகா
ஆரிரோ கண்மணி
என் இசை கேட்டு நீ தூங்காயோ

1. விண்ணில் தூதர் போற்ற மண்ணில் ஏழையாக
இயேசு ராஜன் பிறந்தார்
ஆதி வேதம் வார்த்தை ஜோதி உண்மையாக
பெத்லகேமில் பிறந்தார்
- ஆரிரோ

2. மாட்டுத் தொழுவினில் இயேசு பாலகனை
மேய்ப்பர் தண்டு பணிந்தார்
வேந்தர் மூவர் வந்து போற்றி புகழ் தந்து
தேவ பாதம் பணிந்தார்
- ஆரிரோ

3. பாவம் சாபம் எல்லாம் போக்க வந்த தேவன்
பாரில் வந்து பிறந்தார்
பாசமுள்ள தேவன் வல்லமையின் ராஜன்
மீட்க தன்னைக் கொடுத்தார்
- ஆரிரோ

## ஆரிவர் ஆராரோ கண்மணி அன்பே என் ராஜாவே

ஆரிவர் ஆராரோ கண்மணி அன்பே என் ராஜாவே (2)
பூபோல மேனி பொன் போல மின்ன
மாமன்னன் தூங்கட்டுமே (2)

1. உன்னையும் என்னையும் உருவாக்கியே
உலகாளும் இராஜா இவர்
சின்னக் குடிலில் கண் தூங்குகிறார்
என்ன இது விந்தையே (2)
- ஆரிவர்

2. வானதூதர் சொல் கேட்டு மேய்ப்பர்களும்
வந்தார் விரைந்தேகியே
உன்னத பாலன் புகழ் பாடியே
சென்றார் மகிழ்ந்தாடியே (2)
- ஆரிவர்

## ஆவியானவரே அன்பின் ஆவியானவரே

ஆவியானவரே அன்பின் ஆவியானவரே
இப்போ வாரும் இறங்கி வாரும்
எங்கள் மத்தியிலே

1. உளையான சேற்றினின்று தூக்கி எடுத்தவரே
பாவம் கழுவி தூய்மையாக்கும் இந்த வேளையிலே

2. பத்மூ தீவினிலே பக்தனைத் தேற்றினீரே
என்னையும் தேற்றி ஆற்ற வாரும் இந்த வேளையிலே

3. சீனாய் மலையினிலே இறங்கி வந்தவரே
ஆத்ம தாகம் தீர்க்க வாரும் இந்த வேளையிலே

4. நேசரின் மார்பினிலே இனிதாய் சாய்ந்திடவே
ஏக்க முற்றேன் விரும்பி வந்தேன் உந்தன் பாதத்திலே

5. ஆவியின் வரங்களினால் என்னையும் நிரப்பிடுமே
எழுந்து ஜொலிக்க எண்ணெய் ஊற்றும் இந்த
வேளையிலே

## ஆவியை அருளுமே, சுவாமீ

ஆவியை அருளுமே, சுவாமீ, - எனக்
காயுர் கொடுத்த வானத்தினரசே!

1.நற்கனி தேடிவருங் காலங்க ளல்லவோ?
நானொரு கனியற்ற பாழ்மர மல்லவோ?
முற்கனி முகங்காணா வெம்பயி ரல்லவோ?
முழுநெஞ்சம் விளைவற்ற உவர்நில மல்லவோ? – ஆவியை

2.பாவிக்கு ஆவியின் கனியெனுஞ் சிநேகம்,
பரம சந்தோஷம், நீடிய சாந்தம்,
தேவ சமாதானம், நற்குணம், தயவு,
திட விசுவாசம் சிறிதெனுமில்லை – ஆவியை

3.தீபத்துக் கெண்ணெயைச் சீக்கிரம் ஊற்றும்@
திரி யவியாமலே தீண்டியே யேற்றும்,
பாவ அசூசங்கள் விலக்கியே மாற்றும்,
பரிசுத்தவரந் தந்தென் குறைகளைத் தீரும் – ஆவியை

**ஆ, அடைக்கலமே உமதடிமை நானே**

ஆ, அடைக்கலமே உமதடிமை நானே
ஆர்ப்பரிப்பேனே அகமகிழ்ந்தே
கர்த்தர் நீர் செய்த நன்மைகளையே
நித்தம் நித்தம் நான் நினைப்பேனே

1. அளவற்ற அன்பினால் அணைப்பவரே
எண்ணற்ற நன்மையால் நிறைப்பவரே
மாசில்லாத நேசரே மகிமைப் பிரதாபா
பாசத்தால் உம் பாதம் பற்றிடுவேனே

2. கர்த்தரே உம் செய்கைகள் பெரியவைகளே
சுத்தரே உம் செயல்கள் மகத்துவமானதே
நித்தியரே உம் நியாயங்கள் என்றும் நிற்குமே
பக்தரின் பேரின்ப பாக்கியமிதே

3. என்னை என்றும் போதித்து நடத்துபவரே
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவரே
நடக்கும் வழிதனைக் காட்டுபவரே
நம்பி வந்தோனைக் கிருபை சூழ்ந்துக்கொள்ளுதே

4. கரம் பற்றி நடத்தும் கர்த்தர் நீரல்லோ
கூப்பிட்ட என்னை குணமாக்கினீரல்லோ
குழியில் விழாதபடி காத்துக்கொண்டீரே
அழுகையைக் களிப்பாக மாற்றி விட்டீரே

5. பாவங்களைப் பாராதென்னைப் பற்றிக் கொண்டீரே
சாபங்களை நீக்கி சுத்த உள்ளம் தந்தீரே
இரட்சண்யத்தின் சந்தோஷத்தை திரும்பத் தந்தீரே
உற்சாக ஆவி என்னைத் தாங்கச் செய்தீரே

# ஆ, என்னில் நூறு வாயும் நாவும்

1. ஆ, என்னில் நூறு வாயும் நாவும்
இருந்தால், கர்த்தர் எனக்கு
அன்பாகச் செய்த நன்மை யாவும்,
அவைகளால் பிரசங்கித்து,
துதிகளோடே சொல்லுவென்,
ஓயா தொனியாய்ப் பாடுவேன்.

2. என் சத்தம் வானமளவாக
போய் எட்டவேண்டும் என்கிறேன்;
கர்த்தாவைப் போற்ற வாஞ்சையாக
என் ரத்தம் பொங்க ஆசிப்பேன்;
ஒவ்வொரு மூச்சும் நாடியும்
துதியும் பாட்டுமாகவும்.

3. ஆ, என்னில் சோம்பலாயிராதே,
என் உள்ளமே நன்றாய் விழி;
கர்த்தாவை நோக்கி ஓய்வில்லாதே
கருத்துடன் ஸ்தோத்திரி;
ஸ்தோத்திரி என் ஆவியே,
ஸ்தோத்திரி, என் தேகமே.

## இகமனுதேவா நமஸ்கரிப்பேன்

இகமனுதேவா நமஸ்கரிப்பேன்
இயேசு தயாளா சரணடைந்தேன்

1. மாசணுகாத திரு உருவே
மகிமையைத் துறந்த எம்பரம் பொருளே
தீமைக் கண்டேன் என் இதயத்திலே
தாழ் பணிந்தேன் உம் பாதத்திலே
குருபர நாதா தேடி வந்தீர்
குறை நீக்க மனுவாய் அவதரித்தீர்

2. ஞானியர் போற்றிய தூயவனே
மேய்ப்பர்கள் வணங்கின மறையவனே
ஆர்ப்பரித்து உம் புகழ் உரைப்பேன்
ஆனந்தமாய் நின் பணிபுரிவேன்
அகிலமே உமது அடிதொடர
ஆணை பெற்றேன் நான் முன் நடக்க

3. காலத்தால் அழிந்திடா காவலனே
கன்னியின் மைந்தனாய் வந்தவனே
மாமன்னனாய் வருவீரே
முகமுகமாய் காண்பேனோ
திரிமுதல் தேவா காப்பீரே
தினம் எமை கழுவி மீட்பீரே

# இடுக்கமான வாசல் வழியே

இடுக்கமான வாசல் வழியே
வருந்தி நுழைய முயன்றிடுவோம்
சிலுவை சுமந்து இயேசுவின் பின்
சிரித்த முகமாய் சென்றிடுவோம்

1. வாழ்வுக்கு செல்லும்
வாசல் இடுக்கமானது
பரலோகம் செல்லும்
பாதை குறுகலானது - சிலுவை

2. நாம் காணும் இந்த உலகம்
ஒருநாள் மறைந்திடும்
புது வானம் பூமி நோக்கி
பயணம் செய்கின்றோம்

3. இவ்வாழ்வின் துன்பம் எல்லாம்
சிலகாலம் தான் நீடிக்கும்
இணையில்லாத மகிமை
இனிமேல் நமக்குண்டு

4. அழிவுக்கு செல்லும் வாயில்
மிகவும் அகன்றது
பாதாளம் செல்லும் பாதை
மிகவும் விரிந்தது

## இதோ மனுஷரின் மத்தியில்

இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி தேவனே
வாசஞ்செய்கிறாரே

1. தேவன் தாபரிக்கும் ஸ்தலமே
தம் ஜனத்தாரின் மத்தியிலாம்
தேவன் தாம் அவர்கள் தேவனாயிருந்தே
கண்ணீர் யாவையும் துடைக்கிறாரே

2. தேவ ஆலயமும் அவரே
தூய ஒளி விளக்கும் அவரே
ஜீவனாலே தம் ஜனங்களின் தாகந்தீர்க்கும்
சுத்த ஜீவநதியும் அவரே

3. மகிமை நிறை ப+ரணமே
மகா பரிசுத்த ஸ்தலமதுவே
என்றும் துதியுடனே அதன் வாசல் உள்ளே
எங்கள் பாதங்கள் நிற்கிறதே

4. சீயோனே உன் வாசல்களை
ஜீவ தேவனே நேசிக்கிறார்
சீர் மிகுந்திடுமிச் சுவிசேஷந்தனை
கூறி உயர்த்திடுவோம் என்றுமே

5. முன்னோடியாம் இயேசு பரன்
மூலைக்கல்லாகி சீயோனிலே
வாசஞ் செய்திடும் உன்னத சிகரமதை
வாஞ்சையோடு நாம் நாடிடுவோம

இந்த அருள் காலத்தில்

1. இந்த அருள் காலத்தில்
கர்த்தரே உம் பாதத்தில்
பணிவோம் முழுந்தாளில்.

2. தீர்ப்பு நாள் வருமுன்னே
எங்கள் பாவம் உணர்ந்தே
கண்ணீர் சிந்த ஏவுமே.

3. மோட்ச வாசல் இயேசுவே
பூட்டுமுன் எம் பேரிலே
தூய ஆவி ஊற்றுமே.

4. உந்தன் ரத்த வேர்வையால்
செய்த மா மன்றாட்டினால்
சாகச் சம்மதித்ததால்

5. சீயோன் நகர்க்காய்க் கண்ணீர்
விட்டதாலும் தேவரீர்
எங்கள்மேல் இரங்குவீர்.

6. நாங்கள் உம்மைக் காணவே
அருள் காலம் போமுன்னே
தஞ்சம் ஈயும் இயேசுவே.

Lord, in this Thy mercy's day
Ere for us it pass away
On our knees we fall and pray.

Holy Jesus, grant us tears
Fill us with heart searching fears
Ere the hour of doom appears.

Lord, on us Thy Spirit pour
Kneeling lowly at Thy door
Ere it close forevermore.

By Thy night of agony
By Thy supplicating cry
By Thy willingness to die.

By Thy tears of bitter woe
For Jerusalem below
Let us not Thy peace forego.

Judge and Savior of our race
Grant us, when we see Thy face
With Thy ransomed ones a place.

# இந்நாள்வரைக்கும் கர்த்தரே

1. இந்நாள்வரைக்கும் கர்த்தரே
என்னைத் தற்காத்து வந்தீரே
உமக்குத் துதி ஸ்தோத்திரம்
செய்கின்றதே என் ஆத்துமம்

2. ராஜாக்களுக்கு ராஜாவே
உமது செட்டைகளிலே
என்னை அணைத்துச் சேர்த்திடும்
இரக்கமாகக் காத்திடும்.

3. கர்த்தாவே, இயேசு மூலமாய்
உம்மோடு சமாதானமாய்
அமர்ந்து தூங்கும்படிக்கும்,
நான் செய்த பாவம் மன்னியும்.

4. நான் புதுப் பலத்துடனே
எழுந்து உம்மைப் போற்றவே,
அயர்ந்த துயில் அருளும்;
என் ஆவியை நீர் தேற்றிடும்.

5. நான் தூக்கமற்றிருக்கையில்,
அசுத்த எண்ணம் மனதில்
அகற்றி, திவ்விய சிந்தையே
எழுப்பிவிடும், கர்த்தரே.

6. பிதாவே, என்றும் எனது
அடைக்கலம் நீர் உமது
முகத்தைக் காணும் காட்சியே
நித்தியானந்த முத்தியே

7. அருளின் ஊற்றாம் ஸ்வாமியை
பிதா குமாரன் ஆவியை
துதியும், வான சேனையே,
துதியும், மாந்தர் கூட்டமே.

**இன்று கண்ட எகிப்தியனை**

இன்று கண்ட எகிப்தியனை
என்றுமே இனி காண்பதில்லை (2)
இஸ்ரவேலைக் காக்கும் தேவன்
உறங்கவில்லை தூங்கவில்லை

1. கசந்த மாரா மதுரமாகும்
வசந்தமாய் உன் வாழ்க்கை மாறும் (2)
கண்ணீரோடு நீ விதைத்தால்
கெம்பீரமாய் அறுத்திடுவாய் (2)

2. தண்ணீரை நீ கடக்கும்போது
கண்ணீரை அவர் துடைத்திடுவார் (2)
வெள்ளம் போல சத்துரு வந்தால்
ஆவியில் கொடியேற்றிடுவார் (2)

# இன்று கிறிஸ்து எழுந்தார்

1.இன்று கிறிஸ்து எழுந்தார்,
அல்லேலூயா!
இன்று வெற்றி சிறந்தார்,
அல்லேலூயா!
சிலுவை சுமந்தவர்,
அல்லேலூயா!
மோட்சத்தைத் திறந்தவர்,
அல்லேலூயா!

2.ஸ்தோத்திரப் பாட்டுப் பாடுவோம்,
அல்லேலூயா!
விண்ணின் வேந்தைப் போற்றுவோம்,
அல்லேலூயா!
அவர் தாழ்ந்துயர்ந்தாரே,
அல்லேலூயா!
மாந்தர் மீட்பர் ஆனாரே,
அல்லேலூயா!

3.பாடநுபவித்தவர்,
அல்லேலூயா!
ரட்சிப்புக்குக் காரணர்,
அல்லேலூயா!
வானில் இப்போதாள்கிறார்,
அல்லேலூயா!
தூதர் பாட்டைக் கேட்கிறார்,
அல்லேலூயா!

## இப்பூவினில் நம் இயேசுவே

இப்பூவினில் நம் இயேசுவே - தேடியே
மீட்க வந்தார் (2)
விண்ணோர்களும் பண்பாடவே (2)
விந்தையாய் இயேசுவே வந்துதித்தார் (2)

1. அருணோதயம் பூவில் தோன்றினதே
பாதை காட்டிடவே (2)
தாவீதின் வேரில் தோன்றினவர்
தேவ பாலன் இவர் (2)
- இப்பூவினில்

2. ஆலோசனை கர்த்தர் நாமமிதே
வல்ல தேவன் இவர் (2)
கர்த்தத்துவம் அவர் தோளில் உண்டே
பாதம் போற்றிடுவோம் (2)
- இப்பூவினில்

3. அல்லேலூயா நாம் பாடுவோம்
மீட்பர் பாரில் வந்தார் (2)
இம்மானுவேலரை நம் தேவனை
வாழ்த்தி போற்றிடுவோம் (2)
- இப்பூவினில்

## இப்போது, நேச நாதா, தலை சாய்த்து

1. இப்போது, நேச நாதா, தலை சாய்த்து
தெளிந்த அறிவோடு ஆவியை
ஒப்புவித்தீர் பிதாவின் கரமீது:
பொங்க நெஞ்சம் மூச்சற்றொடுங்கிற்றே

2. சாமட்டும் சாந்தமாய் என் துக்கபாரம்
நீர் தாங்கி மனதார மரித்தீர்:
உம் சாவில் பெலன் ஊற்றே, ஆவியையும்
அமைதலாய்த் தந்தைக்குக்கொப்புவித்தீர்

3. நல் மீட்பரே, சாவிருள் என்னை சூழ்ந்து
மரண அவஸ்தை உண்டாகையில்,
தொய்யும் ஆவியில் சமாதானம் ஈந்து
ஒளி உண்டாக்கும் அச்சராவினில்.

## இயேசு இரட்சகரின் பிறந்த நாள் இதுவே

இயேசு இரட்சகரின் பிறந்த நாள் இதுவே
நீசமனிதரின் மீட்பின் வழி இவரே

1. வாழ்க கன்னிமரியாளே
ஸ்திரிகளே நீ பாக்கியவதி (2)
பரிசுத்த ஆவியின் பெலத்தாலே
மகிமையின் மைந்தன் உதித்தாரே (2)
- இயேசு

2. பெத்லகேம் என்னும் சிற்றூரே
ஆயிரங்களில் நீ சிறியதல்ல (2)
இஸ்ரவேலின் பிரபுதானே
உன்னிடம் இருந்து வந்தாரே (2)
- இயேசு

3. பரலோக வாசல் திறந்ததுவே
தூதர் சேனை பாடினரே (2)
மறுமையின் மகிமையில் நாங்களுமே
அவருடன் சேர்ந்து போற்றுவோமே (2)
- இயேசு

## இயேசு இராஜனின் திருவடிக்கு

இயேசு இராஜனின் திருவடிக்கு சரணம், சரணம், சரணம்!
ஆத்ம நாதரின் மலரடிக்கு சரணம், சரணம், சரணம்!

1. பார்போற்றும் தூய தூய தேவனே
மெய்ராஜாவே எங்கள் நாதனே
பயம் நீக்கும் துணையாவும் ஆனீரே
சரணம்! சரணம்! சரணம்!

2. இளைப்பாறுதல் தரும் வேந்தனே
இன்னல் துன்பம் நீக்கும் அருள் நாதரே
ஏழை என்னை ஆற்றி தேற்றிக் காப்பீரே
சரணம்! சரணம்! சரணம்!

3. பெலவீனம் யாவும் போக்கும் வல்லோரே
பெலனீந்து வலக்கரம் பிடிப்பீரே
ஆவி ஆத்மா சரீரத்தைப் படைக்கின்றேன்
சரணம்! சரணம்! சரணம்!

**இயேசு என்னும் நாமத்தில்**

இயேசு என்னும் நாமத்தில் (2)
ஜெயம் நமக்குண்டு
இயேசு என்னும் நாமத்தில் (2)
பேய்கள் பறந்தோடும்
இயேசு நாமத்தில் நிற்கும்போது
யார் நமக்கெதிரே நிற்பார்கள்
இயேசு இயேசு நாமத்திலே
ஜெயம் நமக்குண்டு

In the name of Jesus (2)
We have the victory
In the name of Jesus (2)
Demons will have to flee
When we stand on the name of Jesus
Tell me who can stand before
In the name of Jesus, Jesus
We have the victory

**இயேசு என்ற திரு நாமத்திற்கு**

இயேசு என்ற திரு நாமத்திற்கு
எப்போதுமே மிக ஸ்தோத்திரம்

1. வானிலும் ப+விலும் மேலான நாமம்
வல்லமையுள்ள நாமமது
தூயர் சொல்லித் துதித்திடும் நாமமது

2. வேதாளம் பாதாளம் யாவையும் ஜெயித்த
வீரமுள்ள திருநாமமது
நாமும் வென்றிடுவோமிந்த நாமத்திலே

3. பாவத்திலே மாளும் பாவியை மீட்க
பாரினில் வந்த மெய் நாமமது
பரலோகத்தில் சேர்க்கும் நாமமது

4. உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது
உலகெங்கும் ஜொலித்திடும் நாமமது

5. சஞ்சலம் வருத்தம் சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது
தடை முற்றுமகற்றிடும் நாமமது

## இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்

இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்
விசுவாசத்தில் முன் நடப்போம்
இனி எல்லோருமே அவர் பணிக்கெனவே
ஒன்றாய் எந்நாளும் உழைத்திடுவோம்

நம் இயேசு இராஜாவே, இதோ வேகம் வாராரே
அதிவேகமாய் செயல்படுவோம்

1. மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம்
இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்
அதி உற்சாகமாய் அதி சீக்கிரமாய்
இராஜ பாதையைச் செம்மையாக்குவோம்
நம் இயேசு இராஜாவே, இதோ வேகம் வாராரே
அதிவேகமாய் செயல்படுவோம்

2. சாத்தானின் சதிகளைத் தகர்த்திடுவோம்
இனி இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்
இந்தப் பார்முழுதும் இயேசு நாமத்தையே
எல்லா ஊரிலும் எடுத்துரைப்போம்
நம் இயேசு இராஜாவே, இதோ வேகம் வாராரே
அதிவேகமாய் செயல்படுவோம்

3. ஆவி, ஆத்துமா, தேகம் அவர் பணிக்கே
இனி நான் அல்ல அவரே எல்லாம்
என முடிவு செய்தோம் அதில் நிலைத்திருப்போம்
அவர் நாளினில் மகிழ்ந்திடுவோம்
நம் இயேசு இராஜாவே, இதோ வேகம் வாராரே
அதிவேகமாய் செயல்படுவோம்

# இயேசு திருநாமம் ஈய உயர் மகிமையில் ஜெய மகிழ்

இயேசு திருநாமம் ஈய உயர் மகிமையில் ஜெய மகிழ்
இயேசு திருநாமம் எனக்குயிரே
ஆசீர்வாதம் தாரும் ஆசீர்வாதம் தான்
ஆசீர்வாதம் பேசுருபாதம் மேசியா நீர் தான்
- இயேசு ... எனக்குயிரே

1. இந்த சபையோரும் உன் செயலாம்
இதை நன்றுணர்ந்தே – புகழ்
நெஞ்சமே கொண்டாடி என்றும் போற்றவே (2)
மிஞ்சும் வாக்கும் செய்கை
ஒன்றிதே உம் மீட்பை
சென்றுலகெங்கும் தந்தையுகந்தை
நன்று காட்டவே - இயேசு ... எனக்குயிரே

2. விண்ணுலகோர் பாட
மண்ணுலகோர் அடிபணிந்திட
பாதளத்துள்ளோரும் பயந்தோடிட (2)
எந்தன் நடு வா வா
உந்தன் அருள் தா தா
வந்தனம் சந்ததம் என்றுமே தந்தனம்
உந்தன் அடிமை நான் - இயேசு ... எனக்குயிரே

## இயேசு பாலகா என் ஜீவகால மெல்லாம்

இயேசு பாலகா என்
ஜீவகால மெல்லாம்
உம் பிறந்க நாளை
வாழ்த்தி பாடுவேன் (2)

1. விண்ணை விட்டு மண்ணுலகம் வந்ததால்
என்னை மீட்க ஏழைக்கோலம் கொண்டதால்
ஜீவ நாயகா என் அருமை ரட்சகா
பூவுலகை மீட்க வந்த இயேசு பாலகா - இயேசு

2. எந்தன் உள்ளம் இன்பத்தால் நிறைந்தாலும்
துன்பம் என்னை சூழ்ந்தலைக்கழித்தாலும்
ஜீவ நாயகா என் அருமை ரட்சகா
பூவுலகை மீட்க வந்த இயேசு பாலகா - இயேசு

## இயேசு ராஜா முன்னே செல்கிறார்

இயேசு ராஜா முன்னே செல்கிறார்
ஓசன்னா கீதம் பாடுவோம்
வேகம் சென்றிடுவோம்
ஓசன்னா ஜெயமே (2)
ஓசன்னா ஜெயம் நமக்கே

1.அல்லேலூயா துதி மகிமை – என்றும்
அல்லேலூயா துதி மகிமை
இயேசு ராஜா எங்கள் ராஜா (2)
என்றென்றும் போற்றிடுவோம்
ஓசன்னா ஜெயமே (2)
ஓசன்னா ஜெயம் நமக்கே

2.துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும்
தொல்லை கஷ்டங்கள் தேடி வந்தாலும்
பயமுமில்லை கலக்கமில்லை
கர்த்தர் நம்முடனே
ஓசன்னா ஜெயமே (2)
ஓசன்னா ஜெயம் நமக்கே

3.யோர்தானின் வெள்ளம் வந்தாலும்
எரிகோ கோட்டை எதிர் நின்றாலும்
பயமுமில்லை கலக்கமில்லை
மீட்பர் நம்முடனே
ஓசன்னா ஜெயமே (2)
ஓசன்னா ஜெயம் நமக்கே

## இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு

இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு
அன்பு நிறைந்திடும் இடம் உண்டு

1. உயர்வுமில்லை அங்கு தாழ்வுமில்லை
ஏழை இல்லை பணக்காரன் இல்லை

இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் ஆண்டிடுவார்

2. பாவமில்லை அங்கு சாபமில்லை
வியாதியில்லை கடும் பசியுமில்லை

இராஜாதி இராஜா இயேசு
என்றென்றும் காத்திடுவார்

3. இன்பம் உண்டு சமாதானம் உண்டு
வெற்றி உண்டு துதிப்பாடல் உண்டு

**இயேசுவின் நாமமே திருநாமம்**

இயேசுவின் நாமமே திருநாமம் - முழு
இருதயத்தால் தொழுவோம் நாமும்.

1. காசினியில் அதனுக் கிணையில்லையே - விசு
வாசித்த பேர்களுக்குக் குறையில்லையே.

2. இத்தரையில் மெத்தவதி சயநாமம் - அதை
நித்தமும் தொழுபவர்க்கு ஜெயநாமம்.

3. உத்தம மகிமைப் பிரசித்த நாமம் - இது
சத்திய விதேய மனமொத்தநாமம்.

4. விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும்நாமம் - நமை
அண்டிடும்பேய் பயந்தோடு தேவநாமம்.

5. பட்சமுள்ள ரட்சைசெயு முபகாரி - பெரும்
பாவப்பிணிகள் நீக்கும் பரிகாரி.

**இயேசுவின் நாமம் இனிதான நாமம்**

இயேசுவின் நாமம் இனிதான நாமம்
இணையில்லா நாமம், இன்ப நாமம்

1. பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோஷம் பக்தருக்களிக்கும்

2. பரிமளத்தைலமாம் இயேசுவின் நாமம்
பார் எங்கும் வாசனை வீசுடும் நாமம்

3. வானிலும் ப+விலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம்

4. நேற்றும் இன்றும் என்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம்

5. முழங்கால் யாவும் முடக்கிடும் நாமம்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம்

6. சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம்
சாபப் பிசாசைத் துரத்திடும் நாமம்

## இயேசுவின் நாமம் எல்லாவற்றிற்கும்

இயேசுவின் நாமம் எல்லாவற்றிற்கும்
மேலான நாமம் இயேசுவின் நாமம்
எல்லாவற்றிற்கும் மேலான நாம்
இயேசுவின் நாமம் இயேசுவின் நாமம்

1. துரைத்தனத்திற்கும் அதிகாரத்திற்கும்
பேய்பிசாசின் தந்திரத்திற்கும்
எல்லாவற்றிற்கும் மேலான நாமம்
இயேசுவின் நாமம் இயேசுவின் நாமம்

2. வல்லமைக்கும் கர்த்தத்துவத்திற்கும்
இம்மையிலும் மறுமையிலும்
எல்லாவற்றிற்கும் மேலான நாமம்
இயேசுவின் நாமம் இயேசுவின் நாமம்

3. ஸ்தோத்தரிப்பீர் ஸ்தோத்தரிப்பீர்
விசவாசிப்போர் ஸ்தோத்தரிப்பீர்
எல்லாவற்றிற்கும் மேலான நாமம்
இயேசுவின் நாமம் இயேசுவின் நாமம

## இயேசுவின் பின்னே போகத்துணிந்தேன்

இயேசுவின் பின்னே
போகத்துணிந்தேன் (3)
பின்னோக்கேன் நான் (2)
உலகம் என் பின்னே சிலுவை
என் முன்னே (3)

I have decided to follow Jesus
No turning back
The world behind me
The cross before me
No turning back

## இயேசுவின் ரத்தம் வல்லமையுள்ளது

1. இயேசுவின் ரத்தம் வல்லமையுள்ளது
இயேசுவின் ரத்தம் மேன்மையுள்ளது
இயேசுவின் ரத்தம் பரிசுத்தமானது
விலையேரப்பெற்றது (2)

இயேசுவின் ரத்தம் ஜெயம் ஜெயம் (3)
நம் இயேசுவின் ரத்தம் ஜெயம் ஜெயம் (2)

2. பாவத்தை போக்கிடும் இயேசுவின் ரத்தம்
சாபத்தை நீக்கிடும் இயேசுவின் ரத்தம் (2)
வியாதியை நீக்கிடும் இயேசுவின் ரத்தம்
விடுதலை தந்திடும் இயேசுவின் ரத்தம் (2)

3. பாதாளம் வென்றிடும் இயேசுவின் ரத்தம்
பாதுகாத்திடும் இயேசுவின் ரத்தம் (2)
பெலனை தந்திடும் இயேசுவின் ரத்தம்
உயிர் கொடுத்திடும் இயேசுவின் ரத்தம் (2)

## இயேசுவே கல்வாரியில் என்னை வைத்துக்கொள்ளும்

1. இயேசுவே கல்வாரியில் என்னை
வைத்துக்கொள்ளும்
பாவம் போக்கும் இரத்தமாம் திவ்ய
ஊற்றைக்காட்டும்

மீட்பரே, மீட்பரே, எந்தன் மேன்மை நீரே
விண்ணில் வாழுமளவும் நன்மை செய்குவீரே

2. பாவியேன் கல்வாரியில் இரட்சிப்பைப் பெற்றேனே
ஞானஜோதி தோன்றவும் கண்டு பூரித்தேனே

3. இரட்சகா, கல்வாரியின் காட்சி கண்டோனாக
பக்தியோடு ஜீவிக்க என்னை ஆள்வீராக

**இயேசுவே, கிருபாசனப்பதியே**

இயேசுவே, கிருபாசனப்பதியே, கெட்ட
இழிஞன் எனை மீட்டருள்,
ஏசுவே, கிருபாசனப்பதியே.

1.காசினியில் உன்னை அன்றி, தாசன் எனக் காதரவு
கண்டிலேன், சருவ வல்ல மண்டலாதிபா!
நேசமாய் ஏழைக்கிரங்கி, மோசம் அணுகாது காத்து
நித்தனே, எனைத் திருத்தி, வைத்தருள் புத்தி வருத்தி,

2.பேயுடைச் சிறையதிலும், காய வினைக் கேடதிலும்,
பின்னமாகச் சிக்குண்ட துர்க் கன்மி ஆயினேன்@
தீயரை மீட்கும் பொருளாய் நேயம் உற்றுதிரம் விட்ட
தேவனே, எனைக்கண் நோக்கித் தீவினை அனைத்தும் நீக்கி,

3.சிறைப்படுத்தின வற்றைச் சிறையாக்கி விட்ட அதி
தீரமுள்ள எங்கள் உபகார வள்ளலே,
குறை ஏதுனை அண்டினோர்க் கிறைவா? எனைச் சதிக்கும்
குற்றங்கள் அறவே தீர்த்து, முற்றுமுடியக் கண் பார்த்து,

4.பொல்லா உலகம் அதில் நல்லார் எவரும் இல்லை,
புண்ணியனே, உன் சரணம் நண்ணி அண்டினேன்@
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி?
இந்நாள் அருள் புரிந்து உன் ஆவியைச் சொரிந்து,

## இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை

1. இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை
என்னென்ன துன்பங்கள் நேரிட்டாலும்
சிங்கத்தின் வாயினின்றும் இரட்சிப்பார்
பங்கம் வராதென்னை ஆதரிப்பார்

நெஞ்சமே நீ அஞ்சிடாதே
நம்பினோரைக் கிருபை சூழ்ந்திடுதே
இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்
இன்னமும் காத்துன்னை நடத்துவார்

2. விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்
வறட்சி மிகுந்த காலத்திலும்
பக்தன் வலது பாரிசத்திலே
கர்த்தர் தாம் நிற்பதால் அசைந்திடான்

## இயேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன்

1. இயேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன்
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்
தேவ குமாரன் ரட்சை செய்தார்
பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்

இயேசுவைப் பாடிப் போற்றுகிறேன்
நேசரைப் பார்த்து பூரிக்கிறேன்
மீட்பரை நம்பி நேசிக்கிறேன்
நீடுழி காலம் ஸ்தோத்தரிப்பேன்

2. அன்பு பாராட்டிக் காப்பவராய்
எந்தனைத் தாங்கி பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்

3. மெய்ச்சமாதானம் ரம்மியமும்
தூயதேவாவி வல்லமையும்
புண்ணிய நாதர் தந்துவிட்டார்
விண்ணிலும் சேர்ந்து வாழச் செய்வார்

1. Blessed assurance, Jesus is mine!
Oh, what a foretaste of glory divine!
Heir of salvation, purchase of God.
Born of His Spirit, washed in His blood.

This is my story, this is my song,
Praising my Savior all the day long

2. Perfect submission, perfect delight,
Visions of rapture now burst on my sight;
Angles descending, bring from above
Echoes of mercy, whispers of love.

3. Perfect submission, all is at rest,
I in my Savior am happy and blest;
Watching and waiting, looking above,
Filled with His goodness, lost in His love.

## இரட்சா பெருமானே பாரும்

1. இரட்சா பெருமானே பாரும்,
புண்ணிய பாதம் அண்டினோம்
சுத்தமாக்கி சீரைத் தாரும்,
தேடிவந்து நிற்கிறோம்,
இயேசு நாதா, இயேசு நாதா,
உந்தன் சொந்தமாயினோம்.

2. மேய்ப்பன் போல முந்திச் சென்றும்
பாதுகாத்தும் வருவீர்,
ஜீவத் தண்ணீரண்டை என்றும்
இளைப்பாறச் செய்குவீர்,
இயேசு நாதா, இயேசு நாதா,
மேய்ச்சல் காட்டிப் போஷிப்பீர்.

3. நீதி பாதை தவறாமல்
நேசமாய் நடத்துவீர்,
மோசம் பயமுமில்லாமல்
தங்கச் செய்து தாங்குவீர்,
இயேசு நாதா, இயேசு நாதா
ஒரு போதும் கைவிடீர்.

4. ஜீவ காலபரியந்தம்
மேய்த்தும் காத்தும் வருவீர்,
பின்பு மோட்ச பேரானந்தம்
தந்து வாழச் செய்குவீர்,
இயேசு நாதா இயேசு நாதா
ஊழி காலம் வாழ்விப்பீர்.

## இரத்தக்கோட்டைக்குள்ளே நான் நுழைந்துவிட்டேன்

இரத்தக்கோட்டைக்குள்ளே நான் நுழைந்துவிட்டேன்
இனி எதுவும் அணுகாது எந்தத் தீங்கும் தீண்டாது

1. நேசரின் இரத்தம் என்மேலே
நெருங்காது சாத்தான்
பாசமாய்ச் சிலுவையில் பலியானார்
சாத்தானை வென்று விட்டார்

2. இம்மட்டும் உதவின எபனேசரே
இனியும் காத்திடுவார்
உலகிலே இருக்கும் அவனைவிட
என் தேவன் பெரியவரே

3. தேவனே ஒளியும் மீட்புமானார்
யாருக்கு அஞ்சிடுவேன்
அவரே என் வாழ்வின் பெலனானார்
யாருக்கு பயப்படுவேன்?

4. தாய் தன் பிள்ளையை மறந்தாலும்
மறவாத என் நேசரே
ஆயனைப்போல நடத்துகிறார்
அபிஷேகம் செய்கின்றார்

5. மலைகள் குன்றுகள் விலகினாலும்
மாறாது உம் கிருபை
அனாதி சிநேகத்தால் இழுத்துக்கொண்டீர்
அணைத்த சேர்த்துக் கொண்டார்

## இராத்திரியில் மேய்ப்பருக்கு நற்செய்தி

1. இராத்திரியில் மேய்ப்பருக்கு நற்செய்தி ஒன்று வந்தது
   இயேசு பாலன் பூமியில் இன்று பிறந்தார் என்றே

   ஆடுவோம் பாடுவோம் நாங்கள் கொண்டாடுவோம்
   இன்று இயேசு ராஜா பிறந்தாரே
   ஆநசசல அநசசல அநசசல அநசசல ஊhசளைவஅயள
   ஆலேலு ஆலே-லுயா
   ஆடுவோம் பாடுவோம் நாங்கள் கொண்டாடுவோம்
   இன்று ஏசு ராஜா பிறந்தாரே

## இருள் சூழும் காலம் இனி வருதே

1. இருள் சூழும் காலம் இனி வருதே
அருள் உள்ள நாட்கள் பயன்படுத்தும்
திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொறுங்குண்ட மனதாய் முன்செல்வோர் யார்?

திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொறுங்குண்ட மனதாய் முன்செல்வோர் யார்?
நாட்கள் கொடியதாய் மாறிடுதே
காலத்தை ஆதாயம் செய்திடுவோம்

2. தரிசு நிலங்கள் அநேகம் உண்டு
தரிசனம் பெற்றோர் நீர் முன் வருவீர்
பரிசாக இயேசுவை அவர்களுக்கும்
அளித்திட அன்பால் எழுந்து செல்வீர்

3. எத்தனை நாடுகள் இந்நாட்களில்
கர்த்தரின் பணிக்குத்தான் கதவடைத்தார்
திறந்த வாசல் இன்று உனக்கெதிரில்
பயன்படுத்தும் மக்கள் ஞானவான்கள்

4. விசுவாசிகள் எனும் கூட்டம் உண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒரு மனம் ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும்

5. இனிவரும் நாட்களில் நமது கடன்
வெகு அதிகம் விசுவாசிகளே
நம்மிடை உள்ள ஐக்கியமே
வெற்றியும் தோல்வியும் ஆக்கிடுமே

6. இயேசுவே எங்கள் உள்ளங்களை
அன்பெனும் ஆவியால் நிறைத்திடுமே
இந்தியாவின் எல்லாத் தெருக்களிலும்
இயேசுவின் நாமமும் விரைந்திடுமே

## இஸ்ரவேல் என்னும் நாட்டினிலே

1. இஸ்ரவேல் என்னும் நாட்டினிலே
பெத்லகேம் என்னும் ஊரினிலே
பிறந்தார் (4) தேவ குமாரன் பிறந்தார்
பிறந்தார் (4) இயேசு கிறிஸ்து பிறந்தார்

உன்னதத்தில் மகிமை
பூமியிலே சமாதானம்
மனுஷர் மேல் பிரியம்
மனுஷர் மேல் பிரியம்

2. கன்னிமரியின் தாய்மையிலே
தாவீது இராஜா வம்சத்திலே
பிறந்தார் (4) அதிசயமானவர் பிறந்தார்
பிறந்தார் (4) முன்னோரின் மேசியா பிறந்தார்
- உன்னதத்தில்

3. சத்திரத்தில் இடம் இல்லையே
மெத்தையோ தொழுமுன்னணையே
பிறந்தார் (4) சிருஷ்டிப்பின் தேவன் பிறந்தார்
பிறந்தார் (4) கர்த்தாதி கர்த்தர் பிறந்தார்
- உன்னதத்தில்

## உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்

உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்
உங்கள் கவலைகள் கண்ணீர்
எல்லாம் மறைந்து விடும்

கலங்காதே மகனே, கலங்காதே மகளே
என் இயேசு கைவிட மாட்டார்

1. கடந்ததை நினைத்து கலங்காதே
நடந்ததை மறந்துவிடு
கர்த்தர் புதியன செய்திடுவார்
இன்றே நீ காண்பாய்... கலங்கிடவே வேண்டாம்

2. நொறுங்குண்ட இதயம் தேற்றுகிறார்
உடைந்த உள்ளம் தாங்குகிறார்
காயங்கள் அனைத்தையும் கட்டுகிறார்
கண்ணீர் துடைகின்றார் - (உன்)

3. திராணிக்கு மேலாக சோதிக்கப்பட
ஒருநாளும் விட மாட்டார்
தாங்கிடும் பெலன் தருவார்
தப்பி செல்ல வழி செய்வார் - (நீ)

4. நல்லதோர் போராட்டம் போராடுவோம்
விசுவாசம் காத்துக் கொள்வோம்
நீதியின் கிரீடம் நமக்கு உண்டு
நேசர் வருகையில் தந்திடுவார் - நம்

5. மாலையில் மகனே அழுகின்றாயா
காலையில் அக மகிழ்வாய்
நித்திய பேரானந்தம்
நேசரின் சமூகத்திலே

6. அக்கினியின் மேல் நடந்தாலும்
எரிந்து போக மாட்டாய்
ஆறுகளை நீ கடந்தாலும்
மூழ்கி போக மாட்டாய்

7. முழுமையாய் மனம் திரும்பிவிடு
முற்றிலும் வாழ்வை ஒப்புக்கொடு
வேண்டாத அனைத்தையும் விட்டுவிடு
ஆண்டவர் விருப்பம் நிறைவேற்று
எங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்

எங்கள் கவலைகள் கண்ணீர்
எல்லாம் மறைந்துவிடும்
கலங்கிடவே மாட்டோம்
நாங்கள் கலங்கிடவே மாட்டோம்

## உன் நெஞ்சிலே உண்டான விசாரங்களை நீ

1. உன் நெஞ்சிலே உண்டான விசாரங்களை நீ
கர்த்தாவின் உண்மையான கரத்துக் கொப்புவி
விண்மண்ணை ஆண்டிருக்கும் மகா தயாபரர்
உன் காரியங்களுக்கும் வழியுண்டாக்குவார்.

2. ஜெயமடைந்து வாழ கர்த்தாவைப் பிள்ளைபோல்
நீ நம்பி மனதார பணிந்து பற்றிக்கொள்
உன் கவலைகளாலே பயம் ரட்டிக்குது
வேண்டாம் ஜெபத்தினாலே நீ வேண்டிக்கொண்டிரு.

3. இக்கட்டுகளினாலே கலங்கினோனே நீ
திடன்கொள் கர்த்தராலே இக்கட்டின் ராத்திரி
சந்தோஷமாக மாறும் சற்றே பொறுத்திரு
நீ பூரிப்பாய்க் கொண்டாடும் நாள் வரப்போகுது.

4. கர்த்தாவே எங்களுக்கு எல்லா இக்கட்டிலும்
ரட்சிப்பளிப்பதற்கு நேரிட்டுக்கொண்டிரும்
ஆ எங்களைத் தேற்றிடும் பரகதிக்குப் போம்
வழியிலும் நடத்தும் அப்போ பிழைக்கிறோம்.

**உன்னதமானவரின் உயர் மறைவிலிருக்கிறவன்**

1. உன்னதமானவரின்
உயர் மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே

அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகவே
தம் சிறகுகளால் மூடுவார்

2. தேவன் உன் அடைக்கலமே
என் கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே

3. ஆயிரம் பதினாயிரம் பேர்கள்
உன் பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும் உன்னை அணுகிடாதே
உன் தேவன் உன் தாபரமே

4. தேவன் உன் அடைக்கலமே
ஒரு பொல்லாப்பும் உன்னைச் சேருமோ
ஒரு வாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார்

5. உன் வழிகளிளெல்லாம்
உன்னைத் தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தம் கரங்களில் ஏந்திடுவார்

6. ஆபத்திலும் அவரை நான்
நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
என்னைத் தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர்

## உன்னையே வெறுத்துவிட்டால்

1. உன்னையே வெறுத்துவிட்டால் ஊழியம் செய்திடலாம்.
சுயத்தை சாகடித்தால் சுகமாய் வாழ்த்திடலாம்

2. சிலுவையை சுமப்பதனால் சிந்தையே மாறிவிடும்.
நீடிய பொறுமை வரும் நிரந்தர அமைதி வரும்.

3. பெயர் புகழ் எல்லாமே இயேசுவின் நாமத்திற்கே
கிறிஸ்து வளரட்டுமே சுயமது மறையட்டுமே

4. நாளைய தினம் குறித்து கலங்காதே மகனே
இதுவரை காத்த தெய்வம் இனியும் நடத்திடுவார்

5. சேர்த்து வைக்காதே திருடன் பறித்திடுவான்.
கொடுத்திடு கர்த்தருக்கே குறைவின்றி காத்திடுவார்

6. தன்னலம் நோக்காமல் பிறர் நலம் தேடிடுவோம்.
இயேசுவில் இருந்த சிந்தை நம்மில் இருக்கட்டுமே

## உன்றன் சுயமதியே

உன்றன் சுயமதியே நெறி என்-று
உகந்து சாயாதே; - அதில் நீ
மகிழ்ந்து மாயாதே.

1. மைந்தனே, தேவ மறைப்படி யானும்
வழுத்தும்மதித னைக் கேளாய் - தீங்
கொழித் திதமாய் மனந் தாழாய் அருள் சூழாய்.

2. சொந்தம் உனதுளம் என்று நீ பார்க்கிலோ,
வந்து விளையுமே கேடு - அதின்
தந்திரப் போக்கை விட்டோடு கதி தேடு.

3. துட்டர் தம் ஆலோசனைப்படியே தொடர்ந்
திட்ட மதாய் நடவாதே - தீயர்
கெட்ட வழியில் நில்லாதே அது தீதே.

4. சக்கந்தக் காரர் இருக்கும் இடத்தொரு
மிக்க இருக்க நண்ணாதே அவர்
ஐக்யம் நலம் என்றென்னாதே அதொண்ணாதே.

5. நான் என்னும் எண்ண மதால் பிறரை அவ
மானிப்பது வெகு பாவம் - அதின்
மேல் நிற்குமே தேவ கோபம் மனஸ்தாபம்.

**உம் அருள் பெற, இயேசுவே**

1. உம் அருள் பெற, இயேசுவே, நான் பாத்திரன் அல்லேன்,
என்றாலும் தாசன் பேரிலே கடாட்சம் வையுமேன்.

2. நீர் எனக்குள் பிரவேசிக்க நான் தக்கோன் அல்லவே,
நீர் என் பாழ் நெஞ்சை ஆசிக்க நிமித்தம் இல்லையே.

3. ஆனாலும் வாரும் தயவாய், மா நேச ரட்சகா,
என்றைக்கும் தங்கும் ஐக்கியமாய், என் பாவ நாசகா.

4. நற்கருணையாம் பந்திக்கும் அபாத்திரன் ஆயினேன்,
நற் சீரைத் தந்து என்னையும் கண்ணோக்கிப் பாருமேன்.

5. தெய்வீக பான போஜனம் அன்பாக ஈகிறீர்,
மெய்யான திவ்விய அமிர்தம் உட்கொள்ளச் செய்கிறீர்.

6. என் பக்தி, ஜீவன் இதினால் நீர் விர்த்தியாக்குமேன்,
உந்தன் சரீரம் இரத்தத்தால் சுத்தாங்கம் பண்ணுமேன்

7. என் ஆவி, தேகம், செல்வமும் நான் தத்தம் செய்கிறேன்,
ஆ இயேசுவே, சமஸ்தமும் பிரதிஷ்டை செய்கிறேன்

**உம் சித்தம் போல்**

உம் சித்தம் போல் என்னை என்றும்
தற்பரனே நீர் நடத்தும்
என் சித்தமோ ஒன்றும் வேண்டாம்
என் பிரியனே என் இயேசுவே

1.திரு மார்பில் நான் சாய்ந்திடுவேன்
மறு பிரயாண காலம் வரை
பரனே உந்தன் திருசித்தத்தை
அறிவதல்லோ தூயவழி

2.வழிப் பிரயாணி மூடனைப்போல்
வழி தவரு நடந்திடவே
வழி இதுவே என்று சொல்லும்
இனிய சத்தம் தொனித்திடட்டும்

3.அக்கினிஸ்தம்பம் மேகஸ்தம்பம்
அடியார் மீது ஜொலித்திடட்டும்
இரவு பகல்கூட நின்று
என்றென்றுமாய் நடத்திடுமே

4.இடுக்கமே என் அப்பமுமாய்
கண்ணீரோ என் தண்ணீருமாய்
பருகிடினும் பயப்படேன் நான்
என்றென்றும் உம் சித்தம் போதும்

**உம் ராஜ்ஜியம் வருங்காலை கர்த்தரே**

1. உம் ராஜ்ஜியம் வருங்காலை கர்த்தரே
அடியேனை நினையும் என்பதாய்
சாகும் கள்ளன் விஸ்வாச நோக்காலே
விண் மாட்சி கண்டு சொன்னான் தெளிவாய்.

2. அவர் ஓர் ராஜா என்று சொல்லுவார்
எவ்வடையாளமும் கண்டிலாரே.
நம் பெலனற்ற கையை நீட்டினார்.
முட் கிரீடம் நெற்றி சூழ்ந்து பீறிற்றே.

3. ஆனாலும் மாளும் மீட்பர் மா அன்பாய்
அருளும் வாக்கு, “இன்று என்னுடன்
மெய்யாய் நீ பரதீஸிலிருப்பாய்”
என்பதுவாம் விஸ்வாசத்தின் பலன்.

**உம்பாதம் பணிந்தேன்**

உம்பாதம் பணிந்தேன் எந்நாளும் துதியே
உம்மையன்றி யாரைப் பாடுவேன் - இயேசையா
உந்தன் அன்பு உள்ளம் பொங்குதே!

1. பரிசுத்தமே பரவசமே பரனேசருளே வரம் பொருளே
தேடினதால் கண்டடைந்தேன் பாடிடப் பாடல்கள் ஈந்தளித்தீர்!

2. புது எண்ணெயால் புது பெலத்தால் புதிய கிருபை புதுக்கவியால்
நிரப்பி நிதம் நடத்துகின்றீர் நூதன சாலேமில் சேர்த்திடுவீர்!

3. நெருக்கத்திலே உம்மை அழைத்தேன் நெருங்கி உதவி எனக்களித்தீர்
திசைக்கெட்டெங்கும் அலைந்திடாமல் தீவிரம் வந்தென்னைத் தாங்குகின்றீர்

4. என்முன் செல்லும் உம் சமூகம் எனக்கு அளிக்கும் இளைப்பாறுதல்
உமது கோலும் உம் தடியும் உண்மையாய் என்னையும் தேற்றிடுதே!

5. கனிசெடி நீர் நிலைத்திருக்கும் கொடியாய் அடியேன் படர்ந்திலங்க
கிளை நறுக்கி களைபிடுங்கி கர்த்தரே காத்தென்னைச் சுத்தம் செய்வீர்!

6. என் இதய தெய்வமே நீர் எனது இறைவா! ஆருயிரே
நேசிக்கிறேன் இயேசுவே உம் நேசமுகம் என்று கண்டிடுவேன்!

7. சீருடனே பேருடனே சிறந்து ஜொலிக்கும் கொடுமுடியில்
சீக்கிரமாய் சேர்த்திடுவீர் சீயோனை வாஞ்சித்து நாடுகிறேன

## உம்மாலே தான், என் இயேசுவே

1.உம்மாலே தான், என் இயேசுவே,
ரட்சிக்கப்படுவேன்;
உம்மாலேதான் பேரின்பத்தை
அடைந்து பூரிப்பேன்.

2.இப்பந்தியில் நீர் ஈவது
பரம அமிர்தம்;
இனி நான் பெற்றுக்கொள்வது
அநந்த பாக்கியம்.

3.இவ்வேழை அடியேனுக்கு
சந்தோஷத்தைத் தந்தீர்;
இக்கட்டு வரும்பொழுது,
நீர் என்னைத் தேற்றுவீர்.

4.பூமியில் தங்கும் அளவும்
உம்மையே பற்றுவேன்;
எவ்வேளையும் எவ்விடமும்
நான் உம்மைப் போற்றுவேன்.

**உம்மால் ஆகாத காரியம்**

உம்மால் ஆகாத காரியம் ஒன்றும் இல்ல (3)
எல்லாமே உம்மால் ஆகும் ... அல்லேலூயா (2)
ஆகும் எல்லாம் ஆகும் உம்மாலேதான் எல்லாம் ஆகும் (2)

1. சொல்லிமுடியாத அற்புதம் செய்பவர் நீரே ஐயா நீரே
எண்ணிமுடியாத அதிசயம் செய்பவர் நீரே ஐயா நீரே (2)
அப்பா உமக்கு ஸ்தோத்திரம் அன்பே உமக்கு ஸ்தோத்திரம் (2)

2. எனக்கு குறித்ததை நிறைவேற்றி முடிப்பவர் நீரே ஐயா நீரே
எனக்காக யாவையும் செய்துமுடிப்பவர் நீரே ஐயா நீரே (2)
அப்பா உமக்கு ஸ்தோத்திரம் அன்பே உமக்கு ஸ்தோத்திரம் (2)

3. வரண்ட நிலத்தை நீரூற்றாய் மாற்றுபவர் நீரே ஐயா நீரே
அவாந்திர வெளியை தண்ணீராய் மாற்றுபவர் நீரே ஐயா நீரே(2)
அப்பா உமக்கு ஸ்தோத்திரம் அன்பே உமக்கு ஸ்தோத்திரம் (2)

## உம்மைப்போல் யாருண்டு?

உம்மைப்போல் யாருண்டு? எந்தன் இயேசுநாதா
இந்தப் பார்தலத்தில் உம்மைப்போல் யாருண்டு?
பாவப்பிடியினில் சிக்கி நான் உழன்றேன்
தேவா தம் அன்பினால் மன்னித்தீர்

1. உலகம், மாமிசம், பிசாசின் பிடியில்
அடிமையாகவே பாவி நான் ஜீவித்தேன்
நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம்போல் நடந்தேன், ஏமாற்றம் அடைந்தேன்
என்னையா தேடினீர் ஐயா, இயேசு நாதா?
உம்மை மறந்த ஓர் துரோகி நான்
என்னையா தேடினீர் ஐயா, இயேசு நாதா?
அடிமை உமக்கே இனி நான்.

2. இன்றைக்கு நான் செய்யும் இந்த தீர்மானத்தை
என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்
நொறுக்கும் உருக்கும் உடையும் வனையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய்
ஐம்பொறிகளையும் உமக்குள் அடக்கும்
இயேசுவே ஆவியால் நிரப்பும்
வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய்த் திகழ
அக்கினி என் உள்ளம் இறக்கும்

3. வீட்டிலும் ஊரிலும் செல்லுமிடமெங்கும்
சோதனை வந்திடில் கர்த்தா நீர் காத்திடும்
மேசியா வருகை வரையில் பலரை
சிலுவைக் கருகில் அழைக்க ஏவிடும்
முழங்காலில் நிற்க, வேதத்தை அறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும்
உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்
என்றுமே வராமல் காத்திடும்

**உறக்கம் தெளிவோம் உற்சாகம் கொள்வோம்**

1. உறக்கம் தெளிவோம் உற்சாகம் கொள்வோம்
உலகத்தின் இறுதி வரை
கல்வாரி தொனிதான் மழை மாரிப் பொழியும்
நாள்வரை உழைத்திடுவோம்!

2. அசுத்தம் களைவோம் அன்பை அழைப்போம்
ஆவியில் அனலும் கொள்வோம்
அவர் படை ஜெயிக்க நம்மிடை கருத்து
வேற்றுமையின்றி வாழ்வோம்!

3. அச்சம் தவிர்ப்போம் தைரியம் கொள்வோம்
சரித்திரம் சாட்சி கூறும்
இரத்தச் சாட்சிகள் நம்மிடைத் தோன்றி
நாதனுக்காய் மடிவோம்!

4. கிறிஸ்துவுக்காக இழந்தவர் எவரும்
தரித்திரர் ஆனதில்லை
இராஜ்ஜிய மேன்மைக்காய் கஷ்டம் அடைந்தோர்
நஷ்டப்பட்டதில்லை!

5. உயிர் பெறுவீர் ஒன்று கூடுவீர்
உலர்ந்த எலும்புகளே
நீங்கள் அறியா ஒருவர் உங்கள்
நடுவில் வந்துவிட்டார்

**உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்று எழ வேண்டும்**

உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்று எழ
வேண்டும்
ஒன்று சேர்ந்து முழு மனிதனாக வேண்டும்
அசைவாடும் - இன்று
அசைவாடும்
ஆவியான தேவா

1. நரம்புகள் உருவாகட்டும்
உம் சிந்தை உண்டாகட்டும்

2. சதைகள் உண்டாகட்டும்
உம் வசனம் உணவாகட்டும்

## உள்ளத்தில் அவர்பால் பேரன்பு

உள்ளத்தில் அவர்பால் பேரன்புள்ளோரெல்லாம்
எண்ணத்தில் தெளிவைப் பெறுவீர்
சொல்லதில் கூறுவீர் வாழ்வதில் சாதிப்பீர்
இயேசு தேடும் நபர் இவரே

1. பரமன் பேரிலே பற்றுக்கொண்டோரெல்லாம்
எளிதில் புரிவார் அவரின் பாரத்தை
உலகின் பேரிலே இயேசுவின் அக்கறை
தமதாக்கியவர் வாழுவார், மாளுவார்
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பார்

2. தேசங்கள், தீவுகள், பல பிராந்தியங்கள்
பாவத்தால் நிறைந்து சாபமாகிறது
திறப்பின் வாயிலே நிற்கத்தக்கதாக
தேவன் தேடும் நபர் நம்மிலே யார் யாரோ?
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பார்

3. செல்வம், சீர், சிறப்பு, நற்குடிப்பிறப்பு
செல்வாக்கு அந்தஸ்து படாடோபவஸ்து
யாவையும் பெறினும் சாகையில் என் செய்வீர்
உலகின் சம்பத்து குப்பை என்றே சொல்வீர்
உண்மை அடியவர் இயேசுவை அறிவார்
தம்மையே அவர்க்காய் அளிப்பாh

**உள்ளமெல்லாம் உருகுதையா**

1. உள்ளமெல்லாம் உருகுதையா
உத்தமனை நினைக்கையிலே
உம்மையன்றி வேறே தெய்வம்
உண்மையாய் இங்கில்லையே

கள்ளனென்று தள்ளிடாமல்
அள்ளி என்னை அணைத்தவர்
சொல்லடங்கா நேசத்தாலே
உம் சொந்த மாக்கிக் கொண்டீரே

2. எத்தன் என்னை உத்தமனாக்க
சித்தம் கொண்ட என் இயேசையா
எத்தனையோ துரோகம் நான் செய்தேன்
அத்தனையும் நீர் மன்னித்தீர்

இரத்தம் சிந்த வைத்தேனே நான்
அத்தனையும் என் பாவமன்றோ
கர்த்தனே உம் அன்புக்கீடாய்
நித்தம் செய்வேன் உம் சேவையே

3. வானமீதில் இயேசு ராஜன்
வேகம் வரும் நாளன்றோ
லோக மீதில் காத்திருப்போhர்
ஏகமாகக் கூடிட

தியாக ராஜன் இயேசுவை நாம்
முகமுகமாய்த் தரிசிக்க
ஆவலோடு ஏங்கும் தாசன்
சோகம் நீங்கும் நாளன்றோ?

## ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே

ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே
ஜீவநதியே என்னில் பொங்கி பொங்கிவா
ஆசீர்வதியும் என் நேச கர்த்தரே
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும்

1. கன்மலையைப் பிளந்து வனாந்திரத்திலே
கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே
பள்ளத்தாக்கிலும் மலைகளிலும்
தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே

2. ஜீவத் தண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தரே
ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுமே
கனிதந்திட நான் செழித்தோங்கிட
கர்த்தரின் கரத்தில் நித்தம் கனம் பெற்றிட

3. இரட்சிப்பின் ஊற்றுக்கள் எந்தன் சபைதனிலே
எழும்பிட இந்த வேளை இரங்கிடுமே
ஆத்ம பலமும் பரிசுத்தமும்
ஆவலுடன் பெற்றிடவே வரம் தாருமே

4. திறக்கப்பட்டதாம் ஊற்று சிலுவையிலே
இரட்சகரின் காயங்களில் வெளிப்படுதே
பாவக் கறைகள் முற்றும் நீங்கிட
பரிசுத்த சமூகத்தில் ஜெயம் பெற்றிட

**எக்காள சத்தம் வானில் தொனித்திடவே**

எக்காள சத்தம் வானில் தொனித்திடவே
எம் இயேசு மாராஜனே வந்திடுவார்

1. அந்த நாள் மிக சமீபமே
சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே
தேவ எக்காளம் வானில் முழங்க
தேவாதி தேவனை சந்திப்போமே
………. எக்காள

2. கர்த்தரின் வேளையை நாம் அறியோம்
கர்த்தரின் சித்தமே செய்திடுவோம்
பலன்கள் யாவையும் அவரே அளிப்பார்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவோம்
………. எக்காள

## எங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவரே

எங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவரே
இந்நாளில் உம் சித்தம் போல் நடத்திச் செல்லுமையா

ஆவியானவரே... ஆவியானவரே
பரிசுத்த ஆவியானவரே (2)

1. எப்படி நான் ஜெபிக்க வேண்டும்
எதற்காக ஜெபிக்க வேண்டும்
கற்றுத்தாரும் ஆவியானவரே (2)
வேத வசனம் புரிந்து கொண்டு
விளக்கங்களை அறிந்திட
வெளிச்சம் தாரும் ஆவியானவரே - (2)

2. கவலை கண்ணீர் மறக்கணும்
கர்த்தரையே நோக்கணும்
கற்றுத்தாரும் ஆவியானவரே
செய்த நன்மை நினைக்கணும்
நன்றியோடு துதிக்கணும்
சொல்லித்தாரும் ஆவியானவரே

3. எங்கு செல்ல வேண்டும்
என்ன சொல்ல வேண்டும்
வழி நடத்தும் ஆவியானவரே
உம் விருப்பம் இல்லாத
இடங்களுக்குச் செல்லாமல்
தடுத்து நிறுத்தும் ஆவியானவரே

4. எதிரிகளின் சூழ்ச்சிகள்
சாத்தானின் தீக்கனைகள்
எதிர்த்து நிற்க பெலன் வேண்டுமே
உடல் சோர்வு அசதிகள்
பெலவீனங்களை நீங்கி
உற்சாகத்தால் நிரம்ப வேண்டுமே

## எண்ணி எண்ணி துதிசெய்வாய்

எண்ணி எண்ணி துதிசெய்வாய்
எண்ணடங்காத கிருபைகளுக்காய்
இன்றும் தாங்கும் உம் புயமே
இன்ப இயேசுவின் நாமமே

1. உன்னை நோக்கும் எதிரியின்
கண்ணின் முன்பில் பதறாதே,
கண்மணிப்போல் காக்கும் கரங்களில்
உன்னை மூடி மறைத்தாரே!

2. யோர்தான் புரண்டு வரும்போல்
எண்ணற்ற பாரங்களோ
எலியாவின் தேவன் எங்கே
உந்தன் விஸ்வாச சோதனையில்

3. உனக் கெதிராகவே
ஆயுதம் வாய்க்காதே
உன்னை அழைத்தவர் உண்மை தேவன்
அவர் தாசர்க்கு நீதியவா

## எண்ணில் அடங்கா ஸ்தோத்திரம்

எண்ணில் அடங்கா ஸ்தோத்திரம் - தேவா
என்றென்றும் நான் பாடுவேன்
இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

1. ப+மியில் வாழ்கின்ற யாவும் அதின் மேல் உள்ள
ஆகாயமும்
வான் தூதர் சேனைகள் யாவும் தேவா உம்மைப்
போற்றுதே!

2. சூரிய சந்திரரோடே சகல நட்சத்திரக் கூட்டமும்,
ஆகாய பறவைகள் யாவும் தேவா உம்மைப் போற்றுதே!

3. காட்டினில் வாழ்கின்ற யாவும் கடும் காற்றும் பனித்
தூறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும் நாதா உம்மைப் போற்றுதே!

4. பாவ மனுக்குலம் யாவும் தேவா உம் அன்பினை
உணர்ந்தே
சிலுவையின் தியாகத்தைக் கண்டு ஓயா துதி பாடுதே!

**எண்ணில் அடங்கா ஸ்தோத்திரம்**

எண்ணில் அடங்கா ஸ்தோத்திரம் - தேவா
என்றென்றும் நான் பாடுவேன்
இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

1. ப+மியில் வாழ்கின்ற யாவும் அதின் மேல் உள்ள ஆகாயமும்
வான் தூதர் சேனைகள் யாவும் தேவா உம்மைப் போற்றுதே!

2. சூரிய சந்திரரோடே சகல நட்சத்திரக் கூட்டமும்,
ஆகாய பறவைகள் யாவும் தேவா உம்மைப் போற்றுதே!

3. காட்டினில் வாழ்கின்ற யாவும் கடும் காற்றும் பனித் தூறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும் நாதா உம்மைப் போற்றுதே!

4. பாவ மனுக்குலம் யாவும் தேவா உம் அன்பினை உணர்ந்தே
சிலுவையின் தியாகத்தைக் கண்டு ஓயா துதி பாடுதே!

## எண்ணெய் பூசி காயங்கள் ஆற்றியே

எண்ணெய் பூசி காயங்கள் ஆற்றியே
திராட்சை ரசத்தால் என்
உள்ளம் தேற்றியே
மரண தருவாயில் என்னை
அவர் கண்டார் அன்பால்
எரிகோ நகர் வீதிதனிலே

எந்தன் நல்ல இயேசு
என் சிந்தை நிறைந்தார் (கவர்ந்தார்)
என்றென்றும் என் சிந்தை நிறைந்தார்.

## எத்தனை நன்மைகள் எனக்குச் செய்தீர்

எத்தனை நன்மைகள் எனக்குச் செய்தீர்
எப்படி நன்றி சொல்வேன் - நான்
நன்றி ராஜா....நன்றி ராஜா

1. தாழ்மையில் இருந்தேன் தயவாய் நினைத்தீர்
தேவனே உம்மை துதிப்பேன்

2. பெலவீனன் என்று தள்ளி விடாமல்
பெலத்தால் இடை கட்டினீர்

3. பாவத்தினாலே மரித்துப்போய் இருந்தேன்
கிருபையால் இரட்சித்தீரே

4. எனக்காக மரித்தீர் எனக்காக உயிர்த்தீர்
எனக்காய் மீண்டும் வருவீர்

5. கரங்களைப் பிடித்து கண்மணி போல
காலமெல்லாம் காத்தீர்

6. பாவங்கள் போக்கி சாபங்கள் நீக்கி
பூரண சுகமாக்கினீர்

7. முள்முடி தாங்கி திரு இரத்தம் சிந்தி
சாத்தானை ஜெயித்து விட்டீர்

8. நீர் செய்த அதிசயம் ஆயிரம் உண்டு
விவரிக்க முடியாதையா

**எத்தனை நாட்கள் செல்லும்**

1. எத்தனை நாட்கள் செல்லும் இயேசுவின் சுவிசேஷம்
அத்தனை நாட்டவரும் அறிய எத்தனை நாட்கள் செல்லும்?

ஆடுகள் ஏராளம் அலைந்து திரிந்திடுதே
தேடுவோர் யாவருக்கும் என் பெலன் தாராளம்

2. சாத்தானின் சக்திகளும் பெருகிடும் நாட்களிலே
தேவனின் பிள்ளைகட்குள் ஒருமனம் என்று வரும்?

3. தேவைகள் நிறைந்து நிற்க வாய்ப்புகள் நழுவிச் செல்ல
தாழ்மையாய் ஊழியர்கள் இணைவது என்று வரும்?

4. கோபங்கள், சீற்றங்களும், பொறாமையும், பிரிவுகளும்
ஊழியர் என்று சொல்வார் நடுவினில் என்றகலும்?

5. உண்மையாம் கோதுமைகள் மணியாக மண் அடியில்
மறைந்திடும் நாள் வருமா? நாம் உடைபடும் நாள் வருமா?

## எத்தனை நாவால் பாடுவேன்

1. எத்தனை நாவால் பாடுவேன்
என் மீட்பர் துதியை!
என் ஆண்டவர் என் ராஜனின்
மேன்மை மகிமையை!

2. பாவிக்கு உந்தன் நாமமோ
ஆரோக்கியம் ஜீவனாம்!
பயமோ துக்க துன்பமோ
ஓட்டும் இன்கீதமாம்.

3. உமது சத்தம் கேட்குங்கால்
மரித்தோர் ஜீவிப்பார்;
புலம்பல் நீங்கும் பூரிப்பால்,
நிர்ப்பாக்கியர் நம்புவார்.

4. ஊமையோர், செவிடோர்களும்
அந்தகர், ஊனரும்,
உம் மீட்பர்! போற்றும்! கேட்டிடும்!
நோக்கும்! குதித்திடும்!

5. என் ஆண்டவா, என் தெய்வமே,
பூலோகம் எங்கணும்
பிரஸ்தாபிக்க உம் நாமமே
பேர் அருள் ஈந்திடும்.

**எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்**

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
இயேசுவே உம்மை நான் துதிப்பேன் துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்

1. ஆதியும் நீரே - அந்தமும் நீரே
ஜோதியும் நீரே - என் சொந்தமும் நீரே

2. தாய்தந்தை நீரே - தாதியும் நீரே
தாபரம் நீரே - என் தாரகம் நீரே

3. வாழ்விலும் நீரே - தாழ்விலும் நீரே
வாதையில் நீரே - என் பாதையில் நீரே

4. துன்பநேரத்தில் - இன்பமும் நீரே
இன்னல் வேளையில் - என் மாறிடா நேசர்

## எந்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா

1. எந்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா
உந்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
உந்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா

2. மாம்ச கிரியை போக்கும் இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா

3. திரும்ப விழாது பாரும் இயேசு நாயகா
கிருபை இழாது காரும் இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
கிருபை இழாது காரும் இயேசு நாயகா

4. என்னை உமக்குத் தந்தேன் இயேசு நாயகா
இனிநான் அல்ல நீரே இயேசு நாயகா
இயேசு நாயகா! இயேசு நாயகா!
இனி நான் அல்ல நீரே இயேசு நாயகா

**எந்தன் உள்ளம் புதுக்கவியாலே பொங்க**

1. எந்தன் உள்ளம் புதுக்கவியாலே பொங்க
இயேசுவைப் பாடிடுவேன்
அவர் நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்
அவரையே நேசிக்கிறேன்

அல்லேலூயா துதி அல்லேலூயா - எந்தன்
அண்ணலாம் இயேசுவைப் பாடிடுவேன்
இத்தனை கிருபைகள் நித்தமும் அருளிய
கர்த்தனைக கொண்டாடுவேன்

2. சென்ற காலம் முழுவதும் காத்தாரே ஓர்
சேதமும் அணுகாமல்
சொந்தமாக ஆசீர் பொழிந்தெனக்கென்றும்
சுகபெலன் அளித்தாரே

3. சில வேளை இமைப்பொழுது தன் முகத்தை
சிருஷ்டிகர் மறைத்தாரே
கடுங்கோபம் நீக்கித் திரும்பவும் என்மேல்
கிருபையும் பொழிந்தாரே

4. பஞ்ச காலம் பெருகிட நேர்ந்தாலும் - தாம்
தஞ்சமே ஆனாரே
அங்கும் இங்கும் நோய்கள் பரவி வந்தாலும்
அடைக்கலம் அளித்தாரே

5. களிப்போடு விரைந்தெம்மைச் சேர்த்திட - என்
கர்த்தரே வருவாரே
ஆவலோடு நாமும் வானத்தை நோக்கி
அனுதினம் காத்திருப்போம்

**எந்தன் கன்மலையானவரே**

1. எந்தன் கன்மலையானவரே
என்னைக் காக்கும் தெய்வம் நீரே (2)
வல்லமை மாட்சிமை நிறைந்தவரே
மகிமைக்கு பாத்திரரே (2)

ஆராதனை உமக்கே (4)

2. உந்தன் சிறகுகளின் நிழலில்
என்றென்றும் மகிழச் செய்தீர் (2)
தூயவரே என் துணையாளரே
துதிக்குப் பாத்திரரே (2)

ஆராதனை உமக்கே (4)

3. எந்தன் பெலவீன நேரங்களில்
உம் கிருபை தந்தீரையா (2)
இயேசு ராஜா என் பெலனானீர்
எதற்கும் பயமில்லையே (2)

ஆராதனை உமக்கே (4)

4. எந்தன் உயிர் உள்ள நாட்களெல்லாம்
உம்மைப் புகழ்ந்து பாடிடுவேன் (2)
ராஜா நீர் செய்த நன்மைகளை
எண்ணியே துதித்திடுவேன் (2)

ஆராதனை உமக்கே (4)

**எந்தன் ஜீவன், இயேசுவே**

1. எந்தன் ஜீவன், இயேசுவே, சொந்தமாக ஆளுமே,
எந்தன் காலம், நேரமும் நீர் கையாடியருளும்

2. எந்தன் கை பேரன்பினால் ஏவப்படும், எந்தன் கால்
சேவை செய்ய விரையும், அழகாக விளங்கும்

3. எந்தன் நாவு இன்பமாய் உம்மைப் பாடவும், என் வாய்
மீட்பின் செய்தி கூறவும் ஏதுவாக்கியருளும்

4. எந்தன் ஆஸ்தி, தேவரீர், முற்றும் அங்கீகரிப்பீர்
புத்தி கல்வி யாவையும் சித்தம்போல் பிரயோகியும்.

5. எந்தன் சித்தம், இயேசுவே, ஒப்புவித்து விட்டேனே,
எந்தன் நெஞ்சில் தங்குவீர், அதை நித்தம் ஆளுவீர்.

6. திருப் பாதம் பற்றினேன், என்தன் நேசம் ஊற்றினேன்,
என்னையே சமூலமாய் தத்தம் செய்தேன் நித்தமாய்.

## எந்தன் ஜெபவேளை உமைத்தேடி வந்தேன்

எந்தன் ஜெபவேளை உமைத்தேடி வந்தேன்
தேவா பதில் தாருமே
எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம் நீரே
உம்மை நான் நாடி வந்தேன்

1. சோராது ஜெபித்திட ஜெப ஆவி வரம் தாருமே
தடையாவும் அகற்றிடுமே தயை கேட்டு உம்பாதம்
வந்தேன்

2. உம்மோடு எந்நாளும் உறவாட அருள் செய்யுமே
கர்த்தாவே உம் வார்த்தையை கேட்டிட காத்திருப்பேனே

3. நம்பிக்கை இல்லாமல் அழிகின்ற மாந்தர்களை
மீட்டிடும் என் இயேசுவே போராடி ஜெபிக்கின்றேன் நாதா

4. நாளெல்லாம் பாதத்தில் கர்த்தாவே காத்திருப்பேன்
கண்ணீர் ஜெபம் கேளுமே கருணையின் பிரவாகம் நீரே

## எந்தன் நாவில் புதுப்பாட்டு

எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் இயேசு தருகிறார்

ஆனந்தம் கொள்ளுவேன் அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில்

1. பாவ இருள் என்னை வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய் என்னைத் தேற்றினார்

2. வாதை நோயும் வந்தபோது வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டித்துன்பமெல்லாம் நீக்கி மீட்டிட்டார்

3. சேற்றில் வீழ்ந்த என்னையவர் தூக்கியெடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவரத்தம் கொண்டு மாற்றினார்

4. தந்தை தாயும் நண்பருற்றார் யாவுமாகினார்
நிந்தை தாங்கி எங்குமவர் மேன்மை சொல்லுவேன்

5. இவ்வுலகப் பாடு என்னை என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக் காண காத்திருக்கிறேன

**எந்தன் மறைவிடமே உமக்கு ஸ்தோத்திரமையா**

எந்தன் மறைவிடமே உமக்கு ஸ்தோத்திரமையா
எந்தன் புகலிடமே உமக்கு ஸ்தோத்திரமையா
இயேசையா (2) உமக்கு கோடி கோடி ஸ்தோத்திரமையா

1.என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீரே
இக்கட்டுக்கெல்லாம் விலக்கினிரே
இரட்சணிய பாடல்கள் சூழ்ந்துகொள்ள செய்தீரே
உமக்கு கோடி ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரம் இயேசு நாதா
ஸ்தோத்திரம் இயேசு ராஜா

2.என் மேல் உம் கண்களை வைத்தீரையா
ஆலோசனை தினம் தருகின்றீரே
நடக்கும் வழிதனை காட்டுகிறீர்
உமக்கு கோடி ஸ்தோத்திரமே
ஸ்தோத்திரம் இயேசு நாதா
ஸ்தோத்திரம் இயேசு ராஜா

## எந்நாளுமே துதிப்பாய்

எந்நாளுமே துதிப்பாய் – என்னாத்துமாவே, நீ
எந்நாளுமே துதிப்பாய்!

இந்நாள் வரையிலே உன்னதனார் செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவு மறவாது, – எந்நா

1. பாவங்கள் எத்தனையோ, – நினையா திருந்தாருன்
பாவங்கள் எத்தனையோ?
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில் வைத்த மகா தய வைஎண்ணி. – எந்நா

2. எத்தனையோ கிருபை, – உன்னுயிர்க்குச் செய்தாரே,
எத்தனையோ கிருபை?
நித்தமுனைமுடி சூட்டினதுமன்றி,
நேயமதாக ஜீவனை மீட்டதால். – எந்நா

3. நன்மையாலுன் வாயை – நிறைத்தாரே, பூர்த்தியாய்
நன்மையாலுன் வாயை@
உன்வயது கழுகைப்போல் பலங்கொண்டு,
ஓங்கு இளமைபோ லாகவே செய்ததால். – எந்நா

**எனக்காய் ஜீவன் விட்டவரே**

1. எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னை சந்திக்க வந்திடுவாரே

இயேசு போதுமே இயேசு போதுமே
எந்த நாளிலுமே எந்நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே

2. பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன் செல்லவே
உலகமும் மாமிசமும் மயங்கிட்டாலும்
மயங்கிடாமல் முன் செல்லவே

3. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவை நிதம் தேற்றிடுவார்
மரணப் பள்ளத்தாக்கில் காத்திடுவார்

4. மனிதர் என்னைக் கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐஸ்வரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளி விட்டாலும்

## என் ஆத்தும நேச மேய்ப்பரே

1. என் ஆத்தும நேச மேய்ப்பரே
என் உள்ளத்தின் ஆனந்தமே
இன்னும் உம்மை கிட்டி சேர நான்
வாஞ்சையோடு சமீபிக்கிறேன்

பேசும் (3) ஜெபம் செய்யும்போது
ஆண்டவர் பிரியமானதை இப்போ
காட்டும் செய்ய ஆயத்தம் - 2

2. மெய் மீட்பருக்கு கீழ்ப்படிவோர்;
தன் ஆத்துமத்தைத் தேற்றும் இடம்;
அடியேனும் பெற அருள்வீர்
அப்பனே விண்ணப்பம் கேட்டிடும்

3. பாவிகட்கு உமது அன்பை
என் நடையால் காட்டச் செய்யும்
கல்வாரி ஆவியாலென் உள்ளத்தைப்
போரில் வெல்ல அபிஷேகியும்

4. என் ஜீவிய நாட்களெல்லாம்
நீர் சென்ற பாதையில் செல்வேன்
ஆசித்துத் தாரேன் எனதெல்லாம்
மீட்பரே வல்லமை தந்திடும்

**என் இயேசு ராஜாவுக்கே**

என் இயேசு ராஜாவுக்கே
எந்நாளும் ஸ்தோத்திரம்
என்னோடு வாழ்பவர்க்கே
எந்நாளும் ஸ்தோத்திரம்

1. கர்த்தாவே நீர் செய்த நன்மைகளை
நித்தமும் நினைக்கிறேன்
முழு உள்ளத்தோடு உம் நாமம்
பாடிப் புகழுவேன் - நான்

2. நெருக்கப்பட்டேன் தள்ளப்பட்டேன்
நேசர் நீர் அணைத்தீரே
கைவிடப்பட்டு கதறினேன்
கர்த்தர் நீர் தேற்றினீர்...ஆ...ஆ

3. இனி நான் வாழ்வது உமக்காக
உமது மகிமைக்காக
உம் அன்பை எடுத்துச் சொல்லுவேன்
ஓயாமல் பாடுவேன் - நான்

4. பாவங்கள் அனைத்தும் மன்னித்தீரே
நோய்களை சுகமாக்கினீர்
எனது ஜீவனை அழிவில் நின்று
காத்து இரட்சித்தீரே...ஆ...ஆ

## என் இயேசுவே! உம்மையே நான் நேசிக்கிறேன்

1. என் யேசுவே! உம்மையே நான் நேசிக்கிறேன்
வேறெந்த வீண்வாழ்வையும் நாடாதிருப்பேன்
உம்மாலே மாநன்மையை நான் கண்டடைந்தேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

2. இப்பாவியின் பேரில் முந்தி நேசம் வைத்தீர்
நீர் ப்ராணத் தியாகம் செய்து மீட்டுக்கொண்டீர்
முட்க்ரீடமும் ஐங்காயமும் த்யானிக்கிறேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

3. பேரன்பின் சொரூபி! உம்மைப் போற்றுகிறேன்
எப்போதும் உம்மண்டை தங்க வாஞ்சிக்கிறேன்
என் ஜீவன் போனாலுங்கூட நீங்கமாட்டேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

4. பேரின்ப மேலோகத்தில் ஆனந்தங்கொள்வேன்
நீடூழி உம்முகம் கண்டு ஸ்தோத்திரிப்பேன்
எப்பாவமில்லாமலும் நான் வாழ்த்தல் செய்வேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

**என் உயிரான உயிரான உயிரான இயேசு**

என் உயிரான உயிரான உயிரான இயேசு
என் உயிரான இயேசு என் உயிரோடு கலந்தீர்
என் உயிரே நான் உம்மைத் துதிப்பேன்

1. உலகமெல்லாம் மறக்குதையா!
உணர்வு எல்லாம் இனிக்குதையா
உம் நாமம் துதிக்கையிலே இயேசையா
உம் அன்பை ருசிக்கையிலே

2. உம் வசனம் எனக்கு உணவாகும்
உடலுக்கெல்லாம் மருந்தாகும்
இரவும் பகலுமையா!
உம் வசனம் தியானிக்கிறேன்

3. உம் திரு நாமம் உலகத்திலே
உயர்ந்த அடைக்கல அரண்தானே
நீதிமான் உமக்குள்ளே ஓடி
சுகமாய் இருப்பேனே

**என் ஜீவன் உம்மிலே**

என் ஜீவன் உம்மிலே
என் பெலன் உம்மிலே
நம்பிக்கை உம்மிலே
உம்மில் மட்டும்

என் ஜீவனுடன் துதிப்பேன்
என் பெலத்துடனே துதிப்பேன்
என் ஆவியோடும் உண்மையோடும்
பணிந்து துதித்திடுவேன்

## என் யேசுவே! உம்மையே நான் நேசிக்கிறேன்

1. என் யேசுவே! உம்மையே நான் நேசிக்கிறேன்
வேறெந்த வீண்வாழ்வையும் நாடாதிருப்பேன்
உம்மாலே மாநன்மையை நான் கண்டடைந்தேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

2. இப்பாவியின் பேரில் முந்தி நேசம் வைத்தீர்
நீர் ப்ராணத் தியாகம் செய்து மீட்டுக்கொண்டீர்
முட்க்ரீடமும் ஐங்காயமும் த்யானிக்கிறேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

3. பேரன்பின் சொரூபி! உம்மைப் போற்றுகிறேன்
எப்போதும் உம்மண்டை தங்க வாஞ்சிக்கிறேன்
என் ஜீவன் போனாலுங்கூட நீங்கமாட்டேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

4. பேரின்ப மேலோகத்தில் ஆனந்தங்கொள்வேன்
நீடூழி உம்முகம் கண்டு ஸ்தோத்திரிப்பேன்
எப்பாவமில்லாமலும் நான் வாழ்த்தல் செய்வேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

**என்ன என் ஆனந்தம்!**

என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்!
இயம்பலாகாதே
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்
மன்னித்து விட்டாரே

1. கூடுவோம் ஆடுவோம் பாடுவோம் நன்றாய்
மகிழ் கொண்டாடுவோம்!
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம்

2. பாவங்கள், சாபங்கள், கோபங்கள் எல்லாம்
பரிகரித்தாரே
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே

3. அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை எங்களுக்கு
அருளினதாலே
நிச்சயம் சுவாமி பற்றியே சாட்சி
பகரவேண்டியதே

4. வெண்ணங்கி பொன்முடி வாத்தியம் மேல்வீட்டில்
ஜெயக்கொடியுடனே
மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற
மன்னனைத் ஸ்தோத்தரிப்போம்

**என்ன பாக்கியம், எவர்க்குண்டு இந்தச் சிலாக்கியம்?**

பல்லவி
என்ன பாக்கியம், எவர்க்குண்டு
இந்தச் சிலாக்கியம்?

அனுபல்லவி
விண்ணவரும், புவிமேவும் முனிவர்களும்,
மன்னவருங் காணா மகிபனை யான் கண்டேன்; - என்

சரணங்கள்
1. வானகந் தானோ, - அல்லதிது – வையகந் தானோ?
ஆனகம் சென்று எழுந்த அரும்பொருள்
கானகந் தன்னில் என் கையில் அமர்ந்து;
- என்ன

2. சாமியைக் கண்டேன், - மகானந்தம் - சாலவுங்கொண்டேன்,
காமரு தேங்கனி வாய்கள் துடிப்பதும்,
கண்ணும் மனமும் களிக்க விழிப்பதும்;
- என்ன

3. அன்னமும் நீயே; - கிடைத்தற்கருஞ் சொன்னமும் நீயே;
மின்னறு மேகத் திருக்கை துறந்தையோ?
மேதினி தன்னை ரட்சிக்கப் பிறந்தையோ?
- என்ன

## என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்

என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்,
ஏற்றுக் கொள்ளும், யேசுவே.

அன்னை தந்தை உந்தம் சன்னதி முன்னின்று
சொன்ன வாக்கத்தத்த மல்லாது, இப்போது - என்னை

1. அந்தகாரத்தி னின்றும், பவப் பேய்
அடிமைத் தனத்தி னின்றும்
சொந்த ரத்தக் கிரயத்தால் எனை மீட்ட
எந்தையே, உந்தனுக்கிதோ! படைக்கிறேன் - என்னை

2. ஆத்ம சரீரமதை உமக்கு
ஆதீன மாக்கி வைத்தேன்.
பாத்ரமதாய் அதை பாவித்துக் கொள்ளக்
காத்திருக்கின்றேன், கருணைசெய், தேவா - என்னை

3. நீதியி னாயுதமாய் அவயவம்
நேர்ந்து விட்டேன் உமக்கு,
ஜோதி பரிசுத்த ராலய மாகவே
சொந்தமாய்த் தந்தேன் என்றன் சரீரத்தை - என்னை

## என்னை மறவா இயேசுநாதா

என்னை மறவா இயேசுநாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

1. வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள்
வரைந்தெனக்காய் தந்ததாலே ஸ்தோத்திரம்
ஆபத்திலே அரும் துணையே
பாதைக்கு நல்ல தீபமதே

2. பயப்படாதே வலக்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே ஸ்தோத்திரம்
பாசம் என்மேல் நீர் வைத்ததினால்
பறிக்க இயலாதெவருமென்னை

3. தாய் தன் சேயை மறந்து விட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம்
வரைந்தீரன்றோ உம் உள்ளங்கையில்
உன்னதா எந்தன் புகலிடமே

4. உன்னைத் தொடுவோன் என் கண்மணியைத்
தொடுவதாக உரைத்ததாலே ஸ்தோத்திரம்
அக்கினியின் மதிலாக
அன்பரே என்னைக் காத்திடுமே

5. என்னை முற்றும் ஒப்புவித்தேன்
ஏற்று என்றும் நடத்துவீரே ஸ்தோத்திரம்
எப்படியும் உம் வருகையிலே
ஏழை என்னைச் சேர்த்திடும

**என்றென்றும் ஜீவிப்போர்**

1. என்றென்றும் ஜீவிப்போர்
அதரிசனர்
எட்டா ஒளியிலுள்ளோர் சர்வஞானர்
மா மேன்மை மகத்துவர்
அநாதியோராம்
சர்வவல்லோர் வென்றோர்
நாமம் போற்றுவோம்.

2. ஓய்வோ துரிதமோ இன்றி
ஒளிபோல்
ஒடுங்கா பொன்றா சக்தியோடாள்வதால்
வான் எட்டும் மலைபோல் உம்
நீதி நிற்கும்
அன்பு நன்மை பெய்யும்
உந்தன் மேகமும்.

3. பேருயிர் சிற்றுயிர்
ஜீவன் தேவரீர்
யாவர்க்குள்ளும் உய்வீர்
மெய்யாம் ஜீவன் நீர்
மலர் இலைபோல்
மலர்வோம் செழிப்போம்
உதிர்வோம் சாவோம்
நீரோ மாறாதோராம்.

4. மா மாட்சி பிதா தூய
ஜோதி தந்தாய்
தாழுவர் உம் தூதர்
மா வணக்கமாய்
துதிப்போம் மகத்தாய்க்
காணத் தோற்றுவீர்
கண் கூசும் ஜோதியாம்
ஜோதி தேவரீர்.

**எப்படி பாடுவேன் நான்**

எப்படி பாடுவேன் நான் - என்
இயேசு எனக்குச் செய்ததை
ஆயுள் முழுவதும் என் கர்த்தருக்காய்
ஆத்தும ஆதாயம் செய்வேன் - 2

1. ஒரு வழி அடையும் போது
புதவழி திறந்த தேவா
திறந்த வாசலை என் வாழ்க்கையில்
அடைக்காத ஆண்டவரல்லோ

2. எப்பக்கம் நெருக்கப்பட்டும்
ஒடுங்கி நான் போவதில்லை
அப்பனின் மார்பினில் சாய்ந்தென்றுமே
எப்போதும் பாடிடுவேன்

**எருசலேம் என் ஆலயம்,**

1.எருசலேம் என் ஆலயம்,
ஆசித்த வீடதே@
நான் அதைக் கண்டு பாக்கியம்
அடையவேண்டுமே.

2.பொற்றளம் போட்ட வீதியில்
எப்போதுலாவுவேன்?
பளிங்காய்த் தோன்றும் ஸ்தலத்தில்
எப்போது பணிவேன்?

3.எந்நாளும் கூட்டம் கூட்டமாய்
நிற்கும் அம்மோட்சத்தார்
கர்த்தாவைப் போற்றிக் களிப்பாய்
ஓய்வின்றிப் பாடுவார்.

4.நானும் அங்குள்ள கூட்டத்தில்
சேர்ந்தும்மைக் காணவே
வாஞ்சித்து, லோக துன்பத்தில்
களிப்பேன், இயேசுவே.

5.எருசலேம் என் ஆலயம்,
நான் உன்னில் வாழுவேன்@
என் ஆவல், என் அடைக்கலம்,
எப்போது சேருவேன்?

## எல்லாம் இயேசுவே

எல்லாம் இயேசுவே, -
எனக்கெல்லாமேசுவே.

தொல்லைமிகு மிவ்வுலகில் -
துணை இயேசுவே

1.ஆயனும் சகாயனும் நேயனும் உபாயனும்,
நாயனும் எனக்கன்பான ஞானமண வாளனும்,

2.தந்தைதாய் இனம்ஜனம் பந்துளோர் சிநேகிதர்,
சந்தோட சகலயோக சம்பூரண பாக்யமும்,

3.கவலையில் ஆறுதலும், கங்குலிலென் ஜோதியும்,
கஷ்டநோய்ப் படுக்கையிலே கைகண்ட அவிழ்தமும்,

4.போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளியுமென் தோழனும்,

5.அணியும் ஆபரணமும் ஆஸ்தியும் சம்பாத்யமும்
பிணையாளியும் மீட்பருமென் பிரிய மத்தியஸ்தனும்

6.ஆன ஜீவ அப்பமும் ஆவலுமென் காவலும்
ஞானகீதமும் சதுரும் நாட்டமும் கொண்டாட்டமும்.

## எல்லாம் என் இயேசுவே

எல்லாம் என் இயேசுவே எல்லாம் அவரே
சிறிதும் பெரிதாயினும் எல்லாம் அவரே
புதிதாய் என் ஜீவியம் மாற்றுகின்றார்
எனக்கெல்லாம் இயேசுவே
எனக்கென்றுமே

He is my everything He is my all
He is my everything Both great and small
He makes my life complete Makes everything new
He is my everything Now how about you?

## எல்லாருக்கும் மா உன்னதர்

1. எல்லாருக்கும் மா உன்னதர்,
கர்த்தாதி கர்த்தரே,
மெய்யான தெய்வ மனிதர்,
நீர் வாழ்க, இயேசுவே.

2. விண்ணில் பிரதானியான நீர்
பகைஞர்க்காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்
நீர் வாழ்க, இயேசுவே.

3. பிசாசு, பாவம், உலகை
உம் சாவால் மிதித்தே,
ஜெயித்தடைந்தீர் வெற்றியை
நீர் வாழ்க, இயேசுவே.

4. நீர் வென்றபடி நாங்களும்
வென்றேறிப் போகவே
பரத்தில் செங்கோல் செலுத்தும்
நீர் வாழ்க, இயேசுவே.

5. விண்ணோர்களோடு மண்ணுள்ளோர்
என்றைக்கும் வாழவே,
பரம வாசல் திறந்தோர்
நீர் வாழ்க, இயேசுவே.

## ஏசுவையே துதிசெய் நீ மனமே

ஏசுவையே துதிசெய் நீ மனமே
ஏசுவையே துதிசெய் - கிறிஸ்தேசுவையே

1. மாசணுகாத பராபர வஸ்து
நேசகுமாரன் மெய்யான கிறிஸ்து

2. அந்தரவான் தரையுந் தரு தந்தன்
சுந்தர மிகுந்த சவுந்தரா நந்தன்

3. எண்ணின காரியம் யாவு முகிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க

## ஏதேனில் ஆதி மணம்

1. ஏதேனில் ஆதி மணம்
உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம்
மாறாதிருக்குமே.

2. இப்போதும் பக்தி யுள்ளோர்
விவாகம் தூய்மையாம்;
மூவர் பிரசன்னமாவார்,
மும்முறை வாழ்த்துண்டாம்.

3. ஆதாமுக்கு ஏவாளை
கொடுத்த பிதாவே,
இம்மாப்பிள்ளைக்கிப்பெண்ணை
கொடுக்க வாருமே.

4. இரு தன்மையும் சேர்ந்த
கன்னியின் மைந்தனே,
இவர்கள் இரு கையும்
இணைக்க வாருமே.

5. மெய் மணவாளனான
தெய்வ குமாரர்க்கே
சபையாம் மனையாளை
ஜோடிக்கும் ஆவியே.

6. நீரும் இந்நேரம் வந்து,
இவ்விரு பேரையும்
இணைத்து, அன்பாய் வாழ்த்தி,
மெய்ப் பாக்கியம் ஈந்திடும்.

7. கிறிஸ்துவின் பாரியோடே
எழும்பும் வரைக்கும்
எத்தீங்கில் நின்றும் காத்து,
பேர் வாழ்வு ஈந்திடும்.

## ஓ! தேவனுக்கு மகிமை!

ஓ! தேவனுக்கு மகிமை!
தூக்கியெடுத்தார்
என்னை தூக்கியெடுத்தார் இயேசு
தம் கரத்தை நீட்டி இரட்சித்தாரே
ஓ! தேவனுக்கு மகிமை!
நான் இயேசுவை நேசிக்கிறேன்
மேன்மேலும் நேசிக்கிறேன்
அக்கரையில் நான் நின்று அவரை
என்றென்றும் வாழ்த்துவேன்

## ஒருநாள் வருவார் இராஜாதி இராஜன்

ஒருநாள் வருவார் இராஜாதி இராஜன்
ஆயத்தமாகிடுவோம்

நம் கால மனிதர் இயேசுவை காண ஆயத்தமாகிடுவோம்
நீ ஆயத்தமாகு ஆயத்தப்படுத்து வருகை மிக சமீபம்

1. தீபத்தில் எண்ணெய் வற்றாது காத்து
ஆயத்தமாகிடுவோம் தாலந்தைத் தரையில்
புதைத்துவிடாமல் ஆயத்தமாகிடுவோம் - நம் கால

2. முந்தினோர் அநேகர் பிந்தினோராவார்
ஆயத்தமாகிடுவோம் முடிவு பரியந்தம்
நிற்பவர் மகிழ்வார் ஆயத்தமாகிடுவோம் - நாம் கால

3. தேடாதே உனக்குப் பெரிய காரியம்
ஆயத்தமாகிடுவோம் தேடு தொழுவத்தில்
இல்லாத ஆடுகளை ஆயத்தமாகிடுவோம் - நம் கால

## ஓ பெத்லெகேமே சிற்றூரே

1. ஓ பெத்லெகேமே சிற்றூரே
என்னே உன் அமைதி!
அயர்ந்தே நித்திரை செய்கையில்
ஊர்ந்திடும் வான் வெள்ளி
விண் வாழ்வின் ஜோதி தோன்றிற்றே
உன் வீதியில் இன்றே
நல்லோர் நாட்டம் பொல்லார் கோட்டம்
உன் பாலன் இயேசுவே.

2. கூறும் ஓ விடி வெள்ளிகாள்
இம்மைந்தன் ஜன்மமே
விண் வேந்தர்க்கு மகிமையே
பாரில் அமைதியாம்
மா திவ்விய பாலன் தோன்றினார்
மண் மாந்தர் தூக்கத்தில்
விழித்திருக்க தூதரும்
அன்போடு வானத்தில்.

**ஓசன்னா உன்னதத்தில் ஓசன்னா**

ஓசன்னா (2) உன்னதத்தில் ஓசன்னா (2)
உம்மை உயர்த்திடுவோம்
துதி நிறைவுடன்
கர்த்தரே நீர் உயர்ந்திடுவீர்
ஓசன்னா இராஜ இராஜனே
மகிமை (2) மகிமை ராஜ ராஜனுக்கே (2)

Hosannah (2) Hosannah in the highest (2)
Lord we lift up Your Name
With our hearts full of praise
Be exalted oh Lord our God
Hosannah in the highest
Glory (2) Glory to the king of kings (2)

## ஓசன்னா பாடுவோம், ஏசுவின் தாசரே

ஓசன்னா பாடுவோம், ஏசுவின் தாசரே,
உன்னதத்திலே தாவீது மைந்தனுக்கு ஓசன்னா!

1. முன்னும் பின்னும் சாலேம் நகர் சின்னபாலர்
பாடினார்,
அன்றுபோல இன்றும் நாமும் அன்பாய்த்துதி பாடுவோம்

2. சின்ன மறி மீதில்ஏறி, அன்பர் பவனி போனார்
இன்னும் என் அகத்தில் அவர் என்றும் அரசாளுவார்.

3. பாவமதைப் போக்கவும் இப்பாவியைக் கைதூக்கவும்,
பாசமுள்ள ஏசையாப் பவனியாகப் போகிறார்.

4. பாலர்களின் கீதம் கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்
ஜாலர் வீணையோடுபாடித் தாளைமுத்தி செய்குவோம்.

5. குருத்தோலை ஞாயிற்றில் நம் குருபாதம் பணிவோம்,
கூடி அருள் பெற்றுநாமும் த்ரியேகரைப் போற்றுவோம்.

## ஓசன்னா பாலர் பாடும்

ஓசன்னா பாலர் பாடும் ராஜாவாம் மீட்பர்க்கே
மகிமை, புகழ், கீர்த்தி எல்லாம் உண்டாகவே

1. கர்த்தாவின் நாமத்தாலே வருங் கோமானே, நீர்
தாவீதின் ராஜா மைந்தன், துதிக்கப்படுவீர்

2. உன்னத தூதர் சேனை விண்ணில் புகழுவார்,
மாந்தர், படைப்பு யாவும் இசைந்து போற்றுவார்.

3. உம்முன்னே குருத்தோலை கொண்டேகினார்போலும்,
மன்றாட்டு, கீதம், ஸ்தோத்திரம் கொண்டும்மைச்
சேவிப்போம்

4. நீர் பாடுபடுமுன்னே பாடினார் ய+தரும்,
உயர்த்தப்பட்ட உம்மை துதிப்போம் நாங்களும்.

5. அப்பாட்டைக் கேட்டவண்ணம் எம் வேண்டல் கேளுமே,
நீர் நன்மையால் நிறைந்த காருணிய வேந்தரே.

## ஒப்பில்லாத திவ்விய அன்பே

1. ஒப்பில்லாத திவ்விய அன்பே
மோட்சானந்தா தேவரீர்
எங்கள் நெஞ்சில் வாசம்செய்தே
அருள் பூர்த்தியாக்குவீர்
மா தயாள இயேசு நாதா
அன்பு மயமான நீர்
நைந்த உள்ளத்தில் இறங்கி
உம் ரட்சிப்பால் சந்திப்பீர்

2. உமது நல் ஆவி தாரும்
எங்கள் நெஞ்சு பூரிப்பாய்
உம்மில் சார நீரே வாரும்
சுத்த அன்பின் வடிவாய்
புுhவ ஆசை எல்லாம் நீக்கி
ஆடியாரை ரட்சியும்
விசுவாசத்தைத் துவக்கி
முடிப்பவராய் இரும்

**கட்டும் கர்த்தாவே நீர்**

கட்டும் கர்த்தாவே நீர்
கட்டும் கர்த்தாவே
அறுந்து போகாத கயிற்றால்
கட்டும் கர்த்தாவே நீர்
கட்டும் கர்த்தாவே நீர்
கட்டும் எங்களை அன்பால்

தேவன் ஒருவராம்
இராஜனும் ஒருவரே
சரீரம் ஒன்றுதானே
பாடுவோம் ஆதலால்

**கந்தை துணிகளில் தவழ்ந்திடும் பாலன்**

சதபா – சதபா – ரிசகா – ரிசகா – நிக – சரி – கச – பத – மகரிசா
சரிகபா – கபதரிசா

கந்-தை துணிகளில் தவழ்ந்திடும் பா-லன்
சிந்-தை மகிழ்ந்-திடவே சங்-கீதம் பா-டிடுவோ-ம் (2)

1. பொன்மேனி பா-லகன் பிறந்தா-ர் புல்லணை மீ-தினில்
பிறந்தா-ர் (2)
பாவங்கள் நீக்கிட பிறந்தா-ர் பரகதி சேர்த்திட பிறந்தா-ர்
- சதபா …. கந்தை

2. மன்னாதி மன்-னன் பிறந்தா-ர் மரியன்னை மகவாய்
பிறந்தா-ர் (2)
ஏழையின் ரூபமாய் பிறந்தா-ர் உலகம் மகிழ்ந்திட பிறந்தா-ர்
- சதபா …. கந்தை

## கன்னி பெற்ற பாலனே

கன்னி பெற்ற பாலனே
கண் உறங்கு
விண்ணிண்; தேவ மைந்தனே
விழி உறங்கு
ஆரிராரிரரோ (4)

1. பெத்லகேம் ஊர்தனிலே
தேவ புத்திரன் தோன்றினாரே (2)
உத்தம சத்தியரும்
மனம் மெத்த மகிழ்ந்தனரே (2)
- கன்னி

2. ஆயர்கள் ஓடி வர
மூன்று சாஸ்திரிகள் தேடி வர (2)
பாலகன் இயேசு கண்டு
அவர் பாதம் பணிந்தனரே (2)
- கன்னி

**கரையோர கடலலை சத்தம் - காதோர காத்துல நித்தம்**

கரையோர கடலலை சத்தம் - காதோர காத்துல நித்தம்
சொல்லுது ஒரு அற்புத செய்தி மெய்யான செய்தி..
சொல்லுது ஒரு அற்புத செய்தி மெய்யான செய்தி..

1. வருஷமு இரண்டாயிரமுமாச்சி அடங்கல அவியல இந்த பேச்சி
வருஷமு இரண்டாயிரமுமா– –ச்சி அடங்கல அவியல இந்த பேச்சி
மரணத்துக்கப்பாலே நிசமாவே ஒருவாழ்க்கை இருக்குதென்ற ராசாவே (2)
- கரையோர

2. கெட்டுப்போன எனக்காக பிறந்தாரு குற்றமில்லா இரத்தத்தையும் சிந்தினாரு
கெட்டுப்போன எனக்காக பிறந்தா– –ரு குற்றமில்லா இரத்தத்தையும் சிந்தினாரு
பட்டுப்போன என் வாழ்வு மலர்ந்திருச்சி - இயேசு உயிர்த்தெழுந்தார் என்ன நம்பிக்கைவைச்சி (2)
- கரையோர

3. திரும்பவும் வருவேன்னு சொன்னாருங்க சத்திய வேதத்தில் உள்ள செய்திங்க
திரும்பவும் வருவேன்னு சொன்னாருங் – –க சத்திய வேதத்தில் உள்ள செய்திங்க
வாழ்ந்தாலும் இயேசுவுக்காய் வாழ்ந்திருப்பேன் உயிர்போனாலும் அவரோடு சேர்ந்திருப்பேன் (2)
- கரையோர

## கர்த்தனே எம் துணையானீர்

கர்த்தனே எம் துணையானீர்
நித்தமும் என் நிழலானீர்
கர்த்தனே என் துணையானீர்

1. எத்தனை இடர் வந்து சேர்ந்தாலும்
கர்த்தனே அடைக்கலமாயினார் - 2
மனு மக்களில் இவர் போலுண்டோ
விண் உலகிலும் இவர் சிறந்தவர்

2. பாவி என்றென்னைப் பலர் தள்ளினார்
ஆவி இல்லை என்றிகழ்ந்தும் விட்டார் - 2
இராஜா உம் அன்பு என்னைக் கண்டது
உம்மைப்போல் ஐயா எங்கும் கண்டதில்லை

3. சுற்றத்தாரும் காலத்தில் குளிர்ந்திட்டார்
நம்பினோரும் எதிராக வந்திட்டார் - 2
கொள்கை கூறியே பலர் பிரிந்திட்டார்
ஐயா உம்மைப்போல் நான் எங்கும் கண்டதில்லை

4. ஆயிரம் நாவுகள் நீர் தந்தாலும்
இராஜனே உம்மைப் பாடக் கூடுமோ?
ஜீவனை உமக்களிக்கின்றேனே
உம்மைப்போல் ஐயா எங்கும் கண்டதில்லை

## கர்த்தரின் கை குறுகவில்லை

1. கர்த்தரின் கை குறுகவில்லை
கர்த்தரின் வாக்கு மாறிடாதே
சுத்தர்களாய் மாறிடவே
சுதன் அருள் புரிந்தனரே

விசுவாசியே நீ பதறாதே
விசுவாசியே நீ கலங்காதே
விசுவாசித்தால் நீதிமான்
இன்றும் என்றும் பிழைப்பான்

2. பரிசுத்த ஆவியானவரே
பரிசுத்த பாதையில் நடத்திடுவார்
கிருபையிலே வளர்ந்திடுவோம்
வரங்களை நாடிடுவோம்

3. திருச்சபையே கிரியை செய்வாய்
திவ்விய அன்பில் பெருகிடுவாய்
தலைமுறையாய் தலைமுறையாய்
தழைத்திட அருள் புரிவார்

4. நெஞ்சமே நீ அஞ்சிடாதே
தஞ்சம் இயேசு உன் அரணே
தம் ஜனத்தை சீக்கிரமாய்த்
தம்முடன் சேர்த்துக்கொள்வார்

5. மேகம் போன்ற வாக்குத்தத்தம்
சூழ நின்றே காத்திருக்க
விசுவாசத்தால் உரிமை கொள்வாய்
விரைந்து முன் ஏகிடுவாய்

**கர்த்தரின் பந்தியில் வா**

கர்த்தரின் பந்தியில் வா. - சகோதரா
கர்த்தரின் பந்தியில் வா.

கர்த்தர் அன்பாய்ச் சொந்த ரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப் ப+ரணமாய் எண்ணி - கர்த்தரின்

1. ஜீவ அப்பம் அல்லோ? - கிறிஸ்துவின் திருச் சரீரம் அல்லோ?
பாவ மனங் கல்லோ? - உனக்காய்ப் பகிரப்பட்ட தல்லோ?
தேவ குமாரனின் ஜீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்றும் பிழைத்திட - கர்த்தரின்

2. தேவ அன்பைப் பாரு - கிறிஸ்துவின் சீஷர் குறை தீரு.
பாவக் கேட்டைக் கூறு - ராப்போசன பந்திதனில் சேரு.
சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே - கர்த்தரின்

3. அன்பின் விருந்தாமே - கர்த்தருடன் ஐக்யப் பந்தி யாமே
துன்பம் துயர் போமே .. இருதயம் சுத்த திடனாமே.
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லாதிப்போதே வா - கர்த்தரின்

## கர்த்தரின் மாம்சம் வந்துட் கொள்ளுங்கள்

1. கர்த்தரின் மாம்சம் வந்துட் கொள்ளுங்கள்
சிந்துண்ட ரத்தம் பானம் பண்ணுங்கள்

2. தூய ரத்தத்தால் ரட்சிப்படைந்தோம்
நற்பெலன் பெற்று துதி ஏற்றுவோம்

3. தெய்வ குமாரன், மீட்பின் காரணர்
தம் சிலுவையால் வெற்றி பெற்றவர்.

4. தாமே ஆசாரி, தாமே பலியாய்
தம்மைச் செலுத்தினார் எல்லார்க்குமாய்.

5. பண்டை ஏற்பாட்டின் பலிகள் எல்லாம்
இந்த ரகசியத்தின் முன்குறிப்பாம்

6. சாவின் கடூர வன்மை மேற்கொண்டார்
தம் பக்தருக்கருள் கடாட்சிப்பார்

7. உண்மை நெஞ்சோடு சேர்ந்து வாருங்கள்
ரட்சிப்பின் பாதுகாப்பை வாங்குங்கள்

8. தம் பக்தரை ஈங்காண்டு காக்கிறார்
அன்பர்க்கு நித்திய ஜீவன் ஈகிறார்.

9. விண் அப்பத்தாலே திருப்தி செய்கிறார்
ஜீவ தண்ணீரால் தாகம் தீர்க்கிறார்.

10. எல்லாரும் தீர்ப்புநாளில் வணங்கும்
அல்பா ஒமேகா நம்மோடுண்டிங்கும்.

## கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்

கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்
கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்
கைவிடா காத்திடும் பரமனின்
கரங்களை நாம் பற்றிக் கொள்வோம்

1. ஜீவதேவன் பின் செல்லுவோம்
ஜீவ ஒளிதனைக் கண்டடைவோம்
மனதின் காரிருள் நீங்கிடவே
மாசமாதானம் தங்கும்

2. உண்மை வழி நடந்திடும்
உத்தமனுக்கென்றும் கர்த்தர் துணை
கண்கள் அவன் மீது வைத்திடுவார்
கருத்தாய்க் காத்திடுவார்

3. உள்ளமதின் பாரங்களை
ஊக்கமாய் கர்த்தரிடம் சொல்லுவோம்
இக்கட்டு நேரத்தில் கூப்பிடுவோம்
இயேசு வந்தாதரிப்பார்

4. அன்புமிகும் அண்ணலிவர்
அருமை இயேசுவை நெருங்குவோம்
தம்மண்டை வந்தோரைத் தள்ளிடாரே
தாங்கி அணைத்திடுவார்

5. நீதிமானின் சிரசின்மேல்
நித்திய ஆசீர் வந்திறங்குமே
கிருபை, நன்மைகள் தொடருமே
கேட்பது கிடைக்குமே

6. இம்மைக்கேற்ற இன்பங்களை
நம்மை விட்டே முற்றும் அகற்றுவோம்
மாறாத சந்தோஷம் தேடிடுவோம்
மறுமை இராஜ்ஜியத்தில்

## கர்த்தர் ஆவி என்னில் அசைவாடிட

கர்த்தர் ஆவி என்னில் அசைவாடிட
தாவீதைப் போல் துதிப்பேன்
துதிப்பேன் துதிப்பேன்
தாவீதைப் போல் துதிப்பேன்

கர்த்தர் ஆவி என்னில் அசைவாடிட
தாவீதைப் போல் பாடுவேன்
பாடுவேன் பாடுவேன்
தாவீதைப் போல் பாடுவேன்

கர்த்தர் ஆவி என்னில் அசைவாடிட
தாவீதைப் போல் தட்டுவேன்
தட்டுவேன் தட்டுவேன்
தாவீதைப் போல் தட்டுவேன்

கர்த்தர் ஆவி என்னில் அசைவாடிட
தாவீதைப் போல் ஆடுவேன்
ஆடுவேன் ஆடுவேன்
தாவீதைப் போல் ஆடுவேன்

## கர்த்தர் என் பக்கமாகில்

1. கர்த்தர் என் பக்கமாகில்
எனக்கு பயம் ஏன்?
உபத்திரவம் உண்டாகில்
மன்றாடிக் கெஞ்சுவேன்;
அப்போதென்மேலே வந்த
பொல்லா வினை எல்லாம்
பலத்த காற்றடித்த
துரும்புபோல ஆம்.

2. என் நெஞ்சின் அஸ்திபாரம்
மேலான கர்த்தரே;
அதாலே பக்தர் யாரும்
திடன்கொள்வார்களே;
நான் ஏழைப் பலவீனன்,
வியாதிப்பட்டோனே;
அவரில் சொஸ்தம்இ ஜீவன்
சமஸ்தமும் உண்டே.

3. தெய்வாவி என்னில் தங்கி
என்னை நடத்தவே,
பயம் எல்லாம் அடங்கி
திடனாய் மாறுதே;
அப்பாவே என்று சொல்ல,
அவர் என் நெஞ்சுக்கே
ஆற்றல் சகாயம்செய்ய
என் ஆவி தேறுதே.

4. என் உள்ளமே களிக்கும்
துக்கிக்கவேண்டுமோ?
கர்த்தர் என்மேல் உதிக்கும்
பகலோன் அல்லவோ?
பரத்தில் வைக்கப்பட்ட
அநந்த பூரிப்பே
என் ஆவிக்கு பலத்த
திடன் உண்டாக்குமே.

## கர்த்தர் என்னை விசாரிப்பவர்

கர்த்தர் என்னை விசாரிப்பவர்
கர்த்தர் என்னை ஆதரிப்பவர்
கர்த்தர் என்னை உயர்த்துபவர்
கர்த்தர் என்னைத் தப்புவிப்பவர்.

1. பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு என்னை
அவர் நித்தம் நடத்திச் செல்வதால்
எந்தன் கவலை பாரத்தை முற்றும்
அவர் மீது வைத்திடுவேன் நான்.

2. தேவன் எந்தன் பட்சத்தில் இருக்க
மனிதன் எனக்கு என்னதான் செய்வான்?
எந்தன் கண்ணீரைத் தம் துருத்தியில்
அவரின் கணக்கில் வைத்துள்ளார் அல்லோ.

3. வலது கரத்தைப் பிடித்து என்னையும்
உனது துணை நான் என்று சொல்லி
வழக்காடுவோர் அனைவரையுமே
வெட்கப்பட்டு போகச் செய்வாரே.

4. தேவன் தமது ஐசுவரியத்தினால்
எந்தன் குறைகளை எல்லாமே
கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையில்
நிறைவாக்குவாரே கவலை ஏன்?

**கர்த்தர் நல்லவர் துதியுங்கள்**

1. கர்த்தர் நல்லவர் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
தேவாதி தேவனை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
கர்த்தாதி கர்த்தரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
அற்புதம் செய்பவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

மகிழ்ந்து பாடு ஹாலேலூயா
புகழ்ந்து பாடு ஹாலேலூயா
சேர்ந்து பாடு ஹாலேலூயா
போற்றி பாடு ஹாலேலூயா
அல்லேலூயா ஆமென்
களித்து பாடு ஹாலேலூயா
துதித்து பாடு ஹாலேலூயா
அல்லேலூயா ஆமென்

2. தாழ்வில் நினைத்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
விடுதலை தந்தவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
ஆகாரம் தருபவரை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
பரத்தின் தேவனை துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
…….மகிழ்ந்து பாடு
ஹாலேலூயா – (18 Times) (TWICE)

**கர்த்தர் நாமம் என் புகலிடமே**

கர்த்தர் நாமம் என் புகலிடமே
கருத்தோடு துதித்திடுவேன்

1. யெகோவாயீரே எல்லாமே பார்த்துக் கொள்வீர்
துதியுமக்கே என்றும் துதியுமக்கே

2. யெகோவாநிசியே எந்நாளும் வெற்றி தருவீர்
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே

3. யெகோவா ரஃபா சுகம் தரும் தெய்வமெ
துதியுமக்கே - என்றும் துதியுமக்கே

4. யெகோவா ரூபா - எங்கள் நல்ல மேய்ப்பரே
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே

5. யெகோவா ஷம்மா கூடவே இருக்கிறீர்
துதியுமக்கே - என்றும் துதியுமக்கே

6. யெகோவா ஷாலோம் சமாதானம் தருகின்றீர்
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே

## கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு

கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு
கலங்கித் தவிக்காதே
அவரே உன்னை ஆதரிப்பார்
அதிசயம் செய்வார்

1. நீதிமான் தள்ளாட விடமாட்டார்
நித்தமும் காத்து நடத்திடுவார்

2. நம்மைக் காக்கும் தேவனவர்
நமது நிழலாய் இருக்கின்றவர்

3. தகப்பனும் தாயும் கைவிட்டாலும்
அவரே நம்மை அணைத்துக் கொள்வார்

4. கர்த்தர் நம் சார்பில் இருக்கும்போது
நமக்கு எதிராய் நிற்பவன் யார்?

5. வாழ்வை கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்போம்
அவரே எல்லாம் வாய்க்கச் செய்வார்

6. என்றும் அவரில் மகிழ்ந்திருப்போம்
இதய விருப்பம் நிறைவேற்றுவார்

**கர்த்தாவின் ஜனமே கைத்தாளமுடனே**

கர்த்தாவின் ஜனமே கைத்தாளமுடனே
களிகூர்ந்து கீதம் பாடு
சாலேமின் ராஜh நம் சொந்தமானார்
சங்கீதம் பாடி ஆடு! அல்லேலுயா! அல்லேலுயா!

1. பாவத்தின் சுமையகற்றி – கொடும்
பாதாள வழி விலக்கி
பரிவாக நம்மைக் கரம் நீட்டிக் காத்த
பரிசுத்த தேவன் அவரே அல்லேலுயா!

2. நீதியின் பாதையிலே – அவர்
நிதம் நம்மை நடத்துகின்றார்
எது வந்த போதும் மாறாத இன்ப
புது வாழ்வைத் தருகின்றாரே! அல்லேலுயா!

**கர்த்தாவே யுகயுகமாய் எம் துணை ஆயினீர்**

1.கர்த்தாவே யுகயுகமாய் எம் துணை ஆயினீர்
நீர் இன்னும் வரும் காலமாய் எம் நம்பிக்கை ஆவீர்

2.உம் ஆசனத்தின் நிழலே பக்தர் அடைக்கலம்
உம் வன்மையுள்ள புயமே நிச்சய கேடகம்

3.பூலோகம் உருவாகியே, மலைகள் தோன்றுமுன்
சுயம்புவாய் என்றும் நீரே மாறா பராபரன்

4.ஆயிரம் ஆண்டு உமக்கு ஓர் நாளைப்போலாமே
யுகங்கள் தேவரீருக்கு ஓர் இமைக்கொப்பாமே

5.சாவுக்குள்ளான மானிடர் நிலைக்கவே மாட்டார்
உலர்ந்த பூவைப்போல் அவர் உதிர்ந்து போகிறார்

6.கர்த்தாவே, யுகயுகமாய் எம் துணை ஆயினீர்
இக்கட்டில் நற் சகாயராய் எம் நித்திய வீடாவீர்

## கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை

கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை
கண்கள் கலங்கிடுதே
கர்த்தா உம் பாடுகள் இப்போதும் நினைத்தால்
நெஞ்சம் நெகிழ்ந்திடுதே

1. கெத்சமனே பூங்காவிலே
கதறி அழும் ஓசை
எத்திசையும் தொனிக்கிறதே
எங்கள் மனம் திகைக்கின்றதே
கண்கள் கலங்கிடுதே

2. சிலுவையில் மாட்டி வதை;தனரோ
உம்மை செந்நிறம் ஆக்கினரோ
அப்போதும் அவர்காய் வேண்டினீரே
அன்போடு அவர்களை கண்டீரன்றோ
அப்பா உம் மனம் பெரிதே

3. எம்மையும் உம்மைபோல் மாற்றிடவே
உம் ஜீவன் தந்தீரன்றோ
என் தலை தரைமட்டும் தாழ்த்துகின்றேன்
தந்து விட்டேன் அன்பின் கரங்களிலே
ஏற்று என்றும் நடத்தும்

**களிப்புடன் கூடுவோம்**

1. களிப்புடன் கூடுவோம்,
கர்த்தரை நாம் போற்றுவோம்
அவர் தயை என்றைக்கும்
தாசரோடு நிலைக்கும்.

2. ஆதிமுதல் அவரே
நன்மை யாவும் செய்தாரே
அவர் தயை என்றைக்கும்
மாந்தர்மேலே சொரியும்.

3. இஸ்ரவேலைப் போஷித்தார்,
நித்தம் வழி காட்டினார்
அவர் தயை என்றைக்கும்
மன்னாபோலே சொரியும்.

4. வானம் பூமி புதிதாய்
சிஷ்டிப்பாரே ஞானமாய்
அவர் தயை என்றைக்கும்
அதால் காணும் யாருக்கும்.

**காக்கும் கரங்கள் உண்டெனக்கு**

1. காக்கும் கரங்கள் உண்டெனக்கு
காத்திடுவார் கிருபையாலே
அல்லேலூயா பாடிப்பாடி
அலைகளை நான் தாண்டிடுவேன்

நம்பி வா இயேசுவை!
நம்பி வா இயேசுவை!

2. நிந்தனைகள் போராட்டம் வந்தும்
நீதியின் தேவன் தாங்கினாரே
நேசக்கொடி என் மேல் பறக்க
நேசர் உமக்காய் ஜீவித்திடுவேன்

3. கன்மலைகள் பெயர்க்கும் படியாய்க்
கர்த்தர் என்னைக் கரம் பிடித்தார்
காத்திருந்து பெலன் அடைந்து
கழுகு போல எழும்பிடுவேன்

4. அத்திமரம் துளிர்விடாமல்
ஆட்டுமந்தை முதல் அற்றாலும்
கர்த்தருக்குக் காத்திருப்போர்
வெட்கப்பட்டுப் போவதில்லை

## காரிருள் வேளையில் கடுங்குளிர் நேரத்தில்

காரிருள் வேளையில் கடுங்குளிர் நேரத்தில்
ஏழைக் கோலம தாய்
பாரினில் வந்த மன்னவனே உம்
மாதயவே தயவு

1. விண்ணுலகில் சிம்மாசனத்தில்
தூதர்கள் பாடிடவே
வீற்றிருக்காமல் மானிட னானது
மாதயவே தயவு
- காரிருள்

2. விண்ணில் தேவனுக்கே மகிமை
மண்ணில் சமாதானம்
மனுடரில் பிரியம் மலர்ந்தது உந்தன்
மாதயவே தயவு
- காரிருள்

3. விந்தை விதந்தனில் வந்தவனே,
வானவனே, நாங்கள்
தந்தையின் அன்பைக் கண்டதும் உந்தன்
மாதயவே தயவு
- காரிருள்

**காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்**

காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்
கண்ணீர் விடுவாயே
ஞாலத்தில் பரனுனை நாட்டின நோக்கத்தைச்
சீலமாய் நினைத்தவர் மூலம் பிழைத்திடுவாய்

1. மதியை யிழந்து தீய வழியிலே நீ நடந்தால்
வருங்கோபம் அறிந்திடாயோ?
கதியாம் இரட்சண்ய வாழ்வைக் கண்டு நீ மகிழ்ந்திட
காலம் இதுவே நல்ல காலம் என்றறியாயோ?

2. இகத்தினில் ஊழியம் அகத்தியம் நிறைவேற
இயேசுனை அழைத்தாரல்லோ
மகத்துவ வேலையை மறந்து தூங்குவாயானால்
பகற்காலமுடியும் இராக்காலத்திலென்ன செய்வாய்?

3. முந்தி எரேமியா அனனியாவுக் குரைத்த
முடிவை நீ யறியாயோ!
எந்தக்காலமும் சிரஞ்சீவியென் றெண்ணிடாமல்
ஏற்ற ஆயத்தமாய் எப்போதும் இருந்திடாயோ

**காலையும் மாலையும்**

காலையும் மாலையும் எவ்வேளையும் கர்த்தரைக்
கருத்துடன் பாடிடுவேன்
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என தூதர்
பாடிடும் தொனி கேட்குதே

1. கர்த்தர் என் வெளிச்சம் ஜீவனின் பெலனும்
கிருபையாய் இரட்சிப்புமானவர்
அஞ்சிடாமல் கலங்காமல் பயமின்றி திகிலின்றி
அனுதினம் வாழ்ந்திடுவேன்

2. எனக்கெதிராய் ஓர், பாளையமிறங்கி
என்மேல் ஓர் யுத்தம் வந்தாலும்
பயப்படேன் எதிராளி நிமித்தமாய் செவ்வையான
பாதையில் நடத்திடுவார்

3. ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்
என்றும் தம் மகிமையைக் காண
ஜீவனுள்ள நாளெல்லாம் தம் ஆலயத்தில் தங்குவதை
வாஞ்சித்து நாடிடுவேன்

4. தீங்கு நாளில் தம் கூடார மறைவில்
தேடிச் சேர்த்தென்னை மறைப்பார்
உன்னதத்தில் மறைவாக ஒளித்தென்னைப் பாதுகாத்து
உயர்த்துவார் கன்மலைமேல்

## கால் மிதிக்கும் தேசமெல்லாம்

கால் மிதிக்கும் தேசமெல்லாம் - என்
கர்த்தருக்குச் சொந்தமாகும்
கண்பார்க்கும் ப+மியெல்லாம் கல்வாரி கொடி பறக்கும்

1. பறக்கட்டும் பறக்கட்டும்
சிலுவையின் ஜெயக்கொடி - அல்லேலூயா
உயரட்டும் உயரட்டும்
இயேசுவின் திருநாமம் - அல்லேலூயா

2. எழும்பட்டும் எழும்பட்டும்
கிதியோனின் சேனைகள் - அல்லேலூயா
முழங்கட்டும் முழங்கட்டும்
இயேசுதான் வழியென்று - அல்லேலூயா

3. செல்லட்டும் செல்லட்டும்
ஜெபசேனை துதிசேனை - அல்லேலூயா
வெல்லட்டும் வெல்லட்டும்
எதிரியின் எரிகோவை - அல்லேலூயா

4. திறக்கட்டும் திறக்கட்டும்
சுவிசேஷ வாசல்கள் - அல்லேலூயா
வளரட்டும் வளரட்டும்
அபிஷேகத் திருச்சபைகள் - அல்லேலூயா

## கிஞ்சிதமும் நெஞ்சே, அஞ்சிடாதே

கிஞ்சிதமும் நெஞ்சே, அஞ்சிடாதே - நல்ல
கேடகத்தைப் பிடி நீ - விசுவாசக்
கேடகத்தைப் பிடி நீ.

வஞ்சனையாகவே பேய் எதிர்த்துன்றனை
வன்னிக் கணைதொடுத் தெய்கின்ற வேளையில்,
நெஞ்சில் படாமல் தடுக்க அது நல்ல
நிச்சயமான பரிசை அறிந்து நீ. – கிஞ்சிதமும்

1. பாவத்தை வெறுக்க, ஆபத்தைச் சகிக்க,
பத்தியில் தெளிக்கவும், - நித்ய
ஜீவனைப் பிடிக்க, லோகத்தை ஜெயிக்க,
திறமை அளிக்கவும்,
சாவே உன் கூர் எங்கே? பாதாளமே, உன்
ஜெயம் எங்கே? என்று நீ கூவிக் களிக்கவும்,
தேவன் உகந்துனைத் தான் அங்கீகரிக்க,
செய்யவுமே அது திவ்ய நல் ஆயுதம். – கிஞ்சிதமும்

2. பண்டையர் அந்தப் பரிசையினால் அல்லோ,
கண்டடைந்தார் பேறு? - நல்ல
தொண்டன் ஆபேல் முதலான வைதீகரைத்
தொகுத்து வெ வ்வேறு
விண்டுரைக்கில் பெருகும்@ தீ அணைத்ததும்,
வீரிய சிங்கத்தின் வாயை அடைத்ததும்,
கண்டிதமாய் வெற்றி கொண்டது மாம்பல
காரியங்களையும் பார் இது மா ஜெயம்.– கிஞ்சிதமும

3. ஊற்றமுடன் இப்பரிசைப் பிடித்திட
உன் செயல் மா பேதம் - அதின்
தோற்றமும் முடிவும் ஏசுபரன் செயல்,
துணை அவர் பாதம்
ஏற்றர வணைக்கவே பணிவாக
இரந்து மன்றாடி அவர் மூலமாகவே,
ஆற்றல் செய் தேற்றரவாளி பரிசுத்த
ஆவி உதவியை மேவி, அடைந்து, நீ. – கிஞ்சிதமும்

## கிருபை புரிந்தெனை

கிருபை புரிந்தெனை ஆள் - நீ பரனே!
கிருபை புரிந்தெனை ஆள் - நிதம்

சரணங்கள்
1. திரு அருள் நீடுமெய்ஞ்ஞான திரித்து,
வரில்நரனாகிய மா துவின் வித்து! - கிரு

2. பண்ணின பபாவமெலாம் அகல்வித்து,
நிண்ணயமாய் மிகவுந் தயை வைத்து - கிரு

3. தந்திரவான்கடியின் சிறைமீட்டு,
எந்தை, மகிழ்ந்துன்றன் அன்புபாராட்டு - கிரு

4. தீமை உறும் பல ஆசையை நீக்கிச்
சாமி! என்னை உமக்காலயம் ஆக்கி - கிரு

5. தொல்வினையால் வரும் சாபம் ஒழித்து
நல்வினையே செய் திராணி அளித்து - கிரு

6. அம்பரமீதுறை வானவர் போற்ற
கெம்பீரமாய் விசுவாசிகள் ஏத்த, - கிரு

## கிருபையிதே தேவக் கிருபையிதே

கிருபையிதே தேவக் கிருபையிதே
தாங்கி நடத்தியதே
இயேசுவிலே பொன் நேசரிலே
அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்

1. ஆருயிர் அன்பராய் எங்களுடனே
ஜீவியப்பாதையிலே .. இயேசு பரன்
அனுதினமும் வழி நடந்தே
அவரது நாமத்தில் காத்தனரே

2. வார்த்தையினால் அவர் தீர்த்தார் எந்தன்
வியாதியும் வேதனையும் - வைத்தியராய்
கிறிஸ்துவிலே ஒரு மனையாய்
சிருஷ்டித்தே நிறுத்தினார் அவர் சுதராய்

3. நல்ல போராட்டம் போராடி ஜெயித்தே
நித்திய ஜீவனை நாம் - பற்றிடவே
விசுவாசத்தில் நிலைத்திருப்போம்
அசையாது அழைப்பினைக் காத்துக் கொள்வோம்

4. ஆவியும் மணவாட்டியும் ஆவலுடன்
வாருமென்றழைக்கிறாரே வாருமென்பீர்
சீயோனே நீ பார் உனக்காய்
நாயகன் இயேசு தாம் வெளிப்படுவார்

**கிறிஸ்துவின் அடைக்கலத்தில்**

கிறிஸ்துவின் அடைக்கலத்தில் சிலுவையின் மாநிழலில்
கன்மலை வெடிப்பதனில் புகலிடம் கண்டு கொண்டோம்

1. கர்ச்சிக்கும் சிங்கங்களும் ஓநாயின் கூட்டங்களும்
ஆடிடைக் குடிலினில் மந்தைகள் நடுவினில் நெருங்கவும்
முடியாது

2. இரட்சிப்பின் கீதங்களும் மகிழ்ச்சியின் சப்தங்களும்
கார்மேக இருட்டினில் தீபமாய் இலங்கிடும் கர்த்தரால் இசை
வளரும்

3. தேவனின் இராஜியத்தை திசை எங்கும் விரிவாக்கிடும்
ஆசையாய் ஜெபித்திடும் அதற்கென்றே வாழ்ந்திடும் யாருக்கும்
கலக்கம் இல்லை

4. பொல்லோனின் பொறாமைகளும் மறைவான சதி பலவும்
வல்லோனின் கரத்தினில் வரைபடமாயுள்ள யாரையும்
அணுகாது

## கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு

கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு
எப்போதும் வெற்றி உண்டு 2

1. என்னென்ன துன்பம் வந்தாலும் நான் கலங்கிடவே
மாட்டேன்
யார் என்ன சொன்னாலும் நான் சோர்ந்து போகமாட்டேன்

2. என் ராஜா முன்னே செல்கிறார் வெற்றிப் பவனி செல்கிறார்
குருத்தோலை கையில் எடுத்து நான் ஓசன்னா பாடிடுவேன்

3. சாத்தானின் அதிகாரமெல்லாம் என் நேசர்
பறித்துக்கொண்டார்
சிலுவையில் அறைந்துவிட்டார் காலாலே மிதித்துவிட்டார்

4. பாவங்கள் போக்கிவிட்டார் சாபங்கள் நீக்கிவிட்டார்
இயேசுவின் தழும்புகளால் சுகமானேன் சுகமானேன்

5. மேகங்கள் நடுவினிலே என்நேசர் வரப்போகிறார்
கரம்பிடித்து அழைத்துச் செல்வார் கண்ணீரெல்லாம்
துடைப்பாh

**கீதம் கீதம் ஜெய ஜெய கீதம்**

கீதம் கீதம் ஜெய ஜெய கீதம்
கை கொட்டிப் பாடிடுவோம்

இயேசு ராஜன் உயிர்த்தெழுந்தார் அல்லேலூயா
ஜெயம் என்று ஆர்ப்பரிப்போம் - ஆ! ஆ!

1.பார் அதோ கல்லறை மூடின பெருங்கல்
புரண்டுருண்டோடுது பார் - அங்கு
போட்ட முத்திரைக் காவல் நிற்குமோ
தேவ புத்திரர் சந்நிதிமுன் - ஆ! ஆ!

2.வேண்டாம் வேண்டாம் அழுதிட வேண்டாம்
ஓடி உரைத்திடுங்கள் - தாம்
கூறின மாமறை விட்டனர் கல்லறை
போங்கள் கலிலேயாவுக்கு – ஆ! ஆ!

## குருசினில் தொங்கியே குருதியும் வடிய

குருசினில் தொங்கியே குருதியும் வடிய,
கொல்கதா மலைதனிலே - நம்
குருவேசு சுவாமி கொடுந்துயர், பாவி,
கொள்ளாய் கண் கொண்டு.

1. சிரசினில் முண்முடி உறுத்திட, அறைந்தே
சிலுவையில் சேர்த்தையோ - தீயர்
திருக்கரங் கால்களில் ஆணிகளடித்தார்
சேனைத் திரள் சூழ.

2. பாதகர் நடுவில் பாவியினேசன்
பாதகன்போல் தொங்க - ய+த
பாதகர் பரிகாசங்கள் பண்ணிப்
படுத்திய கொடுமைதனை

3. சந்திரசூரிய சகல வான் சேனைகள்
சகியாமல் நாணுதையோ! - தேவ
சுந்தர மைந்த னுயிர் விடுகாட்சியால்
துடிக்கா நெஞ்சுண்டோ?

## கூர் ஆணி தேகம் பாய

1. கூர் ஆணி தேகம் பாய
மா வேதனைப்பட்டார்
பிதாவே, இவர்கட்கு
மன்னிப்பீயும் என்றார்

2. தம் ரத்தம் சிந்தினோரை
நல் மீட்பர் நிந்தியார்
மா தெய்வ நேசத்தோடு
இவ்வாறு ஜெபித்தார்.

3. எனக்கே அவ்வுருக்கம்
எனக்கே அச்செபம்
அவ்வித மன்னிப்பையே
எனக்கும் அருளும்

## கேரீத் ஆற்று நீர் வற்றினாலும்

1. கேரீத் ஆற்று நீர் வற்றினாலும்
தேசம் பஞ்சத்தில் வாடினாலும்
பானையில் மா எண்ணெய் குறைந்திட்டாலும்
காக்கும் தேவன் உனக்கு உண்டு

கர்த்தர் உண்டு வார்த்தை உண்டு
தூதன் உண்டு அவர் அற்புதம் உண்டு

2. இல்லை என்ற நிலை வந்தாலும்
இருப்பதைப் போல் அழைக்கும் தேவன்
உயிர்ப்பிக்கும் ஆவியினால்
உருவாக்கி நடத்திடுவார்

3. முடியாததென்று நினைக்கும் நேரம்
கர்த்தரின் கரம் உன்னில் தோன்றிடுமே
அளவற்ற நன்மையினால்
ஆண்டு நடத்திடுவார்

4. இருளான பாதை நடந்திட்டாலும்
வெளிச்சமாய் தேவன் வந்திடுவார்
மகிமையின் ப்ரசன்னத்தால்
மூடி நடத்திடுவார்

## கேள்! ஜென்மித்த ராயர்க்கே

1.கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்தியம் ஏறுதே
அவர் பாவ நாசகர்
சமாதான காரணர்
மண்ணோர் யாரும் எழுந்து
விண்ணோர்போல் கெம்பீரித்து
பெத்லெகேமில் கூடுங்கள்
ஜென்ம செய்தி கூறுங்கள்.
கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்தியம் ஏறுதே

2.வானோர் போற்றும் கிறிஸ்துவே
லோகம் ஆளும் நாதரே
ஏற்ற காலம் தோன்றினீர்
கன்னியிடம் பிறந்தீர்
வாழ்க நர தெய்வமே
அருள் அவதாரமே
நீர் இம்மானுவேல் அன்பாய்
பாரில் வந்தீர் மாந்தனாய்.

3.வாழ்க சாந்த பிரபுவே!
வாழ்க நீதி சூரியனே!
மீட்பராக வந்தவர்
ஒளி ஜீவன் தந்தவர்
மகிமையை வெறுத்து
ஏழைக் கோலம் எடுத்து
சாவை வெல்லப் பிறந்தீர்
மறு ஜென்மம் அளித்தீர்.

**சத்திய வேதத்தை தினம் தியானி**

சத்திய வேதத்தை தினம் தியானி,
சகல பேர்க்கும் அதபிமானி.

அனுபல்லவி
உத்தமஜீவிய வழிகாட்டும், உயர்வானுலகில் உனைக்கூட்டும்,

சரணங்கள்
1.வாலிபர்தமக்கூண் அதுவாகும்@ வயோதியர்க்கும் அதுணவாகும்;
பாலகர்க்கினிய பாலும் அதாம்@ படிமீ தாத்மபசி தணிக்கும்.

2.சத்துருப் பேயுடன் அமர்புரியும் தருணம் அது நல் ஆயுதமாகும்;
புத்திரர் மித்திரரோடு மகிழும் பொழுதும் அதுநல் உறவாகும்.

3.புலைமேவிய மானிட ரிதயம் பெறுதற்கதுமருந்தாய்;
நிலையா நரர்வாணாள் நிலைக்க நேயகாய கற்பம் அதாம்.

4.கதியின் வழிகாணாதவர்கள் கண்ணுக்கரிய கலிக்கம் அது;
புதிய எருசாலேம்பதிக்குப் போகும் பயணத்துணையும் அது

## சந்தோஷம் பொங்குதே

சந்தோஷம் பொங்குதே சந்தோஷம் பொங்குதே
சந்தோஷம் என்னில் பொங்குதே
இயேசு என்னை இரட்சித்தார் முற்றும் என்னை மாற்றினார்
சந்தோஷம் பொங்கிப் பொங்குதே

1. வழி தப்பி நான் திரிந்தேன் பாவப் பழியதைச் சுமந்தலைந்தேன்
அவர் அன்புக் குரலே அழைத்தது என்னையே
அந்த இன்ப நாளில் எந்தன் பாவம் நீங்கிற்றே

2. சத்துரு சோதித்திட தேவ உத்தரவுடன் வருவான்
ஆனால் இயேசு கைவிடார் தானாய் வந்து இரட்சிப்பார்
அந்த நல்ல இயேசு எந்தன் சொந்தமானாரே

3. பாவத்தில் ஜீவிப்பவர் பாதாளத்தில் அழிந்திடுவார்
நானோ பரலோகத்தில் நாளும் பாடல் பாடிடுவேன்
என்னில் வாழும் இயேசுவோடு என்றும் வாழுவேன்

## சபையின் அஸ்திபாரம்

1. சபையின் அஸ்திபாரம்
நம் மீட்பர் கிறிஸ்துவே
சபையின் ஜன்மாதாரம்
அவரின் வார்த்தையே
தம் மணவாட்டியாக
வந்ததைத் தேடினார்,
தமக்குச் சொந்தமாக
மரித்ததைக் கொண்டார்.

2. எத்தேசத்தார் சேர்ந்தாலும்
சபை ஒன்றே ஒன்றாம்
ஒரே விஸ்வாசத்தாலும்
ஒரே ரட்சிப்புண்டாம்
ஒரே தெய்வீக நாமம்
சபையை இணைக்கும்
ஓர் திவ்விய ஞானாகாரம்
பக்தரைப் போஷிக்கும்.

3. புறத்தியார் விரோதம்
பயத்தை உறுத்தும்
உள்ளானவரின் துரோகம்
கிலேசப்படுத்தும்
பக்தர் ஓயாத சத்தம்,
“எம்மட்டும்” என்பதாம்
ராவில் நிலைத்த துக்கம்
காலையில் களிப்பாம்.

4. மேலான வான காட்சி
கண்டாசீர்வாதத்தை
பெற்று, போர் ஓய்ந்து வெற்றி
சிறந்து, மாட்சிமை
அடையும் பரியந்தம்
இன்னா உழைப்பிலும்,
நீங்காத சமாதானம்
மெய்ச் சபை வாஞ்சிக்கும்.

**சருவ லோகாதிபா, நமஸ்காரம்!**

1. சருவ லோகாதிபா, நமஸ்காரம்!
சருவ சிருஷ்டிகனே, நமஸ்காரம்!
தரை, கடல், உயிர், வான், சகலமும் படைத்த
தயாபர பிதாவே, நமஸ்காரம்!

2. திரு அவதாரா, நமஸ்காரம்!
ஜெகத் திரட்சகனே, நமஸ்காரம்!
தரணியில் மனுடர் உயிர் அடைந்தோங்கத்
தருவினில் மாண்டோர், நமஸ்காரம்!

3. பரிசுத்த ஆவி, நமஸ்காரம்!
பரம சற்குருவே, நமஸ்காரம்!
அரூபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
அரியசித்தே சதா நமஸ்காரம்

4. முத்தொழிலோனே, நமஸ்காரம்!
மூன்றிலொன்றோனே, நமஸ்காரம்!
கர்த்தாதி கர்த்தா, கருணாசமுத்திரா,
நித்திய திரியேகா, நமஸ்காரம்

## சர்வ சிருஷ்டிக்கும் எஜமானும் நீரே

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானும் நீரே
சர்வ சிருஷ்டியைக் காப்பவர் நீரே
எங்கள் இதயத்தில் உம்மை போற்றுகிறோம்
என்றென்றும் பணிந்து தொழுவோம்
ஆஹா ஹா அல்லேலூயா (8) ஆமென்.

1. வானம் ப+மி ஒழிந்து போனாலும் உம்
வார்த்தைகள் என்றும் மாறாதே
உலகம் அழிந்து மறைந்து போம்
விசுவாசி என்றென்றும் நிலைப்பான் - ஆஹா ஹா

2. சாத்தான் உன்னை எதிர்த்து போதும்
ஜெயக் கிறிஸ்து உன்னோடே உண்டே
தோல்வி என்றும் உனக்கில்லையே
துதிகானம் தொனித்து மகிழ்வாய் - ஆஹா ஹா

3. எந்தன் மீட்பருமட் ஜீவனும் நீரே
என்னை காக்கும் கர்த்தரும் நீரே
என்னை உமக்கு என்றும் அர்ப்பணித்தேன்
என் வாழ்வில் ஜோதியும் நீரே - ஆஹா ஹா

## சாந்த இயேசு ஸ்வாமீ

1.சாந்த இயேசு ஸ்வாமீ,
வந்திந்நேரமும்,
எங்கள் நெஞ்சை உந்தன்
ஈவால் நிரப்பும்.

2.வானம், பூமி, ஆழி
உந்தன் மாட்சிமை
ராஜரீகத்தையும்
கொள்ள ஏலாதே.

3.ஆனால், பாலர் போன்ற
ஏழை நெஞ்சத்தார்
மாட்சி பெற்ற உம்மை
ஏற்கப் பெறுவார்.

4.விண்ணின் ஆசீர்வாதம்
மண்ணில் தாசர்க்கே
ஈயும் உம்மை நாங்கள்
போற்றல் எவ்வாறே?

5.அன்பு, தெய்வ பயம்
நல் வரங்களும்,
சாமட்டும் நிலைக்க
ஈயும் அருளும்.

**சிங்கக்குட்டிகள் பட்டினி கிடக்கும்**

சிங்கக்குட்டிகள் பட்டினி கிடக்கும்
ஆண்டவரைத் தேடுவோர்க்கு குறையில்லையே!
குறையில்லையே, குறையில்லையே
ஆண்டவரைத் தேடுவோர்க்கு குறையில்லையே!

1. புல்லுள்ள இடங்களிலே என்னை மேய்க்கின்றார்!
தண்ணீரண்டை கூட்டிச் சென்று தாகம் தீர்க்கின்றார்!

2. எதிரிகள் முன் விருந்தொன்றை ஆயத்தப்படுத்துகிறார்!
என் தலையை எண்ணெயினால் அபிஷேகம் செய்கின்றார்!

3. ஆத்துமாவை தேற்றுகின்றார் ஆவி பொழிகின்றார்!
ஜீவனுள்ள நாட்களெல்லாம் கிருபை என்னைத் தொடரும்!

4. என் தேவன் தம்முடைய மகிமை செல்வத்தினால்
குறைகளையே கிறிஸ்துவுக்குள் நிறைவாக்கி
நடத்திடுவார்!

**சின்னஞ்சிறு சுதனே என்னரும் தவமே**

சின்னஞ்சிறு சுதனே என்னரும் தவமே
மன்னர் மன்னவனே உன்னததிருவே

1. காடுண்டு நரிக்கு குழிகளுமுண்டு
கூடுண்டு பறவைகட்கு
பாடுண்டு உமக்கு மனிதகுமாரனே
வீடுண்டோ உந்தனுக்கு
- சின்னஞ்சிறு

2. தாரணி துயர்கள் துன்பங்கள் நீங்க
காரணம் நீரானீரோ
கோர வெம்பகைகள் பாரச்சுமைகள்
தீர மருந்தானீரோ – ஆ..ஆ..ஆ
- சின்னஞ்சிறு

3. சுற்றம் தாய் தந்தை மற்றுமனைத்தும்
முற்றிலும் நீரல்லவோ
குற்றம் துடைக்க பற்றினை நீக்க
உற்றவர் நீரல்லவோ
- சின்னஞ்சிறு

4. பாசமாய் வந்து காசினை மீட்ட
நேசமுள்ள ஏசுவே
நீச சிலுவை தொங்கப் பிறந்த
தாசரின் தாபரமே – ஆ..ஆ..ஆ
- சின்னஞ்சிறு

**சிலுவை சுமந்த உருவம்**

சிலுவை சுமந்த உருவம் சிந்தின இரத்தம் புரண்டோடியே
நதிபோலவே பாய்கின்றதே நம்பி இயேசுவண்டை வா - 2

1. பொல்லா உலக சிற்றின்பங்கள்
எல்லாம் அழியும் மாயை
காணாய் நிலையான சந்தோஷம் புவியில்
கர்த்தாவின் அன்பண்டை வா

2. ஆத்தும மீட்பைப் பெற்றிடாமல்
ஆத்மம் நஷ்டமடைந்தால்
லோகம் முழுவதும் ஆதாயமாக்கியும்
லாபம் ஒன்றுமில்லையே

3. பாவ மனித ஜாதிகளைப்
பாசமாய் மீட்க வந்தார்
பாவப்பரிகாரி கர்த்தர் இயேசு நாதர்
பாவமெல்லாம் சுமந்தார்

4. நித்திய ஜீவன் வாஞ்சிப்பாயோ
நித்திய மோட்ச வாழ்வில்
தேடி வாராயோ பரிசுத்த ஜீவியம்
தேவை அதை அடைவாய்

5. தாகமடைந்தோர் எல்லோருமே
தாகத்தைத் தீர்க்க வாரும்
ஜீவத்தண்ணீரான கர்த்தர் இயேசு நாதர்
ஜீவன் உனக்களிப்பார்

**சிலுவை நிழலில் அனுதினம் அடியான்**

சிலுவை நிழலில் அனுதினம் அடியான்
சாய்ந்திளைப்பாறிடுவேன் - ஆ! ஆ!

சிலுவையின் அன்பின் மறைவில்
கிருபையின் இனிய நிழலில்
ஆத்தும நேசரின் அருகில்
அடைகிறேன் ஆறுதல் மனதில்

1. பாவப் பாரச் சுமையதால் சோர்ந்தே
தளர்ந்த என் ஜீவியமே – ஆ! ஆ!
சிலுவையண்டை வந்ததினால்
சிறந்த சந்தோஷங் கண்டதினால்
இளைப்படையாது மேலோகம்
ஏகுவேன் பறந்தே வேகம்

2. இன்பம் சுரந்திடும் திருமொழி கேட்டேன்
இன்னல்கள் மறந்திடுவேன் - ஆ! ஆ!
திருமறை இன்னிசை நாதம்
தேனிலு மினிய வேதம்
தருமெனக்கனந்த சந்தோஷம்
தீர்க்குமென் இதயத்தின் தோஷம்

3. எவ்வித கொடிய இடருக்கு மஞ்சேன்
இயேசுவைச் சார்ந்து நிற்பேன் - ஆ! ஆ!
அவனியில் வியாகுலம் வந்தால்
அவரையே நான் அண்டிக்கொண்டால்
அலைமிக மோதிடு மந்நாள்
ஆறுதல் அளிப்பாரே சொன்னால்

## சிலுவையைப் பற்றி நின்று

1. சிலுவையைப் பற்றி நின்று
துக்கம் மகனைக் கண்ணுற்று.
வம்மிப் பொங்கினாள் ஈன்றாள்
தெய்வ மாதா மயங்கினார்,
சஞ்சலத்தால் கலங்கினார்,
பாய்ந்ததாத்துமாவில் வாள்.

2. பாக்கியவதி மாதா உற்றார்
சிலுவையை நோக்கிப் பார்த்தார்,
அந்தோ என்ன வேதனை,
ஏசு புத்திரனிழந்து,
துக்க சாகரத்தில் ஆழ்ந்து,
சோகமுற்றார் அன்னை.

3. இணையில்லா இடருற்ற
அன்னை அருந்துயருற
யாவரும் உருகாரோ?
தெய்வ மைந்தன் தாயார் இந்த
துக்க பாத்திரம் அருந்த,
மாதாவோடழார் யாரோ?

**சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம்,**

1.சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம்,
சிருஷ்டிப்பு யாவையும் படைத்தாய், தோத்ரம்,
ஏர்குணனே தோத்ரம், அடியர்க்-கு
இரங்கிடுவாய், தோத்ரம், மா நேசா.

2.நேர் மிகு அருள் திரு அன்பா, தோத்ரம்,
நித்தமு முமக் கடியார்களின் தோத்ரம்,
ஆர் மணனே, தோத்ரம், உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா.

3.ஜீவன், சுகம், பெலன், யாவுக்கும் தோத்ரம்,
தினம் தினம் அருள் நன்மைக்காகவும் தோத்ரம்,
ஆவலுடன் தோத்ரம், உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா.

4.ஆத்தும நன்மைகட்காகவும் தோத்ரம்,
அதிசய நடத்துதற்காகவும் தோத்ரம்,
சாற்றுகிறோம் தோத்ரம், உனது
தகுமன்புக்கே தோத்ரம், மா நேசா.

5. மாறாப் பூரண நேசா, தோத்ரம்,
மகிழொடு ஜெபமொழி மாலையின் தோத்ரம்,
தாராய் துணை, தோத்ரம், இந்தத்
தருணமே கொடு, தோத்ரம், மா நேசா.

**சொல்லரும் மெய்ஞ்ஞானரே**

சொல்லரும் மெய்ஞ்ஞானரே, மேன்மைப்ரபுவே,
சுரூபத் தரூபக் கோனாரே, - உரை.

வல்லறஞ் சிறந்து மனுவானாரே, - உயர்
இல்லறந் துறந்து குடிலானாரே, - உரை ………. சொல்

1.மாடாயர் தேடும் வஸ்துபகாரி, - மிகு
கேடாளர் நாடுங் கிறிஸ்து சற்காரி,
வையகம் புரப்பதற்கு வந்தாரே, - அருள்
பெய்து நவமும் தவமுந் தந்தாரே, - உரை ………. சொல்

2.அச்சய சவுந்தர அசரீரி, - அதி
உச்சித சுதந்தர அருள்வாரி,
ஐயா வல்லாவே, மாதேவா, - ஓ!
துய்யா, நல்லாவே, ஏகோவா, - உரை ………. சொல்

3.பாவ வினை யாவையுந் தீர்த்தாரே, - உயர்
தேவ சபையில் எமைச் சேர்த்தாரே@
செல்லமாய் முகம் பார்த்தாரே, - பெரும்
செல்வம் போல் எமைச் சேர்த்தாரே, - உரை ………. சொல்

## ஐயையா, நான் வந்தேன்

ஐயையா, நான் வந்தேன்; - தேவ
ஆட்டுக்குட்டி, வந்தேன்.

1. துய்யன் நீர் சோரி, பாவி எனக்காய்ச் சிந்தித்
துஷ்டன் எனை அழைத்தீர், - தயை
செய்வோம் என்றே; இதை அல்லாது போக்கில்லை;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்.
- ஐயையா

2. உள்ளக் கறைகளில் ஒன்றேனும் தானாய்
ஒழிந்தால் வருவேன், என்று – நில்லேன்;
தெள; உம் உதிரம் கறை யாவும் தீர்த்திடும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்.
- ஐயையா

3. எண்ணம், வெளியே போராட்டங்கள், உட்பயம்
எத்தனை எத்தனையோ! - இவை
திண்ணம் அகற்றி எளியேனை ரட்சியும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்.
- ஐயையா

4. ஏற்றுக்கொண்டு மன்னிப்பு ஈந்து சுத்திகரித்
தென்னை அரவணையும்; - மனம்
தேற்றிக்கொண்டேன் உந்தன் வாக்குத்தத்தங்களால்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்
- ஐயையா

## ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும்

ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும் (2)
நொறுக்கும், உருக்கும், உருவாக்கி நிரப்பும்
ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும்.

Spirit of the living God fall afresh on me (2)
Break me, melt me, mould me and fill me
Spirit of the living God fall afresh on me.

**ஜீவனுள்ள தேவனே வாரும் ஜீவ பாதையிலே நடத்தும்**

1. ஜீவனுள்ள தேவனே வாரும் ஜீவ பாதையிலே நடத்தும்
ஜீத்தண்ணீர் ஊறும் ஊற்றிலே ஜீவன் பெற என்னை நடத்தும்

இயேசுவே நீர் பெரியவர் இயேசுவே நீர் பரிசுத்தர்
இயேசுவே நீர் நல்லவர் இயேசுவே நீர் வல்லவர்

2. பாவிகள் துரோகிகள் ஐயா பாவ ஆதாம் மக்களே தூயா
பாதகர் எம் பாவம் போக்கவே பாதகன் போல் தொங்கினீரல்லோ

3. ஐந்து கண்ட மக்களுக்காக ஐந்து காயமேற்ற நேசரே
நொந்துருகி வந்த மக்கள் மேல் நேச ஆவி வீசச் செய்குவீர்

4. வாக்குத்தத்தம் செய்த கர்த்தரே வாக்கு மாறா உண்மை நாதனே
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம் வல்ல ஆவி மாரி ஊற்றுவீர்

5. நியாயத்தீர்ப்பின் நாள் நெருங்குதே நேசர் வர காலமாகுதே
மாய லோகம் நம்பி மாண்டிடும் மானிடரை மீட்க மாட்டீரோ?

**ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்**

1. ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்
என்னுள்ளத்தில் அவர் ஜீவிக்கிறார்
துன்பத்தில் என் நல் துணை அவரே
என்றென்றும் ஜீவிக்கிறார்

2. செங்கடல் அவர் சொல்ல இரண்டாய் நின்றது
பெருங்கோட்டை ஒன்று தரைமட்டமானது
அவர் சொல்லக் குருடனின் கண் திறந்தது
அவர் தொடக் குஷ்டரோகி சுத்தமாயினான்

3. உம்மை என்றும் விடாமல் நான் தொடரவே
என்னை என்றும் விடாமல் நீர் பிடிக்கவே
நான் மரிக்கும் நேரத்தில் பரலோகத்தில்
உம் வீட்டைக் காட்டும் நல்ல மேய்ப்பரே

## ஜெபத்தின் ஆவலை

1. ஜெபத்தின் ஆவலை
என் நெஞ்சில் அருளும்;
தெய்வாவீ, லோக நேசத்தை
என்னை விட்டகற்றும்.

2. பூலோக சிந்தையை
வெறுத்துத் தள்ளுவேன்;
மேலான நித்திய இன்பத்தை
நான் தேட ஏவுமேன்.

3. எனக்குத் துணையாய்
என் பக்கத்தில் இரும்;
நான் நிலைநிற்கும்படியாய்
கிருபை அளியும்.

4. தெய்வன்பின் பாசத்தால்
கட்டுண்டு, என்றைக்கும்
உம்மை என் முழு மனதால்
பின்பற்றச்செய்திடும்.

## ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா

1. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்வீர்

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்,
ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

2. ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தைப் பற்றிக் கொண்டு,
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி,
கேட்கும்படி கிருபை செய்வீர்

3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சைவிட்டு,
வாகானதாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக்கொள்வோம்

4. இடைவிடாமல் ஜெபம் செய்ய,
இடையூறெல்லாம் நீக்கிவிடும்,
சளைப்பில்லாமல் உந்தன் பாதம்,
கடைசி மட்டும் காத்திருப்போம்

## ஜெயம் உண்டு என்றும் ஜெயம் உண்டு

ஜெயம் உண்டு என்றும் ஜெயம் உண்டு
இயேசுவின் நாமத்தில் ஜெயம் உண்டு
ஜெயம் உண்டு என்றும் ஜெயம் உண்டு
இயேசுவின் இரத்தத்தால் ஜெயம் உண்டு

அல்லேலூயா என்று ஸ்தோத்தரிப்பேன்
அல்லேலூயா என்று போற்றிடுவேன்
அல்லேலூயா என்று ஆராதிப்பேன்
அல்லேலூயா என்று ஆர்பரிப்பேன்

1. யோசபாத்தின் சேனையின் முன் சென்றவர்
துதியினால் என்றும் ஜெயம் தருவார்
தேவ சமுகம் முன் செல்வதால்
தோல்வி என்றும் நமக்கில்லையே

2. யாவே ஷம்மா நம்மோடிருப்பார்
யாவே எல்ஷடாய் சர்வவல்லவர்
யாவே ரஃப்பா சுகம் தருவார்
யாவே ஜெய்ரா கூட இருப்பார்

3. எரிகோவின் கோட்டைகள் இடிந்துவிழும்
சாத்தானின் தடைகள் தகர்ந்து விழும்
இராஜாதி இராஜா நம் இயேசு
வெற்றியின் பாதையில் நடத்தி செல்வார்

**ஜெயம் ஜெயம் ஜெயம் ஜெயம் ஜெயம் நமக்கு**

ஜெயம் ஜெயம் ஜெயம் ஜெயம் ஜெயம் நமக்கு
இயேசு இருக்கையில் பயம் எதற்கு

1.மலைகள் விலகினாலும் பர்வதங்கள் பெயர்ந்தாலும்
உன்னை விட்டு விலகாதவர்
உடன்படிக்கையின் தேவன்! வல்லமையின் ராஜா!
அவர் சேனைகளின் கர்த்தர்!

2.அக்கினி இறங்கிடும் அந்தகாரம் அழிந்திடும்
ஆவியின் பெலன் கூடும்
பெலத்தினால் அல்ல பராக்கிரமம் அல்ல
தேவனாலே ஆகும் என் தேவனாலே ஆகும்

3.சாத்தானை ஜெயிக்க சாபத்தை அழிக்க
வல்லமை இறங்கிடுதே
சிலுவையில் இரத்தம் சிந்திய இயேசு
எனக்காய் யுத்தம் செய்குவார் அவர்
எனக்காய் யுத்தம் செய்குவார்

## ஞான நாதா வானம் பூமி

1. ஞான நாதா வானம் பூமி
நீர் படைத்தீர்
ராவு பகல் ஓய்வு வேலை
நீர் அமைத்தீர்
வான தூதர் காக்க எம்மை
ஊனமின்றி நாங்கள் தூங்க
ஞான எண்ணம் தூய கனா
நீர் அருள்வீர்.

2. பாவ பாரம் கோப மூர்க்கம்
நீர் தீர்த்திடும்
சாவின் பயம் ராவின் அச்சம்
நீர் நீக்கிடும்
காவலராய்க் காதலராய்
கூடத் தங்கி தூய்மையாக்கும்
ராவின் தூக்கம் நாளின் ஊக்கம்
நீர் ஆக்கிடும்.

3. நாளில் காரும் ராவில் காரும்
ஆயுள் எல்லாம்
வாழும் காலம் மா கரத்தால்
அமைதியாம்
சாகும் நேரம் மோட்சம் சேர்ந்து
ஆகிடவே தூதர்போன்று
ஆண்டிடவே மாட்சியோடு
உம்மோடெனடறும்.

## தந்தானைத் துதிப்போமே

தந்தானைத் துதிப்போமே - திருச்
சபையாரே, கவி - பாடிப்பாடி.

விந்தையாய் நமக்கனந்தனந்தமான,
விள்ளற்கரியதோர் நன்மை மிக மிகத் - தந்

1. ஒய்யாரத்துச் சீயோனே - நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து,
ஐயனேசுக்குனின் கையைக் கூப்பித் துதி
செய்குவையே, மகிழ் கொள்ளுவையே, நாமும் - தந்

2. கண்ணாரக் களித்தாயே - நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனா மாரிபோற் பெய்துமே - தந்

3. சுத்தாங்கத்து நற்சபையே - உனை
முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனைச் சத்தியாக்கத் தம்மின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம் - தந்

4. தூரம் திரிந்த சீயோனே - உனைத்
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி,
ஆரங்கள் ப+ட்டி அலங்கரித்து நினை
அத்தனை மணவாட்டி யாக்கினது என்னை! - தந்

5. சிங்காரக் கன்னிமாரே, - உம்
அலங்காரக் கும்மி அடித்துப் படித்து,
மங்காத உம் மணவாளன் யேசுதனை
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும் - தந

## தந்தேன் என்னை இயேசுவே

தந்தேன் என்னை இயேசுவே
இந்த நேரமே உமக்கே
உந்தனுக்கே ஊழியஞ் செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும்

1. ஜீவகாலம் முழுதும்
தேவ பணி செய்திடுவேன்
ப+வில் கடும் போர் புரிகையில்
காவும் உந்தன் கரத்தினில் வைத்து

2. உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய் சர்வ ஆயுதம் ப+ண்டு
நானிலத்தினில் நாதா வெல்லுவேன்

3. உந்தன் சித்தமே செய்வேன்
எந்தன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
இயேசுவே அங்கே இதோ போகிறேன்

4. கஷ்டம், நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடி சூழ்ந்திட்டாலும்
அஷ்டதிக்கும் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திடும்

5. ஒன்றுமில்லை நான் ஐயா
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும்

## தம் கிருபை பெரிதல்லோ

தம் கிருபை பெரிதல்லோ
எம் ஜீவனிலும் அதே
இம்மட்டும் காத்ததுவே
இன்னும் தேவை கிருபை தாருமே

1. தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை
வாழ்நாளெல்லாம் அது போதுமே
சுகமுடன் தம் பெலமுடன்
சேவை செய்ய கிருபை தாருமே

2. நிர்மூலமாகாததும் நிற்பதுமோ கிருபை
நீசன் என் பாவம் நீங்கினதே
நித்திய ஜீவன் பெற்றுக் கொண்டேன்
காத்துக் கொள்ள கிருபை தாருமே

3. தினம் அதிகாலையில் தேடும் புது கிருபை
மனம் தளர்ந்த நேரத்திலும்
பெலவீன சரீரத்திலும்
போதுமே உம் கிருபை தாருமே

4. மாபரிசுத்த ஸ்தலம் கண்டடைவேன் கிருபை
மூடும் திரை கிழிந்திடவே
தைரியமாய் சகாயம் பெற
தேடி வந்தேன் கிருபை தாருமே

5. ஒன்றை ஒன்று சந்திக்கும் சத்தியமும் கிருபை
என்றும் மறவேன் வாக்குத்தத்தம்
நீதியுமே சமாதானமே
நிலை நிற்கும் கிருபை தாருமே

6. ஸ்தோத்திர ஜெபத்தினால் பெருகுதே கிருபை
ஆத்தும பாரம் கண்ணீரோடே
சோர்வின்றி நானும் வேண்டிடவே
ஜெபவரம் கிருபை தாருமே

**தம் ரத்தததத்தில் தோய்ந்த**

। கேள்வி

1. தம் ரத்தததத்தில் தோய்ந்த
அங்கி போர்த்து,
மாதர் பின் புலம்ப
நடந்து

2. பாரச் சிலுவையால்
சோர்வுறவே
துணையாள் நிற்கின்றான்
பாதையே.

3. கூடியே செல்கின்றார்
அப்பாதையே
பின்னே தாங்குகின்றான்
சீமோனே

4. குருசை சுமந்தெங்கே
செல்லுகின்றார்?
முன் தபங்கிச் சுமக்கும்
அவர் யார்?

II மறுமொழி

5. அவர் பின் செல்லுங்கள்
கல்வாரிக்கே
அவர் பராபரன்
மைந்தனே.

6. அவரின் நேசரே,
நின்று, சற்றே
திவ்விய முகம் உற்று
பாருமே.

7. சிலுவைச் சரிதை
கற்றுக் கொள்வீர்
பேரன்பை அதனால்
அறிவீர்.

8. பாதையில் செல்வோரே:
முன் ஏகிடும்
ரூபத்தில் காணீரோ
சௌந்தரியம்?

III சிலுவை சரிதை

9. குருசில் அறையுண்ட
மனிதனாய்
உம்மை நோக்குகின்றேன்
எனக்காய்

10. கூர் முள் உம் கிரீடமாம்
குரூசாசனம்
சிந்தினீர் எனக்காய்
உம் ரத்தம்

11. உம் தலை சாய்க்கவோ
திண்டு இல்லை:
கட்டையாம் சிலுவை
உம் மெத்தை.

12. ஆணி கை கால், ஈட்டி
பக்கம் பாய்ந்தும்,
ஒத்தாசைக்கங்கில்லை
எவரும்

13. பட்டபகல் இதோ
ராவாயிற்றே:
தூரத்தில் நிற்கின்றார்
உற்றாரே.

14. ஆ, பெரும் ஓலமே!
தோய் சோரியில்
உம் சிரம் சாய்க்கிறீர்
மார்பினில்:

15. சாகும் கள்ளன் உம்மை
நிந்திக்கவும்,
சகிக்கின்றீரே நீர்
என்னாலும்.

16. தூரத்தில் தனியாய்
உம் சொந்தத்தார்
மௌனமாய் அழுது
நிற்கின்றார்.

17. “இயேசு நாசரேத்தான்
யூதர் ராஜா”
என்னும் விலாசம் உம்
பட்டமோ?

18. பாவி என் பொருட்டு
மாளவும் நீர்
என்னில் எந்நன்மையை
காண்கின்றீர்?

IV சிலுவையின் அழைப்பு
(குருவானவர் பாடுவது)

19. நோவில் பெற்றேன் சேயே:
அன்பில் காத்தேன்
நீ விண்ணில் சேரவே
நான் வந்தேன்.

20. தூரமாய் அலையும்
உன்னைக் கண்டேன்:
என்னண்டைக் கிட்டிவா,
அணைப்பேன்.

21. என் ரத்தம் சிந்தினேன்
உன் பொருட்டாய்:
உன்னைக் கொள்ள வந்தேன்
சொந்தமாய்.

22. எனக்காய் அழாதே,
அன்பின் சேயே:
போராடு, மோட்சத்தில்
சேரவே.

V இயேசுவை நாம் வேண்டல்

23. நான் துன்ப இருளில்
விண் ஜோதியே,
சாமட்டும் உம் பின்னே
செல்வேனே:

24. எப்பாரமாயினும்
உம் சிலுவை
நீர் தாங்கின் சுமப்பேன்
உம்மோடே.

25. நீர் என்னைச் சொந்தமாய்
கொண்டால், வேறே
யார் உம்மிலும் நேசர்
ஆவாரே?

26. இம்மையில் உம்மண்டை
நான் தங்கியே
மறுமையில் வாழ செய்யுமே.

**தம்மண்டை வந்த பாலரை**

1. தம்மண்டை வந்த பாலரை
ஆசீர்வதித்த ரட்சகர்,
இப்போதும் சிறுவர்களை
அணைக்கத் தயையுள்ளவர்.

2. ஆ, இயேசுவே, இப்பிள்ளையை
அணைத்து ஏந்தியருளும்
அளவில்லாசீர்வாதத்தை
அன்பாகத் தந்திரட்சியும்.

## தயாள இயேசு, தேவரீர்

1. தயாள இயேசு, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்
வெள்ளோலை தூவிக்கூட்டத்தார்
ஓசன்னா ஆர்ப்பரிக்கிறார்.

2. தாழ்வாய் மரிக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்
மரணம் வெல்லும் வீரரே
உம் வெற்றி தோன்றுகின்றதே.

3. விண்ணோர்கள் நோக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்
வியப்புற்றே அம்மோஷத்தார்
அடுக்கும் பலி பார்க்கிறார்.

4. வெம் போர் முடிக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
தம் ஆசனத்தில் ராயனார்
சுதனை எதிர்பார்க்கிறார்.

5. தாழ்வாய் மரிக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
நோ தாங்கத் தலை சாயுமே@
பின் மேன்மை பெற்று ஆளுமே.

## தாசரே இத்தரணியை அன்பாய்

தாசரே இத்தரணியை அன்பாய்
இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்

நேசமாய் இயேசுவைக் கூறுவோம் அவரைக்
காண்பிப்போம்
மாவிருள் நீக்குவோம் வெளிச்சம் வீசுவோம்

1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமப்போரை
வருந்தியன்பாய் அழைத்திடுவோம்
உரித்தாய் இயேசு பாவப்பாரத்தை
நமது துக்கத்தை நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே

2. பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்
உசித நன்மைகள் நிறைந்து தமை மறந்து
இயேசு கனிந்து திரிந்தனரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்
பொறுக்க வொண்ணா கஷ்டத்துக்குள்
நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே

4. இந்து தேச மாது சிரோமணிகளை
விந்தை யொளிக்குள் வரவழைப்போம்
சுந்தர குணங்களடைந்து அறிவிலுயர்ந்து
நிர்பந்தங்கள் தீர்ந்து சிறந்திலங்கிட

5. மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்
ஊக்கமாக ஜெபித்திடுவோம் நாமுயன்றிடுவோம்
நாம் உழைத்திடுவோம், நாம் ஜெயித்திடுவோம்

**தாவீதைப் போல நடனமாடி**

தாவீதைப் போல நடனமாடி
அப்பாவை ஸ்தோத்தரிப்பேன்
இயேசப்பா ஸ்தோத்திரம்

1. என்ன வந்தாலும் எது நடந்தாலும்
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன் - இயேசப்பா

2. கைத்தாளத்தோடும் மத்தாளத்தோடும்
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன்

3. பரிசுத்த இரத்தத்தால் பாவங்கள் கழுவிய
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன்

4. ஆவியினாலே அபிஷேகம் செய்த
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன்

5. கிறிஸ்துவுக்குள்ளாய் முன் குறித்தாரே
அப்பாவை ஸ்தோத்திரிப்பேன்

## திருக்கரத்தால் தாங்கி என்னை

திருக்கரத்தால் தாங்கி என்னை
திருச்சித்தம் போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினமும் வனைந்திடுமே

1. உம் வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழி நடத்தும்

2. ஆழ்கடலில் அலைகளினால்
அசையும்போது என் படகில்
ஆத்ம நண்பர் இயேசு உண்டே
சேர்ந்திடுவேன் அவர் சமூகம்

3. அவர் நமக்காய் ஜீவன் தந்து
அளித்தனரே பெரிய மீட்பு
கண்களினால் காண்கிறேனே
இன்பக் கானான் தேசமதை

## திருப்பாதம் நம்பி வந்தேன்

திருப்பாதம் நம்பி வந்தேன் கிருபை நிறை இயேசுவே
தமதன்பைக் கண்டடைந்தேன் தேவ சமூகத்திலே

1. இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன்

2. என்னை நோக்கிக் கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே

3. மனம் மாற மாந்தன் நீரல்ல
மன வேண்டுதல் கேட்டிடும்
எனதுள்ளம் ஊற்றி ஜெபித்தே
இயேசுவே உம்மை அண்டிடுவேன்

4. என்னைக் கைவிடாதிரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன்
உமது பெலன் ஈந்திடுமே

5. உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
தமது முகப் பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுதே

6. சத்துரு தலை கவிழ்ந்தோட
நித்தமும் கிரியை செய்திடும்
என்னை தேற்றிடும் அடையாளம்
இயேசுவே இன்று காட்டிடுமே

7. விசுவாசத்தால் பிழைத்தோங்க
வீர பாதை காட்டிடுமே
வளர்ந்து கனி தரும் வாழ்வை
விரும்பி வரம் வேண்டுகிறேன்.

## தீய மனதை மாற்ற வாரும்

தீய மனதை மாற்ற வாரும், தூய ஆவியே - கன
நேய மேவியே

1. மாய பாசத் தழுந்தி வாடி மாளுஞ் சாவிதால் - மிக
மாயும்
பாவி நான்.

2. தீமை செய்ய நாடுதென்றன் திருக்கு நெஞ்சமே, - மருள்
தீர்க்கும் தஞ்சமே

3. கிறிஸ்து மீது நாட்டங் கொண்டு கீதம் பாடவே, அவர்
கிருபை தேடவே

4. தேவ வசனப் பாலின் மீது தேட்டம் தோன்றவே, - மிகு
தெளிவு வேண்டவே

**தீராத தாகத்தால்**

1. தீராத தாகத்தால் என் உள்ளம் தொய்ந்ததே,
ஆ, ஜீவ தண்ணீரால் தேற்றும் நல் மீட்பரே,

2. விடாய்த்த பூமியில் என் பசி ஆற்றுமே,
நீர் போஷிக்காவிடில், திக்கற்றுச் சாவேனே.

3. தெய்வீக போஜனம், மெய் மன்னா தேவரீர்,
மண்ணோரின் அமிர்தம் என் ஜீவ ஊற்று நீர்.

4. உம் தூய ரத்தத்தால் என் பாவம் போக்கினீர்,
உம் திரு மாம்சத்தால் ஆன்மாவைப் போஷிப்பீர்.

5. மா திவ்விய ஐக்கியத்தை இதால் உண்டாக்குவீர்,
மேலான பாக்கியத்தை ஏராளமாக்குவீர்.

6. இவ்வருள் பந்தியில் பிரசன்னமாகுமே,
என் ஏழை நெஞ்சத்தில் எப்போதும் தங்குமே.

## துக்கம் கொண்டாட வாருமே

1.துக்கம் கொண்டாட வாருமே,
பாரும்! நம் மீட்பர் மரித்தார்
திகில் கலக்கம் கொள்ளுவோம்
இயேசு சிலுவையில் மாண்டார்.

2.போர் வீரர், பூதர் நிந்தித்தும்,
மா பொறுமையாய் சகித்தார்
நாமோ புலம்பி அழுவோம்
இயேசு சிலுவையில் மாண்டார்.

3.கை காலை ஆணி பீறிற்றே,
தவனத்தால் நா வறண்டார்
கண் ரத்தத்தாலே மங்கிற்றே
இயேசு சிலுவையில் மாண்டார்.

**துதி தங்கிய பரமண்டல**

துதி தங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்,
சுப மங்கள மிகு சம்பிரம சுகசோபன ஷேமம்!

1. அதி சுந்தர நிறை கொண்டுயர் அருள் மோக்கிஷ தீபன்,
கதி உம்பர்களட தொழும் இங்கித கருணைப் பிரதாபன்.

2. மந்தை ஆயர் பணிந்து பாதம் மகிழ்ந்து வாழ்த்திய அத்தனார்
நிந்தையாய் ஒரு கந்தை மூடவும் வந்த மாபரிசுத்தனார்.

3. திருவான் உலகரசாய் வளர் தேவ சொரூபானார்
ஒரு மாதுடை வினை மாறிட நரர் ரூபமதானார்

4. ஆபிராம் முனியிடமேவிய பதிலாள் உபகாரன்,
எபிரேயர்கள் குலம் தாவீதென் அரசற் கோர்குமாரன்.

5. சாதாரண வேதா கம சாஸ்த்ர சுவிசேஷன்,
கோதே புரி ஆதா முடை கோத்ர திரு வேஷன்.

6. விண் ணாடரும் மண் ணாடரும் மேவுந் திருப் பாதன்,
பண்ணோதுவர் கண்ணாம் வளர் பர மண்டல நாதன்.

**துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்**

1. துதிகளின் மத்தியில் வாசம் செய்யும் சேனைகளின் தேவன்
தாழ்வில் நம்மை நினைத்த அவரை வாழ்வில் போற்றிடுவோம்

அல்லேலூயா அல்லேலூயா
ஆரவாரம் செய்வோம்

2. எரிகோவின் மதிலும் இடிந்து விழுந்தது துதியின் ஆயுதத்தால்
சாத்தான் சேனை பயந்து நடுங்கிடும் துதியின் முழக்கத்தினால்

3. பவுலும் சீலாவும் சிறையில் துதித்தனர் பாடுகள் மத்தியிலும்
மீட்கப்பட்டோர் சீயோனில் பாடுவார் துதியின் புதுப்பாடல்

4. மௌனத்தில் இறங்கும் மரித்தவர் எவரும் துதிக்க முடியாதே
தேகத்தில் ஆவி உள்ளவரை துதித்தே ஆராதிப்போம்

**துதிக்கிறோம் உம்மை – வல்ல பிதாவே**

1.துதிக்கிறோம் உம்மை – வல்ல பிதாவே
துத்தியம் செய்வோம் – உமை மா அரசே
தோத்ரம் உம் மாட்சிமைக்கே – பரனே
துந்துமி மாட்சிமைக்கே – பிதாவே.

2.சுதனே யிரங்கும் – புவியோர் கடனைச்
சுமந்ததைத் தீர்த்த – தூயசெம்மறியே,
சுத்தா ஜெபங்கேளும் – பரன்வலத்
தோழா ஜெபங்கேளும் – கிறிஸ்தே.

3.நித்தியபிதாவின் மகிமையில் – நீரே,
நிமலாவியினோ – டாளுகிறீரே,
நிதமேகார்ச்சனையே – உன்னத
நேயருக் கர்ச்சனையே – ஆமேன்

# துதிசெய் மனமே நிதம் துதிசெய்

பல்லவி

துதிசெய் மனமே நிதம் துதிசெய்
துதிசெய் இம்மட்டும் நடத்தின உன் தேவனை
இன்றும் என்றும் நன்றி மிகுந்த மனதோடே

சரணங்கள்

1. உன் காலமெல்லாம் உன்னைத் தம் கரத்தில் ஏந்தி
வேண்டிய நன்மைகள் யாவும் உகந்தளித்தாரே

2. ஏகிடும் வழியில் பாடுகள் பல நேர்ந்தபோது
ஏக பரன் உன் காவலனாயிருந்தாரே

3. சோதனை பலமாய் மேகம் போல் உன்னைச் சூழ்ந்தாலும்
சேதமுறாமல் முற்றிலும் காக்க வல்லோரை

**துதித்துப் பாடிட பாத்திரமே**

1\. துதித்துப் பாடிட பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே

ஆ! அற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பரமானந்தமே
நன்றியால் உள்ளமே மிகப் பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

2\. கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப்போமே

3. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப்போமே

4. இந்த வனாந்தர யாத்திரையில்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப்போமே

5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைந்து நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே

## துதிப்போம் அல்லேலூயா பாடி

துதிப்போம் அல்லேலூயா பாடி
மகிழ்வோம் மகிபனைப் போற்றி
மகிமை தேவ மகிமை
தேவ தேவனுக்கே மகிமை - அல்லேலூயா

1. தேவன் நம்மை வந்தடையச் செய்தார்
தம்மை என்றும் அதற்காகத் தந்தார்
அற்புதங்கள் செய்யும் சர்வ வல்ல தேவன்
அடைக்கலம் கொடுத்திடுவார்

2. கூப்பிடும் வேளைகளில் என்னை
தப்புவிக்க ஆத்திரமாய் வந்தார்
சிங்கத்தின் மேலே நடந்திடுவேனே
சர்ப்பங்களை மிதித்திடுவேன்

3. பாதம் கல்லில் என்றும் இடறாமல்
கரங்களில் தாங்கிடுவார் தூதர்
ஒரு போதும் வாதை உன் கூடாரத்தை
அணுகாமல் காத்திடுவார்

4. அஞ்சிடேனே இருளிலே என்றும்
நடமாடும் கொள்ளை நோயைக் கண்டும்
பயங்கரத்திற்கும் பறக்கும் அம்பிற்கும்
பயந்திடேன் ஜெயித்திடுவேன்

5. தேவன் எந்தன் அடைக்கலமாமே
ஒரு போதும் பொல்லாப்பு வராதே
சர்வ வல்ல தேவன் தாபரமாய் நின்றே
விடுவித்துக் காத்திடுவார்

## துதிப்போம் இயேசுவை துதிப்போம்

துதிப்போம் இயேசுவை துதிப்போம்
துதிப்போம் இராஜாவை துதிப்போம் ….. (2)

1.எரிகோ மதிலை தகர்த்திட்ட
தேவன் நம்மோடு இருக்கிறார் ….. (2)
யோசுவாவின் தேவன் இன்றும்
நம்மோடிருந்து தடையை தகர்ப்பார் ….. (2)

2.சிங்கத்தின் வாயை கட்டின
தேவன் நம்மோடு இருக்கிறார் ….. (2)
தானியேலின் தேவன் இன்றும்
நம்மோடிருந்து நம்மை காப்பார் ….. (2)

3.சிறையில் கட்டுகள் அறுத்திட்ட
தேவன் நம்மோடு இருக்கிறார் ….. (2)
பவுல்சீலாவின் தேவன் இன்றும்
நம்மோடிருந்து கட்டுகள் அறுப்பார் ….. (2)

## துயருற்ற வேந்தரே

1. துயருற்ற வேந்தரே,
சிலுவை ஆசனரே,
நோவால் வாடும் முகத்தை
இருள் திரை மூடிற்றே,
எண்ணிறந்த துனபம் நீர்
மௌனமாக சகித்தீர்.

2. பலியாக மரிக்கும்
வேளை வரும் அளவும்
மூன்று மணி நேரமாய்,
துணையின்றி மௌனமாய்
காரிருளில் தேவரீர்
பேயோடே போராடினீர்.

3. தெய்வ ஏசு மைந்தனார்,
அபிஷேக நாதனார்
“தேவனே, என் தேவனே,
என்தனை ஏன் கைவிட்டீர்?”
என்றுரைக்கும் என் வாசகம்
கேள் இருண்ட ரகசியம்

## தூய ஆவியானவர் இறங்கும்

1. தூய ஆவியானவர் இறங்கும்
துரிதமாக வந்திறங்கும்
தடையாவையும் தயவாய் நீக்கி இறங்கும்

பரிசுத்த பிதாவே இறங்கும்
இயேசுவின் மூலம் இறங்கும்

2. பல பல வருடங்கள் கழிந்தும்
பாரினில் இன்னும் இருளும்
அகவில்லை எனவே நீரே இறங்கும்

3. ஜெபிப்பவர் பலரையும் எழுப்பும்
கிறிஸ்தவ சமுகத்தைத் திருத்தும்
தயாபரனே தயவாய் வேகம் இறங்கும்

4. ஐந்து கண்டம் வாழும் மனிதர்
ஐந்து காயம் காண இறங்கும்
பாடுபட்ட நாதரே இன்றே இறங்கும

# தூயாதி தூயவரே உமது புகழை, நான் பாடுவேன்

தூயாதி தூயவரே உமது புகழை, நான் பாடுவேன்
பாரில் எனக்கு வேறென்ன வேண்டும்
உயிருள்ள வரை நின் புகழ் பாட வேண்டும் - தூயாதி

1. சீடரின் கால்களைக் கழுவினவர்
செந்நீரால் என்னுள்ளம் கழுவிடுமே!

2. பாரோரின் நோய்களை நீக்கினவர்
பாவி என் பாவ நோய் நீக்கினீரே!

3. துயரங்கள் பாரினில் அடைந்தவரே
துன்பங்கள் தாங்கிட பெலன் தாருமே!

4. பரலோகில் இடமுண்டு என்றவரே
பரிவாக எனைச் சேர்க்க வேகம் வாருமே!

## தூய்மை பெற நாடு கர்த்தர் பாதமே

1. தூய்மை பெற நாடு கர்த்தர் பாதமே
நிலைத்தவர் வார்த்தை உட்கொள்ளென்றுமே
கூடி பக்தரோடு சோர்ந்தோர் தாங்குவாய்
யாவிலுமே தெய்வ தயை நாடுவாய்

2. தூய்மை பெற நாடு லோகக்கோஷ்டத்தில்
தனித்திரு நாளும் அவர் பாதத்தில்
இயேசுவைப் போலாவாய், நோக்கின் அவரை
பார்ப்போர் உன்னில் காண்பார் அவர் சாயலை

3. தூய்மை பெற நாடு கர்த்தர் நடத்த
என்ன நேரிட்டாலும் அவர்பின் செல்ல
இன்பம் துன்பம் நேர்ந்தும் விடாய் அவரை
நோக்கியவர் வாக்கில் வைப்பாய் நம்பிக்கை

4. தூய்மை பெற நாடு ஆத்மா அமர்ந்து,
சிந்தை செய்கை யாவும் அவர்க்குட்பட்டு,
அன்பின் ஜீவ ஊற்றைச் சேர்ந்து ருசிக்க
முற்றும் தூய்மையாவாய் விண்ணில் வசிக்

## தூய, தூய, தூயா!

1. தூய, தூய, தூயா! சர்வவல்ல நாதா!
தேவரீர்க் கெந்நாளும் சங்கீதம் ஏறுமே
தூய, தூய, தூயா! மூவரான ஏகா!
காருணியரே, தூய திரியேகரே!

2. தூய, தூய, தூயா! அன்பர் சூழ நின்று
தெய்வ ஆசனமுன்னர் தம் கிரீடம் வைப்பரே,
கேருபீம் சேராபீம் தாழ்ந்து போற்றப்பெற்று,
இன்றென்றும் வீற்றாள்வீர், அநாதியே!

3. தூய, தூய, தூயா! ஜோதி பிரகாசா,
பாவக் கண்ணால் உந்தன் மாண்பைக் காண யார் வல்லோர்?
நீரே தூய தூயர், மனோவாக்குக் கெட்டா
மாட்சிமை, தூய்மை, அன்பும் நிறைந்தோர்,

4. தூய, தூய, தூயா! சர்வவல்ல நாதா!
வானம் ப+மி ஆழி உம்மை ஸ்தோத்திரிக்குமே,
தூய, தூய, தூயா! மூவரான ஏகா!
காருணியரே, தூய திரியேகரே!

## தெய்வ ஆட்டுக்குட்டியே, லோகத்தாரின் மீட்பரே

1. தெய்வ ஆட்டுக்குட்டியே,
லோகத்தாரின் மீட்பரே,
உம்மால் மீட்கப்பட்ட நான்
தேவரீர்க்கு அடியான்
நீர் என் கோட்டை, தஞ்சமாம்,
ஆர் என் வாழ்வை நீக்கலாம்?

2. கர்த்தரே, என் உள்ளத்தில்
அருள் தந்தென் மனதில்
அந்தகாரம் நீங்கிட,
அன்பின் தீபம் ஸ்வாலிக்க,
ஆவியின் நல் ஈவையும்
பூர்த்தியாக அளியும்.

3. எந்த நாழிகையிலே
நீர் வந்தாலும், இயேசுவே,
உம்மையே நான் சந்திக்க,
கண்ணால் கண்டு களிக்க,
நான் விழித்திருக்கவே
நித்தம் ஏவிவாருமே.

## தெய்வன்பின் வெள்ளமே, திருவருள் தோற்றமே

1. தெய்வன்பின் வெள்ளமே, திருவருள் தோற்றமே
மெய் மனதானந்தமே!
செய்ய நின்செம்பாதம் சேவிக்க இவ்வேளை
ஐயா நின் அடி பணிந்தேன்

2. சொந்தம் உனதல்லால் சோர வழி செல்ல
எந்தாய் துணிவேனோ யான்?
புந்திக்கமலமாம் ப+மாலை கோர்த்து நின்
பொற்பாதம் பிடித்துக் கொள்வேன்

3. பாவச் சேற்றில் பலவேளை பலமின்றித்
தேவே தவறிடினும்
கூவி விளித்துந்தன் மார்போடணைத்தன்பாய்
யாவும் பொறுத்த நாதா!

4. மூர்க்ககுணம் கோபம், லோகம், சிற்றின்பம்
மோக ஏக்கம் யாவும்
தாக்கியான் தடுமாறித் தயங்கிடும் வேளையில்
தூக்கித் தற்காத்தருள்வாய்

5. ஆசை பாசம் பற்று ஆவலாய் நின்திருப்
ப+சைப்பீடம் படைப்பேன்
மோச வழிதனை முற்று மகற்றியென்
நேசனே நினைத் தொழுவேன்

6. மரணமோ, ஜீவனோ, மறுமையோ, ப+மியோ
மகிமையோ, வருங்காலமோ
பிற சிருஷ்டியோ, உயர்ந்ததோ, தாழ்ந்ததோ
பிரித்திடுமோ தெய்வன்பை?

## தெய்வாட்டுக் குட்டிக்கு

1. தெய்வாட்டுக் குட்டிக்கு பன் முடி சூட்டிடும்
இன்னிசையாய்ப் பேரோசையாய் விண் கீதம் முழங்கும்
உள்ளமே போற்றிடு, உனக்காய் மாண்டோராம்
சதாகாலமும் அவரே ஒப்பற்ற வேந்தராம்.

2. அன்பார்ந்த கர்த்தர்க்கு பன் முடி சூட்டிடும்
கை கால் விலாவின் காயங்கள் விண்ணிலும் வியங்கும்.
பார்ப்பரோ தூதரும் ஏறிட்டக் காயங்கள்?
பணிவரே சாஷ்டாங்கமாய் மூடுவர் தம் கண்கள்.

3. சமாதானக் கர்த்தர்! பன் முடி சூட்டிடும்
போர் ஓய்ந்து ஜெப ஸ்தோத்ரமே பூமியை நிரப்பும்
ஆள்வார் என்றென்றைக்கும் ஆளும் எவ்விடமும்
விண் லோக பாக்கிய சிறப்பு விளங்கி வளரும்.

4. ஆண்டாண்டும் ஆள்வோர்க்கு பன் முடி சூட்டிடும்
சராசரங்கள் சிஷ்டித்தோர் உன்னத தெய்வமும்
பாவிக்காய் ஆருயிர் ஈந்த என் மீட்பரே,
சதா நித்திய காலமாய் உமக்குத் துதியே.

## தெய்வீகக் கூடாரமே

தெய்வீகக் கூடாரமே - என்
தேவனின் சந்நிதியே
தேடி ஓடி வந்தோம்
தெவிட்டாத பாக்கியமே
மகிமை மகிமை மாட்சிமை
மாறா என் நேசருக்கே

1. கல்வாரி திருப்பீடமே
கறை போக்கும் திரு இரத்தமே
உயிருள்ள பரிசுத்த ஜீவப் பலியாக
ஒப்புக் கொடுத்தோம் ஐயா

2. ஈசோப்புல்லால் கழுவும்
இன்றே சுத்தமாவோம் உறைகின்ற பனி போல
வெண்மையாவோம் ஐயா
உம்திரு வார்த்தையினால்

3. அப்பா உன் சமூகத்தின்
அப்பங்கள் நாங்கள் ஐயா
எப்போதும் உம் திருப்பாதம் அமாந்திட
ஏங்கித் தவிக்கின்றோம்

4. உலகத்தின் வெளிச்சம் நாங்கள்
உமக்காய் சுடர் விடுவோம்
ஆனந்த தைலத்தால் அபிஷேகியும் ஐயா
அனல் மூட்டி எரியவிடும்

5. தூபமாய் நறுமணமாய்
துதிகளை செலுத்துகிறோம்
எந்நாளும் எப்போதும் எல்லா ஜெபத்தோடும்
ஆவியில் ஜெபிக்கின்றோம்

6. ஜீவனுள்ள புதிய
மார்க்கம் தந்தீர் ஐயா
மகா பரிசுத்த கூடாரத்திற்குள்ளே
மகிமையில் நுழைந்து விட்டோம்

## தேசமே பயப்படாதே

தேசமே பயப்படாதே
மகிழ்ந்து களிகூறு
சேனையின் கர்த்தர் உன் நடுவில்
பெரிய காரியம் செய்திடுவார்

1. பலத்தினாலும் அல்லவே
பராக்கிரமும் அல்லவே
ஆவியினாலே ஆகும் என்று
ஆண்டவர் வாக்கு அருளினாரே

2. தாய் மறந்தாலும் மறவாமல்
உள்ளங்கையில் வரைந்தாரே
வலக்கரத்தாலே தாங்கி உன்னை
சகாயம் செய்து உயர்த்திடுவார்

3. கசந்த மாறா மதுரமாகும்
கொடிய யோர்தான் அகன்றிடும்
நித்தமும் உன்னை நல்வழி நடத்தி
ஆத்துமாவை நிதம் தேற்றிடுவார்

4. கிறிஸ்து இயேசு சிந்தையில்
நிலைத்தே என்றும் ஜீவிப்பாய்
ஆவியின் பெலத்தால் அனுதினம் நிறைந்தே
உத்தம சாட்சியாய் விளங்கிடுவாய்

5. மாம்சமான யாவர் மீதும்
உன்னத ஆவியைப் பொழிவாரே
ஆயிரமாயிரம் ஜனங்கள் தருவார்
எழும்பி சேவையும் செய்திடுவார்

## தேன் இனிமையிலும் இயேசுவின் நாமம்

தேன் இனிமையிலும் இயேசுவின் நாமம்
திவ்விய மதுரமாமே - அதைத்
தேடியே நாடி ஓடியே வருவாய், தினமும் நீ
மனமே

1. காசினிதனிலே நேசமதாகக்
கஷ்டத்தை உத்தரித்தே - பாவக்
கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்

2. பாவியை மீட்கத் தாவியே உயிரைத்
தாமே ஈந்தவராம் - பின்னும்
நேமியாம் கருணை நிலைவரமுண்டு
நிதம் துதி மனமே

3. காலையில் பனிபோல் மாயமாய் உலகம்
உபாயமாய் நீங்கிவிடும் - என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு
கருத்தாய் நீ மனமே

4. துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல
துணைவராம் நேசரிடம் - நீயும்
அன்பதாய்ச் சேர்த்தால் அணைத்துனைக்
காப்பார்
ஆசை கொள் நீ மனமே.

5. பூலோகத்தாரும் மேலோகத்தாரும்
புகழ்ந்து போற்று நாமம் - அதைப்
பூண்டுகொண்டால்தான் பொன்னகர் வாழ்வில்
புகுவாய் நீ மனமே

## தேவ கிருபை என்றுமுள்ளதே அவர்

தேவ கிருபை என்றுமுள்ளதே
அவர் கிருபை என்றுமுள்ளதே
அவரைப் போற்றி துதித்துப்பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்

1. நெருக்கப்பட்டோம் மடிந்திடாமல்
கர்த்தர்தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர் அவர் வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

2. சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனாம் தாவீதின் தேவன் நமக்கு
முன் சென்றாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

3. அக்கினி சோதனை பட்சிக்க வந்தும்
முட்செடி தன்னில் தோன்றிய தேவன்
பாது காத்தாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

4. காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய்
என்னை நடத்தினார் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

5. வெள்ளம்போல் நிந்தை மேற்கொள்ள வந்தும்
வீரன் நெகேமியா ஆவியை அளித்தே
திட நம்பிக்கை தைரியமும் ஈந்தாரே
அவர் கிருபை என்றுமுள்ளது

6. நித்திய தேவனாம் சத்தியபரன் தான்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே
அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளதே

**தேவ தேவனைத் துதித்திடுவோம்**

1. தேவ தேவனைத் துதித்திடுவோம்
சபையில் தேவன் எழுந்தருள
ஒரு மனதோடு அவர் நாமத்தை
துதிகள் செலுத்திப் போற்றிடுவோம்

அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா கர்த்தருக்கே
அல்லேலூயா பரிசுத்தர்க்கே
அல்லேலூயா இராஜனுக்கே

2. எங்கள் காலடி வழுவிடாமல்
எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்தும்
கண்மணிபோல காத்தருளும்
கிருபையால் நிதம் வழி நடத்தும்

3. ஜீவனுள்ள நாட்களெல்லாம்
நன்மை கிருபை தொடர்ந்திடவே
தேவ வசனம் கீழ்ப்படிவோம்
தேவ சாயலாய் மாறிடுவோம்

4. வானத்தில் அடையாளம் தோன்றிடுமே
இயேசு மேகத்தில் வந்திடுவார்
நாமும் அவருடன் சேர்ந்திடவே
நம்மை ஆயத்தமாக்கிக் கொள்வோம்

**தேவசாயல் ஆக மாறி**

தேவசாயல் ஆக மாறி
தேவனோடிருப்பேன் - நானும்

1. அந்த நாளும் நெருங்கிடுதே அதி விரைவாய் நிறைவேறுதே
மண்ணின் சாயலை நான் களைந்தே நம் விண்ணவர் சாயல் அடைவேன்

2. ப+மியின் கூடாரம் என்றும் பெலவீனமே அழித்திடுமே
கை வேலையல்லாத பொன் வீடு கண்டடைந்து வாழ்ந்திடுவேன்

3. சோரும் உள்ளான மனிதன் சோதனையில் பெலமடைய
ஆற்றித் தேற்றிடும் தேற்றரவாளன் ஆண்டவர் என்னோடிருப்பார்

4. ஆவியின் அச்சார மீந்தார் ஆயத்தமாய் சேர்ந்திடவே
ஜீவனே எனது கிறிஸ்தேசு சாவு எந்தன் ஆதாயமே

5. காத்திருந்து ஜெபிப்பதினால் கழுகுபோல பறந்தெழும்பி
ஜீவயாத்திரை ஓடி முடித்து ஜீவக்கிரீடம் பெற்றிடுவேன்

6. மூன்றில் ஒன்றாய் ஜொலிப்பவரை முகமுகமாய் தரிசித்திட
வாஞ்சையாய்த் தவிக்கும் எனதுள்ளம் வாரும் என்று கூப்பிடுதே

7. உன்னத சீயோன் மலைமேல் எனதருமை இயேசுவுடன்
ஜெபவீட்டினிலே மகிழ்ந்தே நான் ஜீவிப்பேனே நீடூழியே

**தேவசேனை வானமீது கோடிகோடியாகத் தோன்றும்**

1. தேவசேனை வானமீது கோடிகோடியாகத் தோன்றும்
பலகோடித் திரள்கூடி குகைதேடி வேகம் ஓடும்
விண்மீன்கள் இடம்மாறிப் பாரெங்கும் வந்து கொட்டும்
நானோ ஆடி மிகப்பாடி என் நேசருடன் சேர்வேன்

அல்லேலூயா, அல்லேலூயா - 4

2. ஐந்து கண்டம் தனில் ஆளும் ஆட்சியாவும் அற்றுப்போகும்
இருள் சூழும் இடிமுழங்கும் கூச்சல் கேட்கும் கண்ணீர் சிந்தும்
தூயர் கூட்டம் சுத்த உள்ளம் சாட்சிப்பாடல் எங்கும் கேட்கும்
நானோ ஆடி மிகப்பாடி என் நேசருடன் சேர்வேன்

3. கடல் குமுறும் கரை உடையும் கப்பல் கவிழும் பெரும் நாசம்
போக்குவரத்து யாவும் நிற்கும் இனி உலகம் என்பதில்லை
வாக்குமாறா வேதம் கூறும் வார்த்தை யாவும் நிறைவேறும்
நானோ ஆடி மிகப்பாடி என்நேசருடன் சேர்வேன்

**தேவனுக்கே மகிமை தெய்வத்திற்கே மகிமை**

தேவனுக்கே மகிமை தெய்வத்திற்கே மகிமை
தேடி வந்து மீட்டவரே தினம் உமக்கே மகிமை - ஐயா
வாழ்க வாழ்க உம் நாமம் வாழ்க

1. உன்னதத்தில் தேவனுக்கே
மகிமை உண்டாகட்டும் - இந்தப்
பூமியிலே சமாதானமும்
பிரியமும் உண்டாகட்டும் - ஐயா

2. செவிகளை நீர் திறந்து விட்டீர்
செய்வோம் உம் சித்தம் - இந்தப்
புவிதனிலே உம் விருப்பம்
பூரணமாகட்டுமே - ஐயா

3. எளிமையான எங்களையே
என்றும் நினைப்பவரே - எங்கள்
ஒளிமயமே துணையாளரே
உள்ளத்தின் ஆறுதலே - ஐயா

4. தேடுகிற அனைவருமே
மகிழ்ந்து களிகூரட்டும் - இன்று
பாடுகிற யாவருமே
பரிசுத்தம் ஆகட்டுமே - ஐயா

5. குறை நீக்கும் வல்லவரே
கோடி ஸ்தோத்திரமே - பாவக்
கறை போக்கும் கர்த்தாவே
கல்வாரி நாயகனே - ஐயா

## தேவனே உம்மை நான் ஆராதிப்பேன்

தேவனே உம்மை நான் ஆராதிப்பேன்
இயேசுவே உம்மை நான் போற்றுகிறேன்

1. உம் கரம் வல்லமை அறிந்தோர் உம்மை
போற்றுவார் துதிப்பார் - அல்லேலூயா
சுத்தமான தண்ணீர் இரசமானதுவே
அச்செயல் செய்தவர் இன்று உன் இரட்சகர்

2. உம் கரம் காயங்கள் கண்டோர் உம்மை
போற்றுவார் துதிப்பார் - அல்லேலூயா
காணக் கூடாதவர் கல்வாரி தோன்றினார்
ருசித்தோர் கூறுவார் - இயேசுவே ஆண்டவர்

3. உம் கரம் இவ்வேளை உணர்வோர் உம்மை
போற்றுவார் துதிப்பார் - அல்லேலூயா
மாறிடும் உலகில் மாறாதவர் நீரே
உம்மை அறிந்தவர் .. கூறுவார் ஸ்தோத்திரம்

## தேவனே, நான் உமதண்டையில்

தேவனே, நான் உமதண்டையில் - இன்னும் நெருங்கிச்
சேர்வதே என் ஆவல் பூமியில்.

மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான்
கோவே, தொங்க நேரிடினும்
ஆவலாய் உம்மண்டை சேர்வேன்

1. யாக்கோபைப்போல், போகும் பாதையில் - பொழுது பட்டு
இராவில் இருள் வந்து மூடிட
தூக்கத்தால் நான் சாய்ந்து தூங்கினாலும் என் கனாவில்
நோக்கியும்மை கிட்டிச் சேர்வேன், வாக்கடங்கா நல்ல நாதா!

2. பரத்துக்கேறும் படிகள் போலவே – என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா, என்றன் தேவனே,
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னையழைத்து அன்பின் தூதனாகச் செய்யும்

3. நித்திரையினின்று விழித்துக் - காலை எழுந்து
கர்த்தாவே, நான் உம்மைப் போற்றுவேன்;
இத்தரையில் உந்தன் வீடாய் என்துயர்க் கல் நாட்டுவேனே,
என்றன் துன்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக் கிட்டிச்
சேர்வேன்

4. ஆனந்தமாம் செட்டை விரித்துப் - பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப் போயினும்
வான மண்டலங் கடந்து பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக் கிட்டிச்
சேர்வேன்

## தேவப் பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ

தேவப் பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ
சிறுமை தாழ்ச்சி அடைகிலேனே

ஆவலதாய் எனைப் பைம்புல்மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார்

1. ஆத்துமத் தன்னைக் குளிரப்பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்

2. சாநிழல் பள்ளத் திறங்கிடினும்
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே
வானபரன் என்னோடிருப்பார்
வளை தடியும் கோலுமே தேற்றும்

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்
சுக தயிலம் கொண்டென் தலையைச்
சுபமாய் அபிஷேகம் செய்குவார்

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன

## தேவா பிரசன்னம் தாருமே

தேவா பிரசன்னம் தாருமே
தேடி உம்பாதம் தொழுகிறோம்
இயேசுவே உம் திவ்ய நாமத்தில்
இன்பமுடன் கூடி வந்தோம்

1. வானம் உமது சிங்காசனம்
பூமி உமது பாதஸ்தலம்
பணிந்து குனிந்து தொழுகிறோம்
கனிந்தெம்மைக் கண்பாருமே

2. சாரோனின் ரோஜா லீலி புஷ்பம்
சாந்த சொரூபி என் இயேசுவே
ஆயிரம் பேரிலும் சிறந்தோராம்
ஆண்டவரைத் தொழுகிறோம்

3. கர்த்தர் செய்த உபகாரங்கள்
கணக்குரைத்து எண்ணலாகுமோ
இரட்சிப்பின் பாத்திரம் கையில் ஏந்தி
இரட்சகரைத் தொழுகிறோம்

4. கர்த்தர் சமூகம் ஆனந்தமே
பக்தர் சபையில் பேரின்பமே
கர்த்தர் நாமத்தைக் கொண்டாடுகிறோம்
சுத்தர்கள் போற்றும் தேவனே

5. நூற்றிருபது பேர் நடுவே
தேற்றரவாளனே வந்தீரே
உன்னத ஆவியை ஊற்றிடுமே
மன்னவனே இந்நேரமே

6. எப்போ வருவீர் என் இயேசுவே
ஏங்கி உள்ளம் உம்மைத் தேடுதே
பறந்து விரைந்து தீவிரமே
இறங்கி வாரும் இயேசுவே

**தேவாதி தேவனே பெத்தலை ஊரினிலே**

1. தேவாதி தேவனே பெத்தலை ஊரினிலே
சத்திர கொட்டினிலே (2) புல்லணை மீதிலே
தம்மை வேண்டா மானிடர்க்காய், தம்சொல் கேளா பாவிகட்காய்
தம்மைத்தாம் வெறுமையாக்கினார், அடிமை ரூபம் எடுத்து வந்தாரே
ஆ வினோதமே ஆ வினோதமே

2. தேவாதி தேவனே பெத்தலை ஊரினிலே
சத்திர கொட்டினிலே (2) புல்லணை மீதிலே
மந்தைக் காக்கும் வேளையிலே, தங்க மாட்டு கொட்டினிலே
கந்தைக் கோலம் பூண்டு வந்தனர், மனுஷத் தன்மை யாவும் ஏற்றாரே
ஆ வினோதமே ஆ வினோதமே

3. தேவாதி தேவனே பெத்தலை ஊரினிலே
சத்திர கொட்டினிலே (2) புல்லணை மீதிலே
வானம் பார்த்த மேய்ப்பர்கட்கும், நிதம் பார்த்த சாஸ்திரகட்கும்
உன்னதத்தின் தேவன் தோன்றினார், தேவ பாலனாய் பிறந்தாரே
ஆ வினோதமே ஆ வினோதமே

## தேவை நிறைந்தவர் இயேசு

தேவை நிறைந்தவர் இயேசு தேவா வல்லமைதந்திடுமே
தேவைகள் சந்திக்க ஏற்றதோர் வல்லமை
வேளையில் தந்திடுமே .. இந்த

1. தேவைமிக்க ஒரு நாட்டினைத் தந்தீர் வல்லமைதந்திடுமே
எத்தனை மதங்கள் எத்தனை தெய்வங்கள்
கர்த்தரே தெய்வம் என்றே காட்ட வல்லமை தந்திடுமே

2. நாடுகள் நடுவினில் அமைதியே இல்லை
வல்லமைதந்திடுமே
திறப்பின் வாசலில் நின்று களைப்பின்றி புலம்பிட
எங்களை எழுப்பிடுமே தேவா வல்லமை தந்திடுமே

3. நித்திய நாட்டுக்கு மக்களைச் சேர்க்க வல்லமைதந்திடுமே
நிலையில்லா உலகினில் நிலைநிற்கும் சேமிப்பு
ஆத்துமாக்கள் மட்டுமே தேவா வல்லமை தந்திடுமே

**தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்**

1. தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும் துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் நேர்ந்திடும் இருளாய்த் தோன்றும்எங்கும்
சோதனை வரும் வேளையில் சொற்கேட்கும் செவியிலே
பரத்திலிருந்து ஜெயம் வரும்பரன் உன்னைக்காக்கவல்லோர்
காக்கும்வல்ல மீட்பர் உண்டெனக்கு காத்திடுவார் என்றுமே

2. ஐயம் மிருந்ததோர் காலத்தில் ஆவி குறைவால்தான்
மீட்பர் உதிர பெலத்தால் சத்துருவை வென்றேன்
என் பயம் யாவும் நீங்கிற்றே இயேசு கை தூக்கினார்
முற்றும் என்னுள்ளம் மாறிற்று இயேசென்னைக் காக்கவல்லோர்

3. என்ன வந்தாலும் நம்புவேன் என் நேச மீட்பரை
யார் கைவிட்டாலும் பின் செல்வேன் எனது இயேசுவை
அகல ஆழ உயரமாய் எவ்வளவன்பு கூர்ந்தார்
என்ன துன்பங்கள் வந்தாலும் என்னைக் கைவிடமாட்டாh

## தோத்திரம் பாடியே போற்றிடுவேன்

தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
தேவாதி தேவனை ராஜாதி ராஜனை
வாழ்த்தி வணங்கிடுவேன்

1. அற்புதமான அன்பே – என்னில்
பொற்பரன் பாராட்டும் தூய அன்பே
என்றும் மாறா தேவ அன்பே
என்னுள்ளம் தங்கும் அன்பே

2. ஜோதியாய் வந்த அன்பே – பூவில்
ஜீவன் தந்து என்னை மீட்ட அன்பே
தியாகமான தேவ அன்பே
திவ்விய மதுர அன்பே

## நன்றி என்று சொல்லுகிறோம் நாதா

நன்றி என்று சொல்லுகிறோம் நாதா
நாவாலே துதிக்கிறோம் நாதா

நன்றி இயேசு ராஜா
நன்றி இயேசு ராஜா

1. கடந்த நாட்கள் காத்தீரே நன்றி ராஜா
புதிய நாளை தந்தீரே நன்றி ராஜா

2. ஆபத்திலே காத்தீரே நன்றி ராஜா
அதிசயம் செய்தீரே நன்றி ராஜா

3. வாழ்க்கையிலே ஒளி விளக்காய் வந்தீரையா
வார்த்தை என்ற மன்னாவை தந்தீரையா

4. அடைக்கலமே கேடயமே நன்றிராஜா
அன்பே என் ஆறுதலே நன்றிராஜா

5. தனிமையிலே துணை நின்றீர் நன்றிராஜா
தாயைப் போல் தேற்றினீர் நன்றிராஜா

6. சோர்ந்து போன நேரமெல்லாம் தூக்கினீரே
சுகம் தந்து இதுவரை தாங்கினீரே

7. புதுவாழ்வு தந்தீரே நன்றிராஜா
புதுபெலன் தந்தீரே நன்றிராஜா

8. ஊழியம் தந்தீரே நன்றிராஜா
உடனிருந்து நடத்தினீரே நன்றிராஜா

**நன்றியால் துதிபாடு - நம் இயேசுவை**

நன்றியால் துதிபாடு - நம் இயேசுவை
நாவாலே என்றும் பாடு
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மையுள்ளவர் - நன்றி

1. எரிகோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்து விழும்

2. செங்கடல் நம்மைச் சூழ்ந்து கொண்டாலும்
சிலுவையின் நிழலுண்டு
பாடிடுவோம் துதித்திடுவோம்
பாதைகள் கிடைத்துவிடும்

3. கோலியாத் நம்மை எதிர்த்து வந்தாலும்
கொஞ்சமும் பயம் வேண்டாம்
இயேசு என்னும் நாமம் உண்டு
இன்றே ஜெயித்திடுவோம்

## நமக்கொரு பாலகன் பிறந்தார்

நமக்கொரு பாலகன் பிறந்தார்
நமக்கோர் சுதன் கொடுக்கப்பட்டார்
அவர் இயேசு தெய்வ மைந்தனாம்
அவர் பாதம் வணங்குவோம்
உன்னதத்தில் மகிமை
பூமியில் அமைதி
என்றும் உண்டாகவே

1. அதிசயமானவர் அவர் ஆலோசனை கர்த்தா
வல்லமையுள்ளவர் அமைதி காப்பவர்
இம்மானுவேலவர் என்றும் நம்மோடிருப்பவர்
இருளை அகற்றி ஒளியை தருபவர்
- நமக்கொரு

2. பாவிகள் நமக்காய் இந்த பாரில் உதித்தவர்
வான்மகிமைவிட்டு ஏழையாய் வந்தவர்
தேவாதி தேவனை இந்த ராஜாதி ராஜனை
ஏகமாய் போற்றியே வாழ்த்திடுவோம் நாமே
- நமக்கொரு

## நம் இயேசு நல்லவர்

நம் இயேசு நல்லவர்
ஒரு போதும் கைவிடார்
ஒரு நாளும் விலகிடார்

ஒன்று சேர்ந்து நாம் துதிப்போம்
சாத்தானை மிதிப்போம்
தேசத்தை சுதந்திரிப்போம்

1. அதிசயமானவர்
ஆறுதல் தருகிறார்
சர்வ வல்லவர்
சமாதானம் தருகிறார் - உனக்கு

2. கண்ணீரைக் காண்கிறார்
கதறலைக் கேட்கிறார்
வேதனை அறிகிறார்
விடுதலை தருகிறார் - இன்று

3. எதிர்காலம் நமக்குண்டு
எதற்கும் பயமில்லை
அதிகாரம் கையிலே
ஆளுவோம் நேசத்தை - நாம்

4. நொறுங்குண்ட நெஞ்சமே
நோக்கிடு இயேசுவை
கூப்பிடு உண்மையாய் - இன்று
குறையெல்லாம் நீக்குவார் - உன்

5. நண்பனே கலங்காதே
நம்பிக்கை இழக்காதே
கண்ணீரைத் துடைப்பவர்
கதவண்டை நிற்கிறார்

6. எத்தனை இழப்புகள்
ஏமாற்றம் தோல்விகள்
கர்த்தரோ மாற்றுவார்
கரம் நீட்டித் தேற்றுவார்

7. என் இயேசு வருகிறார்
மேகங்கள் நடுவிலே
மகிமையில் சேர்த்திட
மறுரூபமாக்குவார்

## **நம்பிவந்தேன் மேசியா**

நம்பிவந்தேன் மேசியா
நான் நம்பிவந்தேனே -திவ்ய
சரணம்! சரணம்! சரணம் ஐயா
நான் நம்பிவந்தேனே.

1. தம்பிரான் ஒருவனே
தம்பமே தருவனே - வரு
தவிது குமர குரு
பரமனுவேலே நம்பிவந்தேனே - நான்

2. நின் பாத தரிசனம்
அன்பான கரிசனம் - நித
நிதசரி தொழுவ திதம் எனவும்
உறுதியில் நம்பிவந்தேனே – நான்

3. நாதனே கிருபைகூர்;
வேதனே சிறுமைதீர் – அதி
நலம் மிகும் உனதிரு
திருவடி அருளே நம்பிவந்தேனே – நான்

4. பாவியில் பாவியே
கோவியில் கோவியே - கன
பரிவுடன் அருள்புரி
அகல விடாதே நம்பிவந்தேனே.

5. ஆதி ஓலோலமே
பாதுகாலமே - உன
தடிமைகள் படுதுயர் அவதிகள்
மெத்த - நம்பிவந்தேனே – நான

## நல் மீட்பர் இயேசு நாமமே

1. நல் மீட்பர் இயேசு நாமமே
என் காதுக்கின்பமாம்
புண்பட்ட நெஞ்சை ஆற்றவே
ஊற்றுண்ட தைலமாம்

2. அந்நாமம் நைந்த ஆவியை
நன்றாகத் தேற்றுமே
துக்கத்தால் தொய்ந்த உள்ளத்தை
திடப்படுத்துமே

3. பசித்த ஆத்துமாவுக்கு
மன்னாவைப்போலாகும்
இளைத்துப்போன ஆவிக்கு
ஆரோக்கியம் தந்திடும்

4. என் ரட்சகா, என் கேடகம்
என் கோட்டையும் நீரே
நிறைந்த அருள் பொக்கிஷம்
அனைத்தும் நீர்தாமே

**நல் மீட்பர் பட்சம் நில்லும் இரட்சண்ய வீரரே**

1. நல் மீட்பர் பட்சம் நில்லும் இரட்சண்ய வீரரே
இராஜாவின் கொடியேற்றி போராட்டம் செய்யுமே
சேனாதிபதி இயேசு மாற்றாரை மேற்கொள்வார்
பின்வெற்றி கிரீடம் சூடி செங்கோலும் ஓச்சுவார்

2. நல் மீட்பர் பட்சம் நில்லும் எக்காளம் ஊதுங்கால்
போர்க்கோலத்தோடு சென்று மெய் விசுவாசத்தால்
அஞ்சாமல் ஆண்மையோடே போராடி வாருமேன்
பிசாசின் திரள்சேனை நீர் வீழ்த்தி வெல்லுமேன்.

3. நல் மீட்பர் பட்சம் நில்லும் எவ்வீர சூரமும்
நம்பாமல், திவ்விய சக்தி பெற்றே பிரயோகியும்
சர்வாயுதத்தை ஈயும் கர்த்தாவை சாருவீர்
எம்மோசமும் பாராமல் முன் தண்டில் சேல்லுவீர்

4. நல் மீட்பர் பட்சம் நில்லும் போராட்டம் ஓயுமே
வெம்போரின் கோஷ்டம், வெற்றிப் பாட்டாகமாறுமே
மேற்கொள்ளும், வீரர் ஜீவ பொற் கிரீடம் சூடுவார்
விண்லோக நாதரோடே வீற்றரசாளுவார்

**நள்ளி ராவினில் மாட்டுத் தொழுவமதில்**

நள்ளி ராவினில் மாட்டுத் தொழுவமதில்
சின்ன இயேசு பாலகன் பூமியில் பிறந்தாரே

1. அதிசயமானவரே, ஆலோசனைக் கர்த்தரே
மந்தைகள் நடுவினிலே விந்தையாய் உதித்தாரே
இம்மானுவேல் தேவ இம்மானுவேல்
நம் பாவம் போக்க வந்த இம்மானுவேல்
- நள்ளிராவினில்

2. மாளிகை மஞ்சம் இல்லை, பொன்னும் பொருளும் இல்லை
செல்வம் வெறுத்த செல்வமே, இவர் உலகில் வந்த தெய்வமே
இம்மானுவேல் தேவ இம்மானுவேல்
நம் பாவம் போக்க வந்த இம்மானுவேல்
- நள்ளிராவினில

**நள்ளிரவில் மா தெளிவாய்**

1. நள்ளிரவில் மா தெளிவாய்
மாண் பூர்வ கீதமே
விண் தூதர் வந்தே பாடினார்
பொன் வீணை மீட்டியே;
“மாந்தர்க்கு சாந்தம் நல் மனம்
ஸ்வாமி அருளாலே;”
அமர்ந்தே பூமி கேட்டதாம்
விண் தூதர் கீதமே.

2. இன்றும் விண் விட்டுத் தூதர்கள்
தம் செட்டை விரித்தே,
துன்புற்ற லோகம் எங்குமே
இசைப்பார் கீதமே;
பூலோகக் கஷ்டம் தாழ்விலும்
பாடுவார் பறந்தே;
பாபேல் கோஷ்டத்தை அடக்கும்
விண் தூதர் கீதமே.

## நானும் என் வீட்டாருமோவென்றால்

நானும் என் வீட்டாருமோவென்றால்
கர்த்தரையே சேவிப்போம்
நீயும் சேவிப்பாயா - 2

1. கர்த்தரையே சேவிப்பது ஆகாததென்று கண்டால்
யாரை நீ சேவிப்பாய் என்பதை இன்றே நீ தீர்மானம்
செய்வாய்

2. நம் பாதையில் காப்பாற்றியே கர்த்தர் நடத்தினாரே
கர்த்தர் தந்த ஆசீர் யாவும் கண்டு நன்றியாய்
சேவிப்பாயா

3. நன்மையான ஈவுகளை தேவாதி தேவன் தந்தார்
கீழ்படிந்தே அவர் சத்தம் கேட்டு சாட்சியாய் ஜீவிப்பாயா

## நான் ஆராதிக்கும் இயேசு நல்லவர்

நான் ஆராதிக்கும் இயேசு நல்லவர்
நம்பிடுவாய் நீ நம்பிடுவாய்

1. கலங்கிபோன நேரத்திலும்
கரம் பிடித்து நடத்துவார்
தம் சிரகாலே உன்னை மூடி
பாதுகாத்து நடத்துவார்

2. பொல்லாத வார்த்தைகள் வந்தனவோ
பொறுமையாக நீ சகித்தாயோ
இயேசுவின் அன்பு தேற்றிடுமே நீ
அவரின் மார்பில் சாய்ந்திடுவாய்

3. மனிதர் உன்னை வெறுத்தாலும்
மாராத இயேசு இருக்கிறார்
தனிமையான நேரத்திலும் உன்
தந்தையாய் வந்து தேற்றிடுவார்

**நான் உம்மைப்பற்றி இரட்சகா வீண் வெட்கம் அடையேன**

1. நான் உம்மைப்பற்றி இரட்சகா வீண் வெட்கம் அடையேன்
பேரன்பைக் குறித்தாண்டவா நான் சாட்சி கூறுவேன்

சிலுவையண்டையில் நம்பி வந்து நிற்கையில்
பாவப் பாரம் நீங்கி வாழ்வடைந்தேன்
எந்த நேரமும் எனதுள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்

2. ஆ, உந்தன் நல்ல நாமத்தை, நான் நம்பி சார்வதால்
நீர் கைவிடீர்! இவ்வேழையை, காப்பீர் தேவாவியால்

3. மா வல்ல வாக்கின் உண்மையை, கண்டுணரச் செய்தீர்
நான் ஒப்புவித்த பொருளை, விடாமல் காக்கிறீர்

**நான் நேசிக்கும் தேவன்**

நான் நேசிக்கும் தேவன் இயேசு இன்றும் ஜீவிக்கிறார் - அவர்
நேற்றும் இன்றும் நாளை என்றும் மாறாதவர் (2)
நான் பாடி மகிழ்ந்திடுவேன், என் இயேசுவைத் துதித்திடுவேன்
என் ஜீவிய காலமெல்லாம் அவர் பாதத்தில் அமர்ந்திருப்பேன்

1. கடலாம் துன்பத்தில் தவிக்கும் வேளையில்
படகாய் அவர் வருவார்
இருள் தனிலே பகலவனாய்
துணையாய் ஒளி தருவார்!

2. பாவ நோயாலே வாடும் நேரத்தில்
மருத்துவராகிடுவார்
மயங்கிவிழும் பசிதனிலே
மன்னாவைத் தந்திடுவார்!

3. தூற்றும் மாந்தரின் நடுவில் எந்தனைத்
தேற்றிட வந்திடுவார்
கால் தளரும் வேளையிலே
ஊன்று கோலாகிடுவார்

**நான் பிரம்மித்து நின்று பேரன்பின்**

1. நான் பிரம்மித்து நின்று பேரன்பின்
பிரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்
என் உள்ளத்தில் மெய்ச் சமாதானம்
சம்பூரணமாய் அடைந்தேன்

மா தூய உதிரத்தால்
என் பாவம் நீங்கிக் கண்டேன்
இயேசையரின் இரட்சிப்பினால்
நான் ஆறுதல் கண்டடைந்தேன்

2. முன்னாளில் இவ்வாறுதல் காண
ஓயாமல் பிரயாசப்பட்டேன்
வீண் முயற்சி நீங்கின போதோ
என் மீட்பரால் அருள் பெற்றேன்

3. தம் கரத்தை என் மீதில் வைத்து
நீ சொஸ்தமாவாய் என்றனர்
நான் அவரின் வஸ்திரம் தொட
ஆரோக்கியம் அருளினார்

4. எந்நேரமும் புண்ணிய நாதர்
என் பக்கத்தில் விளங்குவார்
தம் முகத்தின் அருள் பிரகாசம்
என் பேரிலே வீசச் செய்வாh

## நாற்பது நாள் ராப் பகல்

1. நாற்பது நாள் ராப் பகல்
வனவாசம் பண்ணினீர்
நாற்பது நாள் ராப் பகல்
சோதிக்கப்பட்டும் வென்றீர்

2. ஏற்றீர் வெயில் குளிரை
காட்டு மிருகத் துணை
மஞ்சம் உமக்குத் தரை
கல் உமக்குப் பஞ்சணை.

3. உம்மைப் போல் நாங்களும்
லோகத்தை வெறுக்கவும்
உபவாசம் பண்ணவும்
ஜெபிக்கவும் கற்பியும்.

4. சாத்தான் சீறி எதிர்க்கும்
போதெம் தேகம் ஆவியை
சோர்ந்திடாமல் காத்திடும்
வென்றீரே நீர் அவனை.

5. அப்போதெங்கள் ஆவிக்கும்
மா சமாதானம் உண்டாம்
தூதர் கூட்டம் சேவிக்கும்
பாக்கியவான்கள் ஆகுவோம்

## நிகரே இல்லாத சர்வேசா

பல்லவி
நிகரே இல்லாத சர்வேசா
திகழும் ஒளி பிரகாசா

அனுபல்லவி
துதிபாடிட இயேசுநாதா
பதினாயிரம் நாவுகள் போதா

சரணங்கள்
1. துங்கன் இயேசு மெய் பரிசுத்தரே
எங்கள் தேவனை தரிசிக்கவே
துதிகளுடன் கவிகளுடன்
தூய தூயனை - நெருங்கிடுவோம் - நிகரே

2. கல்லும் மண்ணும் எம் கடவுளல்ல
கையின் சித்திரம் தெய்வமல்ல
ஆவியோடும் உண்மையோடும்
ஆதி தேவனை வணங்கிடுவோம் - நகிரே

3. பொன், பொருள்களும் அழிந்திடுமே
மண்ணும் மாயையும் மறைந்திடுமே
இதினும் விலை பெரும் பொருளே
இயேசு ஆண்டவர் திருவருளே - நிகரே

4. தேவ மைந்தனாய் அவதரித்தார்
பாவ சோதனை மடங்கடித்தார்
மனிதனுக்காய் உயிர்கொடுத்தார்
மாளும் மாந்தரை மீட்டெடுத்தார் - நிகரே

5. கொந்தளித்திடும் அலைகளையும்
கால் மிதித்திடும் கர்த்தரவர்
அடங்கிடுமே அதட்டிடவே
அக்கரை நாமும் சேர்ந்திடவே - நிகரே

6. ஜீவன் தந்தவர் மரித்தெழுந்தார்
ஜீவ தேவனே உயிர்த்தெழுந்தார்
மறுபடியும் வருவேனென்றார்
மா சந்தோஷ நாள் நெருங்கிடுதே - நிகரே

**நிமிஷங்கள் நிமிஷங்கள்**

நிமிஷங்கள் (2) வாழ்க்கையின் நிமிஷங்கள்
ஒவ்வொன்றாய் ஓடி மறைந்துவிடும்
கனவுகள் ஆயிரம் மனதார கண்டு நீ
நினைவுகள் ஆகியே மறைந்திடுமே
………. நிமிஷங்கள்

துளிதுளி சாரலும் பெரு வெள்ளமாகும்
தனிதனியாகவே சேர்ந்துவிடும்
இளைப்பாறும் நாட்களும் விரைவாக வந்திடும்
கரைசேரும் முன்னே நினைத்திடுவாய்
………. நிமிஷங்கள்

இருளினில் ஒளிகாட்டும் பெருவாழ்வு ஈட்டும்
மறுமையில் உன்னையும் சேர்த்துவிடும்
இனிதான நேசரை கரம் கூப்பி சாற்றுவாய்
கனிவாக உன்னையே அழைக்கிறாரே
………. நிமிஷங்கள்

**நீயுனக்குச் சொந்தமல்லவே**

நீயுனக்குச் சொந்தமல்லவே – மீட்கப்பட்ட பாவி
நீயுனக்குச் சொந்தமல்லவே
நீயுனக்குச் சொந்தமல்லவே
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம்

1. சிலுவைமரத்தில் தொங்கி மரித்தாரே – திருரத்தம் ரத்தம்
திரு விலாவில் வடியுது பாரே
வலிய பரிசத்தால் கொண்டாரே
வான மகிமை யுனக்கீவாரே

2. இந்த நன்றியை மறந்துபோனாயோ? யேசுவைவிட்டு
எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ?
சந்ததமுனதிதயங் காயமும்
சாமி கிறிஸ்தினுடையதல்லவோ?

3. பழைய பாவத்தாசை வருகுதோ? பசாசின்மேலே
பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ?
அழியும் நிமிஷத் தாசை காட்டியே
அக்கினிக்கடல் தள்ளுவானேன்?

4. பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயே – உலகைவிட்டுப்
பிரியினும் அவர்க்கே மரிப்பாயே
உழைத்து மரித்தும் உயிர்த்த நாதரின்
உயர்பதவியில் என்றும் நிலைப்பாய்

**நேசரே உம்திரு பாதம் அமர்ந்தேன்**

நேசரே உம்திரு பாதம் அமர்ந்தேன்
நிம்மதி நிம்மதியே
ஆர்வமுடனே பாடித்துதிப்பேன்
ஆனந்தம் ஆனந்தமே
அடைக்கலமே அதிசயமே
ஆராதனை ஆராதனை

1. உம்வல்ல செயல்கள்
நினைத்து நினைத்து
உள்ளமே பொங்குதையா
நல்லவரே நன்மை செய்தவரே
நன்றி நன்றி ஐயா
வல்லவரே நல்லவரே
ஆராதனை ஆராதனை

2. பலியான செம்மறி
பாவங்கள் எல்லாம்
சுமந்து தீர்த்தவரே
பரிசுத்த இரத்தம் எனக்காக அல்லோ
பாக்கியம் பாக்கியமே
பரிசுத்தரே படைத்தவரே
ஆராதனை ஆராதனை

3. எத்தனை இன்னல்கள்
என் வாழ்வில் வந்தாலும்
உம்மைப் பிரியேன் ஐயா
இரத்தமே சிந்தி சாட்சியாய் வாழ்வோன்
நிச்சயம் நிச்சயம்
இரட்சகரே இயேசு நாதா
ஆராதனை ஆராதனை

## பகலோன் கதிர்போலுமே

1. பகலோன் கதிர்போலுமே
இயேசுவின் ராஜரீகமே
பூலோகத்தில் வியாபிக்கும்
நீடூழி காலம் வர்த்திக்கும்.

2. பற்பல ஜாதி தேசத்தார்
அற்புத அன்பைப் போற்றுவார் ;
பாலரும் இன்ப ஓசையாய்
ஆராதிப்பார் சந்தோஷமாய்.

3. நல் மீட்பர் ராஜ்யம் எங்குமே
சிரேஷ்ட பாக்கியம் தங்குமே;
துன்புற்றோர் ஆறித் தேறுவார்,
திக்கற்றோர் வாழ்ந்து பூரிப்பார்.

4. பூலோக மாந்தர் யாவரும்
வானோரின் சேனைத் திரளும்
சாஷ்டாங்கம் செய்து போற்றுவார்,
“நீர் வாழ்க, ராயரே” என்பர்.

## பக்தரே வாரும்

1. பக்தரே வாரும்
ஆசை ஆவலோடும்
நீர் பாரும் நீர் பாரும்
இப்பாலனை
வானோரின் ராஜன்
கிறிஸ்து பிறந்தாரே

சாஷ்டாங்கம் செய்ய வாரும்
சாஷ்டாங்கம் செய்ய வாரும்
சாஷ்டாங்கம் செய்ய வாரும்
இயேசுவை.

2. தேவாதி தேவா
ஜோதியில் ஜோதி
மானிட தன்மை நீர் வெறுத்திலீர்
தெய்வ குமாரன்
ஒப்பில்லாத மைந்தன்!

3. மேலோகத்தாரே
மா கெம்பீரத்தோடு
ஜென்ம நற்செய்தி பாடிப்
போற்றுமேன்
விண்ணில் கர்த்தா நீர்
மா மகிமை ஏற்பீர்!

4. இயேசுவே வாழ்க!
இன்று ஜென்மித்தீரே
புகழும் ஸ்துதியும் உண்டாகவும்
தந்தையின் வார்த்தை
மாம்சம் ஆனார் பாரும்

## பனி தூவிடும் இரவில்

பனி தூவிடும் இரவில்
கன்னி மைந்தனாய் புவிமீதினில்
இயேசு பாலன் அவதரித்தார்
அல்லேலூயா (4) வார்த்தை மாம்சம் ஆனாரே

1. அவர் நாமமே மிக அதிசயமாமே!
ஆலோசனையின் கர்த்தர் என்றும் இவர் தானே! (2)
அல்லேலூயா (4) வார்த்தை மாம்சம் ஆனாரே

2. ராஜன் தாவீதின் இன்ப சிங்காசனமே
இவர்தாகுமே நித்திய ஆட்சி செய்வாரே (2)
அல்லேலூயா (4) வார்த்தை மாம்சம் ஆனாரே

3. அவர் பெரியவர் அவர் உலக இரட்சகரே!
அன்பு தேவனை நாமும் போற்றி துதிப்போமே! (2)
அல்லேலூயா (4) வார்த்தை மாம்சம் ஆனாரே

**பரத்தின் ஜோதியே**

1. பரத்தின் ஜோதியே
என்மேல் இறங்கிடும்
பிரகாசத்துடனே
உள்ளத்தில் விளங்கும்
நீர் ஜீவ ஜோதி, தேவரீர்
நற் கதிர் வீசக்கடவீர்.

2. நிறைந்த அருளால்
லௌகீக ஆசையை
அகற்றி, ஆவியால்
பேரின்ப வாஞ்சையை
வளர்த்து நித்தம் பலமாய்
வேரூன்றச் செய்யும் தயவாய்.

3. நீர் என்னை ஆளுகில்
நான் வாழ்ந்து பூரிப்பேன்
நீர் என்னை மறக்கில்
நான் தாழ்ந்து மாளுவேன்
என் ஊக்கம் ஜீவனும் நீரே
கடாட்சம் செய்யும், கர்த்தரே.

4. தெய்வன்பும் தயவும்
உம்மாலேயே உண்டாம்
நற் குணம் யாவுக்கும்
நீர் ஜீவ ஊற்றேயாம்
நான் வாழும்படி என்றைக்கும்
என்னை நிரப்பியருளும்.

**பரத்திலே யிருந்துதான்**

1. பரத்திலே யிருந்துதான்
அனுப்பப்பட்ட தூதன் நான்
நற்செய்தி அறிவிக்கிறேன்
பயப்படாதிருங்களேன்.

2. இதோ எல்லா ஜனத்துக்கும்
பெரிய நன்மையாய் வரும்
சந்தோஷத்தைக் களிப்புடன்
நான் கூறும் சுவிசேஷகன்

3. இன்றுங்கள் கர்த்தரானவர்
மேசியா உங்கள் ரட்சகர்
தாவீதின் ஊரில் திக்கில்லார்
ரட்சிப்புக்காக ஜென்மித்தார்

4. பரத்திலே நாம் ஏகமாய்
இனி இருக்கத்தக்கதாய்
இக்கட்டும் பாவமுமெல்லாம்
இம்மீட்பரால் நிவிர்த்தியாம்

5. குறிப்பைச் சொல்வேன் ஏழையாய்
துணியில் சுற்றப்பட்டதாய்
இப்பிள்ளை முன்னணையிலே
கிடக்கும் ஆர் கர்த்தர் தாமே.

## பரலோகத்திலிருந்து வந்திடுவார்

பரலோகத்திலிருந்து வந்திடுவார்
பரிசுத்த ஆவி என்னில் நிறைத்திடுவார்
பரிவாய் என்னை என்றும் காத்திடுவார்
என் மனதில் நிறைந்து அருள் புரிவார்

1. பரனே மனதை காத்திடுவார்
குறையை நீக்கி அருள் புரிவார்
நெருப்பாய் என்னில் எரிந்திடுவார்
புதிய ஜீவன் தந்திடுவார்

2. கருணை கடலே காத்திடுவார்
என் கலக்கம் தீர்த்து அணைத்திடுவார்
ஜீவ ஊற்றாய் வந்திடுவார்
ஆவி அபிஷேகம் தந்திடுவார்

3. அருகில் இருந்து ஆண்டிடுவார்
அருளை தினமும் பொழிந்திடுவார்
காலம் கடந்தும் நின்றிடுவார்
இரட்சிப்பின் பாதை காட்டிடுவார்

## பரிசுத்த ஆவியே, வாருமையா

பரிசுத்த ஆவியே, வாருமையா
அபிஷேகத்தால் என்னை நிரப்புமையா
புது எண்ணையால், புது பெலத்தால்
பாத்திரம் நிரம்பி வழியட்டுமே

1.ஆத்தும ஆதாயம் செய்திடவே
அழியும் மக்களை மீட்டிடவே
அனுப்பும் தேவா ஆவியினை உம்
அற்புதம் இன்று விளங்கட்டுமே

2.சிம்சோனுக்கு நீர் இரங்கினீர்
புதிய பெலத்தை கொடுத்தீரே
சோர்ந்து போன ஊழியரே, உன்னை
உயிர்பிக்க செய்யும் அபிஷேகமே

3.உலர்ந்த எலும்புகள் உயிரடைய
உன்னத ஆவியை அனுப்பினீரே
சபைகள் வளர, கால் ஊன்றி நிற்க
எழுப்புதல் இன்று அனுப்பிடுமே

**பரிசுத்த பூமியில் நாம் நிற்கிறோம்**

பரிசுத்த பூமியில் நாம் நிற்கிறோம்
பரத்தின் தூதர் படை சூழக்காண்கிறோம்
துதிப்போம் நம் இயேசுவை
பரிசுத்தரின் பிரசன்னத்தில் (2)
நாம் நிற்கிறோம்

We are standing on holy ground
And I know that there
Are angels all around
Let us praise Jesus now
We are standing in His presence (2)
On holy ground

## பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா

1. பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா
ஒப்பிலா திரு ஸ்நானத்தினால்?
பாவ தோஷம் நீங்க நம்பினீர்களா
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

மாசில்லா - சுத்தமா?
திருப் புண்ணிய தீர்த்தத்தினால்
குற்றம் நீங்கிவிட குணம் மாறிற்றா
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்?

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்ல மீட்பர் தயாளத்தினால்?
மறு ஜன்ம குண மடைந்தீர்களா
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்?

3. மணவாளன் வரக் களிப்பீர்களா
தூய நதியின் ஸ்நானத்தினால்?
மோட்சக் கரை ஏறிக் சுகிப்பீர்களா
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்?

4. மாசு கறை நீங்கும் நீசப் பாவியே
சுத்த இரத்தத்தின் சக்தியினால்
முத்திப் பேருண்டாகும், குற்றவாளியே!
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

**பரிசுத்தராம் தேவமைந்தன் பிறந்த நன்னாள்**

1. பரிசுத்தராம் தேவமைந்தன் பிறந்த நன்னாள் இன்று
மரிமடியில் குழந்தையாக தவழ்ந்து வந்தார் அன்று
நாசரேத்தில் வளர்ந்து வந்தார் பெற்றோருடன் நன்று
சுவிசேஷம் சொல்லி வந்தார் பல இடங்கள் சென்று

மகிழ் கொண்டாடுவோம் நாம் மகிழ் கொண்டாடுவோம்
பாவபாரம் நம்மை விட்டு மறைந்து போனதே
மகிழ் கொண்டாடுவோம் நாம் மகிழ் கொண்டாடுவோம்
கர்த்தர் இயேசு கிறிஸ்து நமது உள்ளில் பிறந்ததால்

2. வானில் வெள்ளி வழி நடத்த ராயர்களும் விரைந்தனர்
தொழுவத்திலே புல்லணையில் பாலகனைக் கண்டனர்
யூதர் ராஜா இயேசு எனக் கண்டு மனம் மகிழ்ந்தனர்
பொன் போளம் தூபம் தனை காணிக்கையாய் படைத்தனர்
- மகிழ்

3. பாவிகளை மீட்பதற்காய் கர்த்தர் இயேசு உதித்தார்
பாவங்களைத் தோளின் மேலே சிலுவையாக சுமந்தார்
தேவ அன்பை உலகம் உணர ஜீவ பலியாக தந்தார்
சாவை வென்று தேவ சுதன் மூன்றாம் நாளில் உயிர்த்தார்
- மகிழ்

4. குதூகலமாய் தேவனை மனம் ஸ்தோத்தரித்து பாடுதே
களிப்புடனே எந்தன் கால்கள் குதித்து நடனம் ஆடுதே
இரட்சிப்பினை நல்க வந்த இயேசுவை மனம் தேடுதே
ஜெய கிறிஸ்து மீண்டும் வரும் நாளை உலகம் நாடுதே
- மகிழ்

## பரிசுத்தர் கூட்டம் நடுவில்

பரிசுத்தர் கூட்டம் நடுவில்
ஜொலித்திடும் சுத்த ஜோதியே
அரூபியே இவ்வேளையில்
அடியார் நெஞ்சம் வாரீரோ

1. மீன் கேட்டால் பாம்பை அருள்வார் உண்டோ?
கல் தின்னக் கொடுக்கும் பெற்றோர் உண்டோ?
பொல்லாதோர் கூட செய்திடார்
நற்பிதா நலம் அருள்வார்

2. சுத்தம் விரும்பும் சுத்த ஜோதியே
விரும்பா அசுத்தம் யாவும் போக்குமே
பாவி நீச பாவி நானையா
தேவா இரக்கம் செய்யமாட்டீரோ

3. பாரும் தந்தையே எந்தன் உள்ளத்தை
யாரும் காணா உள் அலங்கோலத்தை
மனம் நொந்து மருளுகின்றேன்
பரிசுத்தம் கெஞ்சுகின்றேன்

4. துணை வேண்டும் தகப்பனே உலகிலே
என்னை எதிர்க்கும் சக்திகள் பல உண்டே
என் ஜீவன் எல்லையெங்கிலும்
பரிசுத்தம் என எழுதும்

## பரிதி தூங்கிட பாதிரா நேரத்தில்

பரிதி தூ…ங்கிட பாதிரா நே…ரத்தில்
பாரிடை பிறந்தவரே…
பாவங்கள் போ…க்கவும் சாபங்கள் நீ…க்கவும்
தரணியில் பிறந்தவரே… (2)

1. மயில்கள் ஆ…டட்டும் குயில்கள் பா…டட்டும்
வானவர் வாயார வாழ்த்…திடட்டும்… (2)
தேவ குமாரா தாவீதின் மைந்தா
தாழ்மையின் திரு…வுருவே – தியாகத்தின் திருவடிவே
- பரிதி

2. கனிகள் கனி…யட்டும் மலர்கள் மல…ரட்டும்
பரமன் நின் பெருமை புகழ்ந்தி…டட்டும் (2)
மாட்டுக்கொட்டிலில் மாபெரும் தேவன்
மானிடன் ஆ…னாரே – மாந்தரை மீட்டிடவே
- பரிதி

**பாதம் ஒன்றே வேண்டும்**

பாதம் ஒன்றே வேண்டும் .. இந்தப்
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம் - உம்

1. நாதனே, துங்க மெய் - வேதனே, பொங்குநற்
காதலுடன் துய்ய - தூதர் தொழுஞ்செய்யும்

2. சீறும் புயலினால் - வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல் - நீர்மேல் நடந்த - உம்

3. வீசும் கமழ் கொண்ட - வாசனைத் தைலத்தை
ஆசையுடன் - மரி - பூசிப் பணிந்த - பொற்

4. போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்
நீக்கிடவே மரந் - தூக்கி நடந்த - நற்

5. நானிலத்தோர் உயர் - வான் நிலத் தேற - வல்
ஆணி துளைத்திடத் - தானே கொடுத்த - உம்

6. பாதம் அடைந்தவர்க் - காதவராய் பிர
சாதம் அருள் யேசு - நாதனே, என்றும் - உன்

## பாதை காட்டும் மா யெகோவா

1. பாதை காட்டும் மா யெகோவா
பரதேசியான நான்
பலவீனன் அறிவீனன்
இவ்வுலோகம் காடுதான்
வானாகாரம்
தந்து என்னைப் போஷியும்.

2. ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்து தாருமேன்
தீப மேக ஸ்தம்பம் காட்டும்
வழியில் நடத்துமேன்
வல்ல மீட்பர்!
என்னைத் தாங்கும் இயேசுவே.

3. சாவின் அந்தகாரம் வந்து
என்னை மூடும் நேரத்தில்
சாவின்மேலும் வெற்றி தந்து
என்னைச் சேர்ப்பீர் மோட்சத்தில்
கீத வாழ்த்தல்
உமக்கென்றும் பாடுவேன்.

**பாரச் சிலுவையினை தோளில் சுமக்கும்**

பாரச் சிலுவையினை தோளில் சுமக்கும் அந்தப்
பாதம் என் தெய்வம் அல்லவோ!
தாகமாய் இருக்கிறேன் என்று சொல்லும் அவர்
ஞாபகம் நான் அல்லவோ!
அவர் ஞாபகம் நான் அல்லவோ!

1. ஈராறு சீடருடன் வாழ்ந்த அவருக்கு
இருபக்கம் கள்வர் அல்லவோ!
பாவம் அறியா அவர் பாதத்தில்
பணிந்திடும் பாக்கியம் தந்தாரல்லோ!
சுப பாக்கியம் தந்தாரல்லோ!

2. கண்களில் கண்ணீரால் பார்வையில் ஒளி மங்க
பார்த்திபன் சாவதன்றோ!
தன்னலமாகச் சென்ற பாதகன்
எனை வெல்லப் பொற்பாதம் ஆணி அல்லோ
அவர் பொற்பாதம் ஆணி அல்லோ!

3. கல்வாரி மலையில் நின்றிடும் சிலுவையே
மாபாவி நானும் வந்தேன்!
தொங்கிடும் என் தெய்வம்
தங்கிட என் உள்ளம் தந்திட இதோ வந்தேன்!
நேசர் தங்கிட இதோ வந்தேன்!

## பாரீர் கெத்சமனே

பாரீர் கெத்சமனே
பூங்காவில் என் நேசரையே
பாவி உனக்காய் வேண்டுதல் செய்திடும்
சத்தம் தொனித்திடுதே

1. தேகமெல்லாம் வருந்தி
சோகமடைந்தவராய்
தேவாதி தேவன் ஏகசுதன்
படும் பாடு எனக்காகவே

2. அப்பா என் பாத்திரமே
நீக்கும் நின் சித்தமானால்
எப்படியாயினும் சித்தம் செய்ய என்னை
தத்தம் செய்வேன் என்றாரே

3. ரத்தத்தின் வேர்வையாலே
மெத்தவும் நனைந்ததே
இம்மானுவேல் உள்ளம் உருகியே
வேண்டுதல் செய்தாரே

## பார் முன்னணையில் தேவகுமாரன் விண் ஆளும்

1. பார் முன்னணையில் தேவகுமாரன் விண் ஆளும்
நாதர் பாலகனாய் நம்பாவம் யாவும் தம்மீது
ஏற்கும் தேவாட்டுக் குட்டித் தோன்றினார்

2. மாதூய பாலன் மீட்பின் நல்ல வேந்தன் மாசற்றோ
ராகப் பூவில் வாழ்ந்தார் தீயோனை வென்று நம் பாவம்
போக்கி மகிமை மீட்பர் ஆளுகின்றார்

3. தீர்க்கர் முன்கூற, விண்தூதர் பாட விந்தையின்
பாலன் வந்துதித்தார் பூலோக மீட்பர் பாதாரம்
சேர்வோர் அழியா வாழ்வைக் கண்டடைவார்

## பார், முன்னணை ஒன்றில் தொட்டில் இன்றியே

1. பார், முன்னணை ஒன்றில் தொட்டில் இன்றியே
பாலனாம் நம் இயேசு கிடந்தனரே;
வெளியில் புல்மீது தூங்கும்பாலன் தாம்
காண மின்னிட்டதே வான்வெள்ளிகள்தாம்.

2. மா, மா, எனும் சத்தம் கேட்டு விழிப்பார்,
ஆயின் பாலன் இயேசு அழவேமாட்டார்;
நான் நேசிக்கும் நாதா, நீர் நோக்கிப் பார்ப்பீர்,
தூக்கத்தில் நீர் தங்கி ராவெல்லாம் காப்பீர்.

3. என் நாதா, என்றும் நீர் என்னை நேசிப்பீர்,
என்னோடு தரித்தே அன்பாய் அணைப்பீர்;
உம் பாலர்தம்மை நீர் ஆசீர்வதித்தே
சேர்த்திடும் விண் வீட்டில் தூயோராக்கியே.

**பாவ நாசர் பட்ட காயம்**

1. பாவ நாசர் பட்ட காயம் நோக்கி தியானம் செய்வது
ஜீவன், சுகம், நற்சகாயம், ஆறுதலும் உள்ளது

2. இரத்த வெள்ளம் பாய்ந்ததாலே அன்பின் வெள்ளம் ஆயிற்று
தெய்வ நேசம் அதினாலே மானிடர்க்குத் தோன்றிற்று.

3. ஆணி பாய்ந்த மீட்பர் பாதம் தஞ்சம் என்று பற்றினேன்
அவர் திவ்விய நேச முகம் அருள் வீசக் காண்கிறேன்

4. பாசத்தால் என் நெஞ்சம் பொங்கி துக்கத்தால் கலங்குவேன்
அவர் சாவால் துக்கம் மாறி சாகா ஜீவன் அடைவேன்

5. சிலுவையை நோக்கி நிற்க, உமதருள் உணர்வேன்
தீர்த்த ரத்தம் நெஞ்சில் பட, சமாதானம் பெறுவேன்

6. அவர் சிலுவை அடியில் நிற்பதே மா பாக்கியம்
சோர்ந்த திரு முகத்தினில் காண்பேன் திவ்விய உருக்கம்

7. உம்மை நான் கண்ணாரக் காண விண்ணில் சேரும் அளவும்
உம்மை ஓயா தியானம் செய்ய என்னை ஏவியருளும்

**பாவத்தின் பலன் நரகம்**

1. பாவத்தின் பலன் நரகம் - ஓ பாவி நடுங்கிடாயோ,
கண் காண்பதெல்லாம் அழியும் காணாததல்லோ நித்தியம்

இயேசு இராஜா வருவார்
இன்னுங் கொஞ்ச காலந்தான்
மோட்சலோகம் சேர்ந்திடுவோம்

2. உலக இன்பம் நம்பாதே, அதின் இச்சை யாவும் ஒழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே, ஓர் காசும்கூட வராதே

3. உன் காலமெல்லாம் போகுதே, உலக மாய்கையிலே,
ஓ தேவகோபம் வருமுன், உன் மீட்பரண்டை வாராயோ

4. தேவன்பின் வெள்ளம் ஓடுதே, கல்வாரி மலை தனிலே
உன் பாவம் யாவும் நீங்கிப்போம்,அதில்ஸ்நானம்செய்வதாலே.

5. மாபாவியான என்னையும், என் நேசர் ஏற்றுக் கொண்டாரே
ஓபாவி நீயும் ஓடிவா, தேவாசீர்வாதம் பெறுவாய்

**பாவ சஞ்சலத்தை நீக்க**

1.பாவ சஞ்சலத்தை நீக்க பிராண நண்பர்தான் உண்டே,
பாவப் பாரம் தீர்ந்துபோக மீட்பர் பாதம் தஞ்சமே,
சால துக்க துன்பத்தாலே நெஞ்சம் நொந்து சோருங்கால்,
துன்பம் இன்பமாக மாறும் ஊக்கமான ஜெபத்தால்.

2.கஷ்ட நஷ்டம் உண்டானாலும் இயேசுவண்டைச் சேருவோம்,
மோச நாசம் நேரிட்டாலும் ஜெப தூபம் காட்டுவோம்,
நீக்குவாரே நெஞ்சின் நோவை பலவீனம் தாங்குவார்,
நீக்குவாரே மனச் சோர்பை தீய குணம் மாற்றுவார்.

3.பலவீனமான போதும் கிருபாசனம் உண்டே,
பந்து ஜனம் சாகும் போதும் புகலிடம் இதுவே,
ஒப்பில்லாத பிராண நேசா உம்மை நம்பி நேசிப்போம்,
அளவற்ற அருள்நாதா உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்.

## பாவிக்கு புகலிடம் இயேசு இரட்சகர்

பாவிக்கு புகலிடம் இயேசு இரட்சகர்
பாரினில் பலியாக மாண்டாரே

பரிசுத்தரே பாவமானாரே
பாரமான சிலுவை சுமந்தவரே

1. உலகத்தின் இரட்சகர் இயேசுவே
உயிர் கொடுத்தார் உயிர்த்தெழுந்தார்
தம்மை நம்பினால் உன்னைக் கைவிடார்
தளராமல் நம்பி ஓடிவா

2. பாவ சாபங்கள் தீரா வியாதிகள்
பல தோல்விகள் உந்தன் வாழ்க்கையில்
கண்டு நீ மனம் கலங்குவதேன்
கர்த்தன் இயேசுவண்டை ஓடிவா

3. வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே
வாருங்கள் என்னண்டையில் என்கிறார்
இளைப்பாறுதல் தரும் இயேசுவை
இன்று தேடி நாடி நம்பி வா

4. காட்டிக் கொடுத்தான் முப்பது வெள்ளிக்
காசுக்காகவே கர்த்தன் இயேசுவை
கொலை செய்யவே கொண்டு போனாரே
கொல் கொதா மலைக்கு இயேசுவை.

5. கள்ளர் மத்தியில் ஒரு கள்ளன் போல்
குற்றமற்ற கிறிஸ்தேசு தொங்கினார்
பரிகாசமும் பசி தாகமும்
படுகாயமும் அடைந்தாரே.

6. கால்கள் கைகளில் ஆணி பாய்ந்திட
கிரீடம் முள்களில் பிண்ணி சூடிட
இரத்த வெள்ளத்தில் கர்த்தர் தொங்கினார்
இதைக் காணும் உள்ளம் தாங்குமோ.

**பாவியாகவே வாறேன்**

பாவியாகவே வாறேன், பாவம் போக்கும்
பலியாம் என் யேசுவே, வாறேன்

1.பாவக்கறை போமோ என் பாடால்? உன் பாடாலன்றிப்
போவதில்லை என்றே பொல்லாத பாவியே நான் - பாவி

2. நீ வா, உன் பாவம் என்னால் நீங்கும் என்று சொன்னீரே;
தேவா, உன் வாக்கை நம்பி, சீர்கேடன் நீசனும் நான் - பாவி

3. பேய்மருள் உலகுடல் பேராசையால் மயங்கிப்
போயும் அவற்றோடு போரில் அயர்ச்சியாய் நான் - பாவி

4. ஜீவ செல்வ ஞான சீல சுகங்கள் அற்றேன்,
தாவென்று வேண்டிய சாவில் சஞ்சரித்த நான் - பாவி

5. துன்பங்கள் நீக்கி உன்னை தூக்கி அணைப்பேன் என்றீர்
இன்ப வாக்குத்தத்தத்தை இன்றைக்கே நம்பியே நான் - பாவி

6. உன்னைச் சேர ஒட்டாமல் ஊன்றிய தடை யாவும்
உன்னன்பால் நீங்கி நல் உயிர் அடைந்தோங்கவே நான் - பாவி

**பிதாவே எங்களை கல்வாரியில்**

1.பிதாவே எங்களை கல்வாரியில்
நீர் மீட்ட அன்பை நாங்கள் உணர்ந்தே
நரர்க்காய் விண்ணில் உம் சமுகத்தில்
பரிந்து பேசும் கிறிஸ்துவுடனே
ஒரே மெய்யான பலி படைப்போம்
இங்கே அதை உம்முன் பாராட்டுவோம்.

2.ஆ எங்கள் குற்றம் குறை யாவையும்
பாராமல் கிறிஸ்து முகம் நோக்குமே
விஸ்வாஸம் மங்கி ஜெபம் குன்றியும்
உம் பேரருளைப் போக்கடித்தோமே
என்றாலும் எங்கள் பாவம் ஆக்கினை
இடையில் வைத்தோம் மீட்பர் புண்ணியத்தை.

3.இவ்வேளை எங்கள் நண்பர்க்காகவும்
உம் சன்னிதானம் வேண்டல் செய்வோமே
சிறந்த நன்மை யாவும் அளியும்
உம் மார்பினில் அணைத்துக் காருமே
எத்தீங்கும் அனுகாமல் விலக்கும்
உம்மில் நிலைக்க பெலன் அருளும்.

4.இவ்வாறு அண்டினோம் உம் சரணம்
மா சாந்தமுள்ள மீட்பரான நீர்
பேரின்பம் தருந் திவ்விய போஜனம்
கொடுப்பதாலும் தீமை நீக்குவீர்
உற்சாகத்தோடு உம்மை என்றைக்கும்
சேவித்துப் பற்றத் துணை புரியும்.

**பிறந்தார் பிறந்தார்**

பிறந்தார் பிறந்தார்
வானவர் புவி மானிடர் புகழ்
பாடிட பிறந்தார்

1.மாட்டுத் தொழுவம் தெரிந்தெடுத்தார்
மா தேவ தேவனே
மேன்மை வெறுத்தார் தாழ்மை தரித்தார்
மா தியாகியாய் வளர்ந்தார்

2.கந்தைத் துணியோ கர்த்தருக்கு
கடும் ஏழ்மைக் கோலமதோ
விலையேறப்பெற்ற உடை அலங்கரிப்பும்
வீண் ஆசையும் நமக்கேன்

**பிறந்தார் பிறந்தார் பிறந்தார்**

பிறந்தார் பிறந்தார் பிறந்தார்

பாரினை மீட்டிட பரமன் இயேசு
பரிசுத்தராய் பிறந்தார் (2)

1. நமக்கொரு பாலகன் பிறந்திட்டார் நன்மைகள் பெருகிடவே
நமக்கொரு குமாரன் ஈவானார் நீதியாய் ஆகிடவே
யாக்கோபில் ஓர் வெள்ளி உதித்திடவே இப்பூமியில்
ஒளிதரவே - இன்று
- பிறந்தார்

2. சாத்தானின் சேனை வீழவே சத்தியம் நிலைத்திடவே
காரிருள் பாவங்கள் நீக்கவே கிருபையும் பெருகிடவே
தேவ குமாரன் ஜெயமனுவேலன் தாழ்மையின் ரூபமானார் -
இன்று
- பிறந்தார்

## பிளவுண்ட மலையே

1. பிளவுண்ட மலையே புகலிடம் ஈயுமே,
பக்கம் பட்ட காயமும் பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவதோஷம் யாவையும் நீக்கும்படி அருளும்.

2. எந்தக் கிரியை செய்துமே உந்தன் நீதி கிட்டாதே,
கண்ணீர் நித்தம் சொரிந்தும் கஷ்ட தவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே நீரே மீட்பர் இயேசுவே.

3. யாதுமற்ற ஏழை நான், நாதியற்ற நீசன் தான்,
உம் சிலுவை தஞ்சமே, உந்தன் நீதி ஆடையே
தூய ஊற்றை அண்டினேன் தூய்மையாக்கேல்
மாளுவேன்.

4. நிழல் போன்ற வாழ்விலே கண்ணை மூடும் சாவிலே
கண்ணுக்கெட்டா லோகத்தில், நடுத்தீர்வை தினத்தில்,
பிளவுண்ட மலையே, புகலிடம் ஈயுமே.

**புதிய பாடல் பாடி பாடி இயேசு**

புதிய பாடல் பாடி பாடி இயேசு
ராஜாவைக் கொண்டாடுவோம்
புகழ்ந்து பாடல் பாடி பாடி இயேசு
ராஜாவைக் கொண்டாடுவோம்

1. கழுவினார் இரத்தத்தாலே
சுகம் தந்தார் காயத்தாலே
தேற்றினார் வசனத்தாலே
திடன் தந்தார் ஆவியாலே - எனக்கு

2. உறுதியாய் பற்றிக் கொண்டோம்
உம்மையே நம்பி உள்ளோம்
பூரண சமாதானம்
புவிதனில் தருபவரே - தினமும்

3. அதிசயமானவரே
ஆலோசனைக் கர்த்தரே
வல்லமை உள்ள தேவா
வரங்களின் மன்னவனே - எல்லா

4. கூப்பிட்டேன் பதில் வந்தது
குறைவெல்லாம் நிறைவானது
மகிமையின் ராஜா அவர்
மகத்துவமானவரே - இயேசு

5. மாலையில் அழுகை என்றால்
காலையில் அக்களிப்பு
கோபமோ ஒரு நிமிடம்
கிருபையோ நித்தம் நித்தம் - அவர்

## பூரண வாழ்க்கையே

1. பூரண வாழ்க்கையே!
தெய்வாசனம் விட்டு,
தாம் வந்த நோக்கம் யாவுமே
இதோ முடிந்தது!

2. பிதாவின் சித்தத்தை
கோதற முடித்தார்
தொல் வேத உரைப்படியே
கஸ்தியைச் சகித்தார்.

3. அவர் படாத் துக்கம்
நரர்க்கு இல்லையே:
உருகும் அவர் நெஞ்சிலும்
நம்துன்பம் பாய்ந்ததே.

**பெத்தலையில் பிறந்தவரைப்**

பெத்தலையில் பிறந்தவரைப்
போற்றித்துதி, மனமே - இன்னும்

1. சருவத்தையும் படைத்தாண்ட சருவவல்லவர் - இங்கு
தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானார்.
- பெத்

2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனார் - இங்கு
பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார்.
- பெத்

3. முன்னம் அவர் சொன்னபடி முடிப்பதற்காக - இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே.
- பெத்

4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர் - இங்கு
ஆக்களூட சத்தத்துக்கள் அழுது பிறந்தார்.
- பெத்

5. இந்தடைவாய் அன்புவைத்த எம்பெருமானை – நாம்
எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே.
- பெத்

**பெத்லகேம் என்னும் தாவீதின் ஊரில்**

பெத்லகேம் என்னும் தாவீதின் ஊரில்
பிறந்தனர் இயேசு பெருமான்

பாவியை மீட்க பரலோகம் விட்டு
பூலோகத்தில் உதித்தார் - பெத்லகேம்

1. விண்ணுலகம் விட்டு
மண்ணுலகம் வந்து
விண்ணோர்கள் போற்றும் தேவா

2. தொழுவத்தில் பிறந்த
பாலனை பணிய
பொன் தூபம் போளம் படைத்தார்

## பெற்றோர் உன்னை மறந்தாலும்

பெற்றோர் உன்னை மறந்தாலும்
உற்றார் உன்னை துறந்தாலும்
தேசமே உன்னைப் பகைத்துத் தள்ளினாலும்
இயேசு உன்னை ஏற்றுக்கொள்வார்

1. குற்றம் பல புரிந்தாலும்
நீ சற்றும் தயங்காமலே
இயேசுவிடம் வந்துவிட்டாலுன்னை
நேசமாய் மன்னித்தருள்வார்

2. காசு ஒன்றும் கேட்பதில்லை
இந்த இயேசு உன்னை மீட்பதற்க்கு
நெஞ்சம் மட்டும் தந்துவிட்டால் நானே
தஞ்சம் என காத்துக்கொள்வார்

## பொங்கிவரும் அருள் மனிதரை மாற்றிடுதே

பொங்கிவரும் அருள் மனிதரை மாற்றிடுதே
மங்கிப்போன மனம் புதுவாழ்வில் மலர்ந்திடுதே!

1. தீயவர் திருடரும், கொடியவர், கொலைஞரும்
இயேசுவில் மாற்றம் பெற்றார்
மாறிய மனதுடன் மங்கள வாழ்விற்கு
அழைக்கிறார் ஓடியே வா

2. தேவனின் ஆவியால் விடுதலை வாழ்வினைப்
பெற்றவர் பலருமுண்டு
இயேசு மகா இராஜன் உன்னைத்தான் அழைக்கிறார்
நம்பி நீ ஓடியே வா

3. கிருபையின் நாட்களை தயவுடன் ஏற்றிடக்
கனிவுடன் வேண்டுகிறோம்
வருகையின் நாளினில் வருந்திட வேண்டாம் நீ
அழைக்கிறார் - ஓடியே வா.

**போற்றிடு ஆன்மமே, சிஷ்டி கர்த்தாவாம் வல்லோரை**

1. போற்றிடு ஆன்மமே, சிஷ்டி கர்த்தாவாம் வல்லோரை,
ஏற்றிடு உனக்கு இரட்சிப்பு சுகமானோரை
கூடிடுவோம் பாடிடுவோம் பரனை
மாண்பாய் சபையாரெல்லோரும்

2. போற்றிடு யாவையும் ஞானமாய் ஆளும் பிரானை,
ஆற்றலாய்க் காப்பாரே தம் செட்டை மறைவில் நம்மை.
ஈந்திடுவார் ஈண்டு நாம் வேண்டும் எல்லாம்,
யாவும் அவர் அருள் ஈவாம்

3. போற்றிடு காத்துனை ஆசீர்வதிக்கும் பிரானை,
தேற்றியே தயவால் நிரப்புவார் உன் வாணாளை.
பேரன்பராம் பராபரன் தயவை,
சிந்திப்பாய் இப்போதெப்போதும்.

4. போற்றிடு ஆன்மமே, என் முழு உள்ளமே நீயும்,
ஏற்றிடும் கர்த்தரை ஜீவராசிகள் யாவும்.
சபையாரே, சேர்ந்தென்றும் சொல்லுவீரே,
வணங்கி மகிழ்வாய் ஆமென்.

# போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை

1. போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை
புனித இதயமுடனே
நேற்றும் இன்றும் என்றும் மாறா
இயேசுவை நாமென்றும் பாடித்துதிப்போம்

இயேசு என்னும் நாமமே - என்
ஆத்துமாவின் கீதமே - என் நேசரேசுவை
நான் என்றும் ஏற்றி மகிழ்ந்திடுவேன்

2. கோர பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில்
காக்குங் கரங்கொண்டு மார்பில்
சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன்

3. யோர்தான் நதி போன்ற சோதனையிலும்
சோர்ந்தமிழ்ந்து மாளாதே
ஆர்க்கும் ஜெயதொனியோடே
பாதுகாத்த அன்பை என்றும் பாடுவேன்

4. தாய் தன் பாலகனையே மறப்பினும்
நான் மறவேன் என்று சொன்னதால்
தாழ்த்தி என்னையவர் கையில் தந்து
ஜீவ பாதை என்றும் ஓடுவேன்

5. பூமியகிலமும் சாட்சியாகவே
போங்களென்ற கட்டளையதால்
ஆவி ஆத்துமாவும் தேகம் யாவுமின்று
தந்து தொண்டு செய்குவேன

**போற்றும், போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்!**

1. போற்றும், போற்றும்! புண்ணிய நாதரைப்
போற்றும்!
வானோர் கூடிப் பாடவும் இன்பமாய்
பாரிலேயும் நாமசங்கீர்த்தனஞ் செய்ய
மாந்தர் யாரும், வாரும் ஆனந்தமாய்
நேச மேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
இயேசுநாதர் நம்மையும் தாங்குவார்
போற்றும், போற்றும், பரலோகத்தைச்
சென்றடைய தெய்வகுமாரனைப் போற்றும்!
பாதுகாத்து நித்தமும் போஷிப்பார்

2. போற்றும், போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்!
பாவம் போக்கப் பாரினில் ஜென்மித்தார்
பாடுபட்டு பிராணத் தியாகமும் செய்து
வானலோக வாசலைத் திறந்தார்
மா கர்த்தாவே, ஸ்தோத்திரம் என்றும்! என்றும்!
வாழ்க, வாழ்க, ஜெபத்து இரட்சகா!
அருள் நாதா, மாசணுகா பரஞ்ஜோதி,
வல்ல நாதா, கருணை நாயகா!

3. போற்றும், போற்றும்! புண்ணிய
நாதரைப் போற்றும்!
விண்ணும் மண்ணும் இசைந்து
பாடவும்,
போற்றும், போற்றும், மீட்பர்
மகத்துவமாக
ஆட்சி செய்வார் நித்திய காலமும்,
இயேசு ராஜா மாட்சிமையோடு
வந்து,
இயேசு ஸ்வாமி, பூமியில்
ஆளுமேன்,
லோகமெங்கம் நீதியின்
செங்கோலை ஒச்சி
ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன

## மகனே உன் நெஞ்செனக்கு தாராயோ?

மகனே உன் நெஞ்செனக்கு தாராயோ? – மோட்ச
வாழ்வைத் தருவேன் இது பாராயோ?

1. அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே - பாவ
அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே

2. உன் பாவம் முற்றும் பரி கரிப்பேனே – அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே

3. பாவம் அனைத்துமே விட்டோடாயோ? – நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ?

4. உலக வாழ்வினை விட்டகல்வாயே - மகா
உவப்பாய்க் கதி ஈவேன் மகிழ்வாயே

5. உன்றன் ஆத்துமத்தை நீ படைப்பாயே – அதில்
உன்னதன் வசிக்க இடம் கொடுப்பாயே

**மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம்**

1. மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம்
இயேசு இராஜன் நம் சொந்தமாயினார்
இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்

ஆ ஆனந்தமே பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே - இந்த

2. சின்னஞ்சிறு வயதில் என்னைக் குறித்து விட்டார்
தூரம் போயினும் கண்டுக்கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக்கொள் என்றுரைத்தார்

3. எந்தச் சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது காத்துக்கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும் வரைக் காத்துக் கொள்வேன்

4. அவர் வரும் நாளினில் என்னைக் கரம்
அசைத்து
அன்பாய்க் கூப்பிட்டுச் சேர்த்துக்கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிப்பாடியே மகிழ்ந்திடுவேன்

**மங்களம் செழிக்க கிருபை அருளும்**

பல்லவி

மங்களம் செழிக்க கிருபை அருளும் மங்கள நாதனே

சரணங்கள்

1. மங்கள நித்திய மங்கள நீ
மங்கள முத்தியும் நாதனும் நீ
எங்கள் புங்கவ நீ எங்கள் துங்கவ நீ
உத்தம சத்திய நித்திய தத்துவ மெத்த மகத்துவ
அத்தனுத் கத்தனாம் ஆபிராம் தேவ நீ

2. மங்கள மணமகன் Pசயவாயி-க்கும்
மங்கள மணமகள் துநnnகைநச-க்கும்
மானுவேலர்க்கும் மகானுபவர்க்கும்
பக்தியுடன் புத்தி முத்தியளித்திடும் நித்தியனே –
உனைத்
துத்தியம் செய்திடும் சத்திய வேதர்க்கும்

3. சங்கை நித்திய நாதனும் நீ
பங்கமில் சத்திய போதனும் நீ
மங்கா மாட்சிமை நீ தங்கக் காசியும் நீ
இத்தரை இத் திருமணத்தின் இருவர்
ஒத்து நல் இன்பம் உற்றவர் வாழ நடத்தியருளுமே

**மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு**

பல்லவி

மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு - மங்கள வாழ்வு
வாழ்வினில் வாழ்வு
மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மருவிய சோபன சுப வாழ்வு

சரணங்கள்

1. துணை பிரியாது, தோகையிம்மாது
துப மண மகளிவர் இதுபோது
மனமுறை யோது வசனம் விடாது
வந்தன ருமதருள் பெறவேது – நல்ல

2. ஜீவ தயாகரா, சிருஷ்டியதிகாரா
தெய்வீக மாமண வலங்காரா
தேவகுமாரா, திருவெல்லையூரா
சேர்ந்தவர்க்கருள் தரா திருப்பீரா? – நல்ல

3. குடித்தன வீரம் குணமுள்ள தாரம்
கொடுத்துக் கொண்டாலது சமுசாரம்
அடக்கமாசாரம் அன்பு, உதாரம்
அம்புவிதனில் மனைக்கலங்காரம் – நல்ல

**மண்ணோரை மீட்டிடவே பாரில்**

மண்ணோரை மீட்டிடவே பாரில்
விண் வேந்தன் மைந்தனாகினார் (2)

1. தீர்க்கர் உறைத்த வாக்கின்படியே
மார்க்கம் திறக்க மனிதனானார்
வாக்கு மாறா தேவ மைந்தன்
ஏழைக் கன்னி மடியில் உதித்தார்
மாபுகழ் பாடுவோமே துதி சாற்றுவோமே
தூதரோடு நாமும் பாடுவோம்

2. மண்ணில் கொடிய இருள் நீங்க
மன்னன் ஜீவ ஒளியாய் தோன்றினார்
விண்ணில் மா ஒளிவிளங்க
மன்னர் மூவர் தேடி வந்தார்
மாபுகழ் பாடுவோமே துதி சாற்றுவோமே
தூதரோடு நாமும் பாடுவோம்

**மந்தையில் சேரா ஆடுகளே**

மந்தையில் சேரா ஆடுகளே
எங்கிலும் கோடி கோடி உண்டே
சிந்தையில் ஆன்ம பாரம் கொண்டே
தேடுவோம் வாரீர் திருச்சபையே - மந்தையில்

அழைக்கிறார் இயேசு
அவரிடம் பேசு நடத்திடுவார்

1. காடுகளில் பல நாடுகளில்
என் ஜனம் சிதறுண்டு சாகுவதா?
பாடுபட்டேன் அதற்காகவுமே
தேடுவோர் யார் என் ஆடுகளை?

2. சொல்லப்பட்டிராத இடங்கள் உண்டு
என்னை அங்கு சொல்ல இங்கு ஆட்கள் உண்டு
அழைப்புப் பெற்றோர் யாரும் புறப்படுவீர்
இது ஆண்டவர் கட்டளை கீழ்ப்படிவீர்

3. எனக்காய்ப் பேசிட நாவு வேண்டும்
என்னைப்போல் அலைந்திட கால்கள் வேண்டும்
என்னில் அன்புகூர ஆட்கள் வேண்டும்
அதை உன்னிடம் கேட்கிறேன் - தரவேண்டும்

## மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்

பல்லவி
மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்,
வானெக்காளத் தொனி முழங்க.

அனுபல்லவி
எரி புகை மேக ரத மேறி
ஏசு மகா ராஜன் வருங்கால்.

சரணங்கள்

1. தூதர் மின் னாற்றிசை துலங்க,
ஜோதி வான் பறை இடி முழங்க,
பாதகர் நெஞ்சம் நடுநடுங்க,
பரிசுத் தோர் திரள் மனதிலங்க.

2. வானம் புவியும் வையகமும்
மட மட வென்று நிலை பெயர,
ஆன பொருளெல்லாம் அகன் றோட,
அவரவர் தம் தம் வரிசையிலே.

3. அழிவுள் ளோராய் விதைக்கப்பட்டோர்
அழியா மேனியை அணிந்திடுவார்;
எளிய ரூபமாய் விதைக்கப்பட்டோர்
என்றும் வாழும் ஜோதிகளாய்.

# மா தூய ஆவி! இறங்கும்

மா தூய ஆவி! இறங்கும்
விண் தீபம் நெஞ்சில் ஏற்றிடும்
ஞானாபிஷேக தைலம் நீர்
நல் வரம் ஏழும் ஈகிறீர். ஆமேன்.

## மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் செய்வோம்

1. மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் செய்வோம்
வல்லவர் அன்பர் பாடிப் போற்றுவோம்
நம் கேடகம் காவல் அனாதியானோர்
மகிமையில் வீற்றுத் துதி அணிந்தோர்

2. சர்வ வல்லமை தயை போற்றுவோம்
ஒளி தரித்தோர் வானம் சூழ்ந்தோராம்
குமுறும் மின்மேகம் கோபரதமே
கொடும் கொண்டல் காற்றிருள் சூழ்பாதையே

3. மா நீச மண்ணோர் நாணல் போன்றோர் நாம்
என்றும் கைவிடீர் உம்மை நம்புவோம்
ஆ, உருக்க தயை! முற்றும் நிற்குமே
மீட்பர் நண்பர் காவலர் சிருஷ்டிகரே

4. ஆ, சர்வ சக்தி! சொல்லொன்னா அன்பே!
மகிழ்வாய் விண்ணில் தூதர் போற்றவே
போற்றிடுவோம் தாழ்ந்தோர் நாம் அற்பர் என்றும்
மெய் வணக்கமாய் துதி பாடலோடும்

**மாசில்லாத் தேவ புத்திரன்**

மாசில்லாத் தேவ புத்திரன்
மானிடனானார், ஜெய! ஜெய! (2)
மாசில்லாத் தேவ புத்திரன்
மானிடனானாரே, ஜெய! ஜெய!
மாசில்லாத் தேவ புத்திரன்
மானிடனானார், ஜெய! ஜெய!

1. ஆசீர்வாதமே! - - - - கன தேசார் நீதமே
ஆசீர்வாதமே! - - - - கன தேசார் நீதமே - - ஒளிர்
குhசினி மீததி நேசப் பி...ரகாச விண் வாச கிருபாசன
- மாசில்லாத்

2. சத்திய வாசகர் - - - - சதா - - நித்திய தேசிகர்
சத்திய வாசகர் - - - - சதா - - நித்திய தேசிகர் - - வளர்
பெத்லகேம் ஊர்தனிலே கரி சித்துக் கன்னி...யாஸ்திரி வித்தினில்
- மாசில்லாத்

3. அந்தரம் பூமியும் - - - - அதி - - சுந்தர நேமியும்
அந்தரம் பூமியும் - - - - அதி - - சுந்தர நேமியும் - - தினம்
ஐந்தொரு நாளினிலே தரு முந்தின மூ...ன்றிலொன்றாகிய
- மாசில்லா

## மான்கள் நீரோடை வாஞ்சித்து

மான்கள் நீரோடை வாஞ்சித்து
கதறும் போல் தேவனே
எந்தன் ஆத்துமா உம்மையே
வாஞ்சித்து கதறுதே

தஞ்சமே நீர் அடைக்கலம் நீர்
கோட்டையும் நீர் என்றும் காப்பீர்

1. தேவன் மேல் ஆத்துமாவே
தாகமாயிருக்கிறதே
தேவனின் சந்நிதியில் நின்றிட
ஆத்துமா வாஞ்சிக்குதே

2.ஆத்துமா கலங்குவதேன்
நேசரை நினைத்திடுவாய்
அன்பரின் இரட்சிப்பினால் தினமும்
துதித்து போற்றிடுவோம்

## மூலைக் கல் கிறிஸ்துவே

1. மூலைக் கல் கிறிஸ்துவே
அவர்மேல் கட்டுவோம்
அவர் மெய் பக்தரே
விண்ணில் வசிப்போராம்
அவரின் அன்பை நம்புவோம்,
தயை பேரின்பம் பெறுவோம்

2. எம் ஸ்தோத்ரப் பாடலால்
ஆலயம் முழங்கும்
ஏறிடும் எம் நாவால்
திரியேகர் துதியும்
மா நாமம் மிக்கப் போற்றுவோம்,
ஆனந்தம் ஆர்க்கப் பாடுவோம்

3. கிருபாகரா, இங்கே
தங்கியே கேட்டிடும்
மா ஊக்க ஜெபமே
பக்தியாம் வேண்டலும்
வணங்கும் அனைவோருமே
பெற்றிட ஆசி மாரியே

## மெய் ஜோதியாம் நல் மீட்பரே

1. மெய் ஜோதியாம் நல் மீட்பரே,
நீர் தங்கினால் ராவில்லையே;
என் நெஞ்சுக்கும்மை மறைக்கும்
மேகம் வராமல் காத்திடும்.

2. என்றைக்கும் மீட்பர் மார்பிலே,
நான் சாய்வது பேரின்பமே;
என்றாவலாய் நான் ராவிலும்
சிந்தித்துத் தூங்க அருளும்.

3. என்னோடு தங்கும் பகலில்,
சுகியேன் நீர் இராவிடில்;
என்னோடே தங்கும் ராவிலும்
உம்மாலே அஞ்சேன் சாவிலும்.

4. இன்றைக்குத் திவ்விய அழைப்பை
அசட்டை செய்த பாவியை
தள்ளாமல் வல்ல மீட்பரே,
உம்மண்டை சேர்த்துக் கொள்ளுமே.

5. வியாதியஸ்தர், வறியோர்,
ஆதரவற்ற சிறியோர்,
புலம்புவோர் எல்லாரையும்
அன்பாய் விசாரித்தருளும்.

6. பேரன்பின் சாகரத்திலும்
நான் மூழ்கி வாழுமளவும்,
என் ஆயுள்காலம் முழுதும்
உம் அருள் தந்து காத்திடும்.

## யாரை நான் புகழுவேன்

1. யாரை நான் புகழுவேன்
யாரை நான் அறிகிறேன்
என் கதியும் பங்கும் யார்
நான் பாராட்டும்மேன்மை யார்
தெய்வ ஆட்டுக்குட்டிதான்

2. யார் நான் நிற்கும் கன்மலை
யார் என் திட நம்பிக்கை
குற்றத்தைச் சுமந்தோர் யார்
தெய்வ நேசம் தந்தோர் யார்
தெய்வ ஆட்டுக்குட்டிதான்

3. என்தன் பிராண பெலன் யார்
ஆத்துமத்தின் சாரம் யார்
யாரால் பாவி நீதிமான்
யாரால் தெய்வ பிள்ளை நான்
தெய்வ ஆட்டுக்குட்டியால்

4. கஸ்தியில் சகாயர் யார்
சாவின் சாவு ஆனோர் யார்
என்னைத் தூதர் கூட்டத்தில்
சேர்ப்போர் யார் நான் சாகையில்
தெய்வ ஆட்டுக்குட்டிதான்

5. இயேசுதான் என் ஞானமே
அவர் என் சங்கீதமே
நீங்களும் புகழுங்கள்
அவரைப் பின்செல்லுங்கள்
தெய்வ ஆட்டுக்குட்டியை.

## யூத ராஜசிங்கம் உயிர்த்தெழுந்தார்

யூத ராஜசிங்கம் உயிர்த்தெழுந்தார்
உயிர்த்தெழுந்தார், நரகை ஜெயித்தெழுந்தார்

1. வேதாள கணங்கள் ஓடிடவே
ஓடிடவே, உருகி வாடிடவே

2. வானத்தின் சேனைகள் துதித்திடவே
துதித்திடவே, பரனைத் துதித்திடவே

3. மரணத்தின் சங்கிலிகள் தெறிபட்டன
தெறிபட்டன, நொடியில் முறிபட்டன

4. எழுந்தார் என்றதொனி எங்குங் கேட்குதே
எங்குங் கேட்குதே, பயத்தை என்றும் நீக்குதே

5. மாதர் தூதரைக் கண்டகமகிழ்ந்தார்
அகமகிழ்ந்தார், பரனை அவர் புகழ்ந்தார்

6. உயிர்த்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை
மரிப்பதில்லை, இனி மரிப்பதில்லை

7. கிறிஸ்தோரே நாமவர் பாதம் பணிவோம்
பாதம் பணிவோம், பதத்தைச் சிரமணிவோம்

**ராக்காலம் பெத்லெம் மேய்ப்பர்கள்**

1.ராக்காலம் பெத்லெம் மேய்ப்பர்கள்
தம் மந்தை காத்தனர்
கர்த்தாவின் தூதன் இறங்க
விண் ஜோதி கண்டனர்.

2.அவர்கள் அச்சங்கொள்ளவும்
விண் தூதன்: திகில் ஏன்?
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற்செய்தி கூறுவேன்.

3.தாவீதின் வம்சம் ஊரிலும்
மெய் கிறிஸ்து நாதனார்
பூலோகத்தார்க்கு ரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்.

4.இதுங்கள் அடையாளமாம்
முன்னணைமீது நீர்
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்.

5.என்றுரைத்தான் அஷணமே
விண்ணோராம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினார்.

6.மா உன்னதத்தில் ஆண்டவா
நீர் மேன்மை அடைவீர்
பூமியில் சமாதானமும்
நல்லோர்க்கு ஈகுவீர்.

**ராஜன் தாவீதின் ஊரினிலே**

ராஜன் தாவீதின் ஊரினிலே
ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்
மந்தையைக் காக்க
விண்தூதர்கள் இறங்க
விண் ஜோதி கண்டவரே

1. திகையாதே கலங்காதே
மகிழ்விக்கும் செய்தியுண்டு
ராஜாதி ராஜன் வல்லமைத் தேவன்
மானிடனாய் உதித்தார்

2. ஒரு மாட்டுத் தொழுவத்தினில்
அன்னை மரியின் மடியினில்
புல்லணை மீதினிலே
கடுங்குளிர் நேரத்தில்
பாலகனாய் பிறந்தார்

3. நட்சத்திரத்தின் ஒளியிலே
மூன்று ஞானியர் வந்தனரே
பொன் வெள்ளைத் தூபம்
காணிக்கையேந்தி
பாதம் பணிந்தனரே

## ராஜன் தாவீதூரிலுள்ள

1. ராஜன் தாவீதூரிலுள்ள
மாட்டுக் கொட்டில் ஒன்றிலே
கன்னி மாதா பாலன்தன்னை
முன்னணையில் வைத்தாரே.
மாதா, மரியம்மாள்தான்;
பாலன், இயேசு கிறிஸ்துதான்.

2. வானம் விட்டுப் பூமி வந்தார்.
மா கர்த்தாதி கர்த்தரே;
அவர் வீடோமாட்டுக்கொட்டில்,
தொட்டிலோ முன்னணையே.
ஏழையோடு ஏழையாய்
வாழ்ந்தார் பூவில் தாழ்மையாய்.

3. ஏழையான மாதாவுக்கு
பாலனாய்க் கீழ்ப்படிந்தார்;
பாலிய பருவம் எல்லாம் அன்பாய்
பெற்றோர்க்கு அடங்கினார்
அவர்போல் கீழ்ப்படிவோம்,
சாந்தத்தோடு நடப்போம்.

4. பாலர்க்கேற்ற பாதை காட்ட
பாலனாக வளர்ந்தார்;
பலவீன மாந்தன்போல
துன்பம் துக்கம் சகித்தார்.
இன்ப துன்ப நாளிலும்
துணைசெய்வார் நமக்கும்.

**ராஜன் பாலன் பிறந்தனரே**

ராஜன் பாலன் பிறந்தனரே
தாழ்மையான தரணியிலே

ஆதிபன் பிறந்தார் அமலாதிபன் பிறந்தனரே
ஏழ்மையானதொரு மாட்டுக் கொட்டில்தனில்
தாழ்மையாய் அவதரித்தார்
… ராஜன்

1. அன்னை மரியின் கர்ப்பத்திலுதித்தார்
அன்பன் ஏழையாய் வந்தார்
அவர் மண்ணினில் மானிடரை
காக்க வென்றே அவதரித்தார்
… ராஜன்

2. பாரில் பாவம் போக்கவே பாங்குடன்
மானிட ஜென்மம் எடுத்தார்
அவர் பாதம் பணிந்திடுவோம்
பாலனின் அன்புக்கோர் எல்லையுமுண்டோ
மானிட ஜென்மம் எடுத்தார்
… ராஜன

**ராஜா உம் பிரசன்னம் போதுமையா**

ராஜா உம் பிரசன்னம் போதுமையா
எப்போதும் எனக்குப் போதுமையா
பிரசன்னம் பிரசன்னம்
தேவ பிரசன்னம்

1 உலகமெல்லாம் மாயையையா
உம் அன்பொன்றே போதுமையா

2. சீர்படுத்தும் சிருஷ்டிகரே
ஸ்திரப்படுத்தும் துணையாளரே

3. பெலப்படுத்தும் போதகரே
நிலைநிறுத்தும் நாயகரே

# வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே

வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே
வல்ல ஆண்டவர் இயேசுவண்டை

1. வாழ்நாளெல்லாம் வீண்நாளாய்
வருத்தத்தோடே கழிப்பது ஏன்
வந்தவர் பாதம் சரணடைந்தால்
வாழ்வித்து உன்னைச் சேர்த்துக்கொள்வார்

2. கட்டின வீடும் நிலம் பொருளும்
கண்டிடும் உற்றார் உறவினரும்
கூடுவிட்டு உன் ஆவி போனால்
கூட உன்னோடு வருவதில்லை

3. அழகும் மாயை நிலைத்திடாதே
அதை நம்பாதே மயக்கிடுமே
மரணம் ஓர் நாள் சந்திக்குமே
மறவாதே உன் ஆண்டவரை

4. வானத்தின் கீழே பூமிமேலே
வானவர் இயேசு நாமம் அல்லால்
இரட்சிப்படைய வழியில்லையே
இரட்சகர் இயேசு வழி அவரே

5. தீராத பாவம் வியாதியையும்
மாறாத உந்தன் பெலவீனமும்
கோரக் குருசில் சுமந்து தீர்த்தார்
காயங்களால் நீ குணமடைய

## வருஷப் பிறப்பாம் இன்று

1. வருஷப் பிறப்பாம் இன்று
புது பக்தியுடனே
தேவரீரிடத்தில் வந்து
வாழ்த்தல் செய்ய இயேசுவே
உந்தன் ஆவியை அளித்து
என்னைப் பலப்படுத்தும்
அடியேனை ஆதரித்து
வழிகாட்டியாய் இரும்

2. இது கிருபை பொழியும்
வருஷம் ஆகட்டுமேன்
என்னில் ஒளி வீசச்செய்யும்
என் அழுக்கை அடியேன்
முழுவதும் கண்டறிந்து
அருவருக்கச் செய்யும்
பாவம் யாவையும் மன்னித்து
நற்குணத்தை அளியும்

3. நீர் என் அழுகையைக் கண்டு
துக்கத்தாலே கலங்கும்
அடியேனைத் தேற்றல் செய்து
திடன் அளித்தருளும்
இந்த புது வருஷத்தில்
பாவத்துக்கும் கேட்டுக்கும்
தப்புவித்து என்னிடத்தில்
கிருபை கூர்ந்தருளும்

4. மாயமற்ற கிறிஸ்தோனாக
இந்த வருஷத்திலே
நான் நடக்கத்தக்கதாக
ஈவளியும் கர்த்தரே
யாவர்மேலும் அன்பின் சிந்தை
வைத்து தெய்வ பக்தியை
எனக்கு ரட்சிப்புண்டாக
காண்பித்திருப்பேனாக

4. மாயமற்ற கிறிஸ்தோனாக
இந்த வருஷத்திலே
நான் நடக்கத்தக்கதாக
ஈவளியும் கர்த்தரே
யாவர்மேலும் அன்பின் சிந்தை
வைத்து தெய்வ பக்தியை
எனக்கு ரட்சிப்புண்டாக
காண்பித்திருப்பேனாக

5. பூரிப்பாய் இவ்வருஷத்தை
நான் முடிக்க என்னை நீர்
தாங்கி உந்தன் திருக் கையை
என்மேல் வைக்கக்கடவீர்
வருத்தம் வந்தாலும் உம்மை
நம்பிப் பற்றிக்கொள்ளுவேன்
மரித்தாலும் பேரின்பத்தை
நான் அடைந்து வாழுவேன்.

**வல்லமை தேவை தேவா**

வல்லமை தேவை தேவா
வல்லமை தாரும் தேவா
இன்றே தேவை தேவா
இப்போ தாரும் தேவா

பொழிந்திடும் வல்லமை உன்னதத்தின் வல்லமை
ஆவியின் வல்லமை அக்கினியின் வல்லமை

1.மாம்சமான யாவர் மேலும்
ஆவியை ஊற்றுவேன் என்றீர்
மூப்பர் வாலிபர் யாவரும்
தீர்க்க தரிசனம் சொல்வாரே - பொழிந்

2.பெந்தேகோஸ்தே நாளின் போல
பெரிதான முழக்கத்தோடே
வல்லமையாக இறங்கி
வரங்களினாலே நிரப்பும் - பொழிந்

3.மீட்கப்படும் நாளுக்கென்று
முத்திரையான ஆவியைத்தாரும்
பிதாவே என்று அழைக்க
புத்ர சுவிகாரம் ஈந்திடும் - பொழிந்

## வான தூதர் சேனைகள்

வான தூதர் சேனைகள்
கீதங்களைப் பாடியே
ஓய்வின்றி துதித்துப் பாலனை வாழ்த்தினர் (2)

1. ராவேளை மேய்ப்பர்கள் மந்தை காக்கையில்
தோன்றினர் தூதர்கள் அட்சணமே
அச்சத்தை நீக்கியே மேய்ப்பரிடம்
நற்செய்தி கூறியே மகிழ்வித்தனர்
சேர்ந்து நாமும் சென்றங்கு
காண்போம் நம் பாலனை
- வானதூதர்

2. பொன் தூபம் வெள்ளைப் போளம் ஏற்றிடுவோம்
சென்றனர் பாலனை தரிசிக்க
வான் நட்சத்திரத்தின் ஒளியிலே
மாட்டுத் தொழுவத்தை அடைந்தனர்
சேர்ந்து நாமும் சென்றங்கு
காண்போம் நம் பாலனை
- வானதூதர்

## வானம் வாழ்த்தட்டும்

வானம் வாழ்த்தட்டும் வையம் போற்றட்டும்
பூமி மகிழட்டும் பூதலம் பணியட்டும்
பாடுங்கள் (2) பாலன் இயேசு இன்று பிறந்தார் (2)
Merry (4) Christmas (4)

1. காலம் சிந்தும் கானம் தாலாட்டு பாடிடுதே
மேகம் சிந்தது வானம் தேனாக மாறிடுதே
குளிரும் பணியும் வாட்டிட
குளிரில் கோமகன் தூங்கிட
விண்மீன்கள் கூட்டமே ஒளிருங்கள்
விண் பாலனோடு விளையாடவே
வா வா வா வானத்து வெண்ணிலவே

2. ஏதேன் தந்த பாவம் சாபங்கள் நீங்கிடவே
ஏழை கோலம் கொண்டார் இயேசு பாலனின்றே
அன்னை மரியின் மடியிலே
அன்பின் ரூபம் ஆனாரே
இனி மீட்க வந்த தேவ மைந்தனே
இனி பாடவைத்த இயேசு பாலனே
வா வா வா வாழ்த்து பாடுகிறேன்

**வானோர் ராஜன் பிறந்தார் பிறந்தார்**

வானோர் ராஜன் பிறந்தார் பிறந்தார் (2)

1. பூவினை மீட்கப் பரலோகப் பூமான் பூதலந்தனில் பிறந்தார்
பூட்டிய வீட்டுயர் வாசலைத் திறக்கப் பூலோகத்தில் பிறந்தார் (2)
வாசல்களே உயருங்கள் கதவுகளே திறவுங்கள் (2)
வானாதி ராஜன் வல்லமை தேவனை வாழ வழிவிடுங்கள் (2)

2. ஆக்கினைத் தீர்ப்பை அடையாதவாறு அடைக்கலந்தரப் பிறந்தார்
ஆருயிரீந்து அன்பினைக் காட்ட ஆண்டவரே பிறந்தார் (2)
ஆத்துமமே ஸ்தோத்தரி அல்லேலூயா ஆர்ப்பரி (2)
ஆண்டவரான அருளுள்ள வள்ளல் ஆள ஆசைப்படுங்கள் (2)

## வான் நிலவே நீ வா வா

வான் நிலவே நீ வா வா, பாலனை பாராட்ட வா
வீசும் தென்றலே வா வா, விண்மணி மகிழ்ந்திட வா
மரியன்னை மடியில் மகிமையின் தேவன் மானிடன் ஆனாரே
பாடுவோம் போற்றுவோம் புகழுவோம்
வான் நிலவே நீ வா வா, வா வா

1. வாடை வீசும் நேரம், பெத்தலை சத்திர ஓரம்
கண்மணி அவதாரம் (2)
கந்தை ஆடை தானோ, பசும்புல்லணை மேடை தானோ (2)
என் பாவம் நீக்க இன்று என் இயேசு மண்ணில் வந்தார்
- வான் நிலவே

2. வானில் தவழும் மேகம், மேகங்கள் நடுவில் இராகம்
தூதரின் பண் கேட்குதே (2)
வானம் தேன் சிந்துதே, புது கானம் தாலாட்டுதே (2)
என் பாவம் நீக்க இன்று என் இயேசு மண்ணில் வந்தார்
- வான் நிலவே

## வாரும் ஐயா போதகரே

1. வாரும் ஐயா, போதகரே,
வந்தெம்மிடம் தங்கியிரும்;
சேரும் ஐயா பந்தியினில்,
சிறியவராம் எங்களிடம்.

2. ஒளிமங்கி இருளாச்சே,
உத்தமனே, வாரும் ஐயா!
கழித்திரவு காத்திருப்போம்,
காதலனே, கருணை செய்வாய்.

**வாலிபர்தமக்கூண் அதுவாகும்**

1. வாலிபர்தமக்கூண் அதுவாகும்;
வயோதியர்க்கும் அதுணவாகும்;
பாலகர்க்கினிய பாலும் அதாம்;
படிமீ தாத்மபசி தணிக்கும்.

2. சத்துருப் பேயுடன் அமர்புரியும்
தருணம் அது நல் ஆயுதமாகும்;
புத்திரர் மித்திரரோடு மகிழும்
பொழுதும் அதுநல் உறவாகும்.

3. புலைமேவிய மானிட
ரிதயம் பெறுதற்கதுமருந்தாய்;
நிலையா நரர்வாணாள் நிலைக்க
நேயகாய கற்பம் அதாம்.

4. கதியின் வழிகாணாதவர்கள்
கண்ணுக்கரிய கலிக்கம் அது;
புதிய எருசாலேம்பதிக்குப் போகும்
பயணத்துணையும் அது

## விசுவாசியின் காதில் பட, இயேசுவென்ற நாமம்

விசுவாசியின் காதில் பட, இயேசுவென்ற நாமம்
விருப்பாயவர் செவியில் தொனி இனிப்பாகுது பாசம்.

1. பசித்த ஆத்துமாவைப் பசியாற்று மன்னாவதுவே@
முசிப்பாறுதல் இளைத்தோர்க்கெல்லாம் முற்றும் அந்தப் பெயரே.

2. துயரையது நீக்கி காயமாற்றிக் குணப்படுத்தும்@
பயங்கள் யாவும் இயேசுவென்றால் பறந்தோடியே போகும்.

3. காயப்பட்ட இருதயத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தும்,
மாயைகொண்ட நெஞ்சையது மயக்கமின்றிவிடுக்கும்.

4. எல்லை இல்லாக் கிருபைத்திரள் ஏற்றுநிறைந்திருக்கும்,
எல்லா நாளும் மாறாச்செல்வம் இயேசுவென்ற பெயரே.

5. என்னாண்டவா, என் ஜீவனே என் மார்க்கமே, முடிவே,
என்னால் வருந்துதியை நீரே ஏற்றுக்கொள்ளும், தேவே.

## விடியற்காலத்து வெள்ளியே

1. விடியற்காலத்து வெள்ளியே தோன்றி
கார் இருள் நீங்கத் துணைபுரிவாய்
உதய நக்ஷத்திரமே ஒளி காட்டி
பாலக மீட்பர்பால் சேர்த்திடுவாய்

2. தண் பனித் துளிகள் இலங்கும் போது
முன்னணையில் அவர் தூங்குகின்றார்
வேந்தர் சிருஷ்டிகர் நல் மீட்பர் என்று
தூதர்கள் வணங்கிப் பாடுகின்றார்

3. ஏதோமின் சுகந்தம் கடலின் முத்து
மலையின் மாணிக்கம் உச்சிதமோ?
நற்சோலையின் வெள்ளைப்போளம் எடுத்து
தங்கமுடன் படைத்தல் தகுமோ?

4. எத்தனை காணிக்கைதான் அளித்தாலும்
மீட்பர் கடாக்ஷம் பெறல் அரிதே
நெஞ்சின் துதியே நல் காணிக்கையாகும்
ஏழையின் ஜெபம் அவர்க்கருமை.

5. விடியற்காலத்து வெள்ளியே தோன்றி
கார் இருள் நீங்கத் துணைபுரிவாய்
உதய நக்ஷத்திரமே ஒளி காட்டி
பாலக மீட்பர்பால் சேர்த்திடுவாய்

## விடியற்காலத்து வெள்ளியே

1. விடியற்காலத்து வெள்ளியே தோன்றி
கார் இருள் நீங்கத் துணைபுரிவாய்
உதய நட்சத்திரமே ஒளி காட்டி
பாலக மீட்பர்பால் சேர்த்திடுவாய்

2. தண் பனித் துளிகள் இலங்கும்போது
முன்னனையில் அவர் தூங்குகின்றார்
வேந்தர் சிருஷ்டிகர் நல் மீட்பர் என்று
தூதர்கள் வணங்கிப் பாடுகின்றார்

3. ஏதோமின் சுகந்தம் கடலின் முத்து
மலையின் மாணிக்கம் உச்சிதமோ
நற்சோலையின் வெள்ளைப்போளம் எடுத்து
தங்கமுடன் படைத்தல் தகுமோ

**விண் தூதர் வானில் தோன்றியே**

விண் தூதர் வானில் தோன்றியே தோன்றியே
நற்செய்தி ஒன்று கூறினார்
இருள் நீக்கும் மெய் இயேசு பாலகன்
இன்று பெத்லகேமில் பிறந்திருக்கிறார்
துன்பம் இன்பமாக மாறிட
மாந்தர் உள்ளம் மகிழ்ந்தாடுதோ!

1. சருவாதிலோக தேவனே
மானிடனாகத் தோன்றினார்
சந்திக்க வந்த உந்தனின்
சாபம் தனைப் போக்கினார்

2. பரலோக மேன்மை நீங்கியே
தன்னைத் தாழ்த்தி பூமியில் வந்தார்
மாந்தர் பாவம் யாவும் போக்கவே
பலியாகவே மாறினார்

3. தேவன் மாந்தர் உறவை ஏற்கவே
பாலமாக இயேசு பிறந்தார்
பாவிகள் மேல் கொண்ட அன்பினால்
தேவாதி தேவன் உதித்தார்

**விண்ணில் ஓர் நட்சத்திரம் கண்டேன்**

1. விண்ணில் ஓர் நட்சத்திரம் கண்டேன்
அதை எண்ணி வியப்பு மிக கொண்டேன்
அதன் காரணம் என்னவென்று கேட்டேன்
தேவன் மானிடன் ஆனார் என்றறிந்தேன்
ஆ…ஆ…ஆ…

அந்த பாலன் இயேசு ராஜன்
அவர் பாதம் பணிவோம் (2)

2. மந்தை காக்கும் மேய்ப்பர் சிலர் கண்டேன்
அவர் விந்தையான செய்தி சொல்ல கேட்டேன்
தேவ தூதர்கள் கூடி பாடிய பாடலையும்
இயேசுவை கண்டதையும் கேட்டேன்
ஆ…ஆ…ஆ…

3. ஒட்டகத்தில் மூவர் செல்ல கேட்டேன்
அதை திட்டமாய் அறிய அங்கு சென்றேன்
இயேசுவை தரிசித்த ஞானிகள் மூவர்
தங்கள் தேசம் திரும்புவதை கண்டேன்
ஆ…ஆ…ஆ…

## விண்ணோர் மகிழ்ந்து பாடும் பாடல்

விண்ணோர் மகிழ்ந்து பாடும் பாடல்
உம்மைத் தாலாட்ட
மண்ணோர் உவந்து பாடும் பாடல்
உம்மை வரவேற்க

1. தந்தை நெஞ்சில் மஞ்சம் கொண்ட
வார்த்தை நீயன்றோ
தேவ வாழ்வில் தூய மேன்மை
ஏன் துறந்தாயோ
என் தாழ்ந்த உள்ளம் தன்னில்
நீ வந்தருள்வாயோ
- விண்ணோர்

2. அன்னை மரியும் அவரது மடியில்
உம்மைத் தாலாட்ட
மாபெரும் மகிழ்வை வழங்கும் செய்தி
வானவன் அறிவித்து
என் வாழ்வில் இன்பம் பொழிய
நின் வாழ்வை ஈந்தாயோ
- விண்ணோh

**விருந்து வைப்போமே நல்ல விருந்து வைப்போமே**

அல்-லே-லுயா அல்லேலுயா (2)

விருந்து வைப்போமே நல்ல விருந்து வைப்போமே
ஜாதிமதம் பேதமின்றி அனைவருக்கும் நல்லதொரு
கிறிஸ்மஸ் விருந்து வைப்போமே - அல்-லே-லுயா

1. பெத்தலையில் பிறந்தாரே அல்லேலுயா
மாட்டுக்கொட்டிலில் பிறந்தாரே அல்லேலுயா
பெத்தலையில் பிறந்தவரை போற்றி துதிமனமே
மாட்டுக்கொட்டில் பிறந்தவரை போற்றி துதிமனமே
மாட்டுக்கொட்டில் ஏழ்மை கோலம்
தாழ்மையுள்ள முன்னணையில் நீர் பிறந்தீரே
விண்ணுலகம் துறந்தீரே மண்ணுலகம் மீட்டீரே (2)
பாவம் போக்கிடவே நீர் பிறந்தீரே - விருந்து

2. ஆயர் பாலர் தேடினர் அல்லேலுயா
பாலன் இயேசு தோன்றினார் அல்லேலுயா
கன்னி மகவாய் பிறந்தவரை போற்றி துதிமனமே
ஏழ்மை கோலம் ஏற்றவரை போற்றி துதிமனமே
மேய்ப்பர்களும் ஞானியரும்
வந்தும்மை பணிந்து தொழுதனரே
அன்று சொன்ன தீர்க்கனின் மொழி நிறைவேறுதே (2)
பாவம் போக்கவே நீர் பிறந்தீரே - விருந்து

3. ஆடுவதும் பாடுவதும் கிறிஸ்மஸ் ஆகுமோ
உண்டு உடுத்தி மகிழ்ந்து விட்டால் கடமை தீருமோ
இயேசுவை போல் கிறிஸ்தவர்கள் அன்புகாட்டனும்
கிறிஸ்தவரின் தாழ்மை இந்த உலகம் போற்றனும்
உன்னைப்பார்த்து உலகில் வாழும் மக்கள் திருந்தனும்
உனது உருவில் இயேசு இந்த உலகம் பார்க்கனும் - விருந்து

**விருந்தைச் சேருமேன், அழைக்கிறார்**

1.விருந்தைச் சேருமேன்,
அழைக்கிறார்
ஆகாரம் பாருமேன், போஷிப்பிப்பார்
தாகத்தைத் தீர்க்கவும்
இயேசுவின் மார்பிலும்
சாய்ந்திளைப்பாறவும்
வா, பாவி, வா.

2. ஊற்றண்டை சேரவும் ஜீவனுண்டாம்
பாடும் விசாரமும் நீங்கும் எல்லாம்
நம்பி வந்தோருக்கு
திருப்தி உண்டாயிற்று
ஜீவாற்றின் அண்டைக்கு
வா, பாவி, வா.

3. மீட்பரின் பாதமும் சேராவிடில்
தோல்வியே நேரிடும் போராட்டத்தில்
இயேசுவே வல்லவர்,
இயேசுவே நல்லவர்,
இயேசுவே ஆண்டவர்
வா, பாவி, வா.

4. மோட்சதிதின் பாதையில் முன்செல்லுவாய்
சிற்றின்ப வாழ்வினில் ஏன் உழல்வாய்?
வாடாத கிரீடமும்
ஆனந்த களிப்பும்
பேர் வாழ்வும் பெறவும்
வா, பாவி, வா.

5. சேருவேன், இயேசுவே, ஏற்றுக்கொள்வீர்
பாவமும் அறவே சுத்தம்செய்வீர்
அப்பாலே மோட்சத்தில்
ஆனந்நக் கடலில்
மூழ்கிப் பேரின்பத்தில்
கெம்பீரிப்பேன்.

## வீணையே ஒலித்திடு விண்ணவர் பிறந்தார்

வீணையே ஒலித்திடு
விண்ணவர் பிறந்தார்
கவிதையே மலர்ந்திடு
கர்த்தர் பிறந்தார் (2)

தேவன் சாரோனின் வண்ண ரோஜா
பள்ளத்தாக்கின் அழகு லீலி (2)
- வீணையே

1. பூந்தென்றலே பார் வெண்ணிலவே
விண் மீன்களே மகிழ்ந்து பாடுங்கள் - தேவன்

2. பூங்குயில்களே ஆடும் மயில்களே
தேன் மலர்களே மகிழ்ந்து போற்றுங்கள் - தேவன்

3. இன்பாடல்கள் உம் கிருபைகள்
என்றும் பாடுவேன் ஏசு பாலனே - வீணையே

## வேறு ஜென்மம் வேணும்

வேறு ஜென்மம் வேணும், - மனம்
மாறுதலாகிய உள்ளத் தூய்மை என்னும்.

1. கூறு பரிசுத்தர் மாறிலா தேவனின்
தேறுதலான விண்பேறு பெற இங்கே; - வேறு

2. பாவசுபாவமும் ஜீவியமும் மாறத்
தேவனின் சாயலை மேவுவதாகிய; - வேறு

3. மானிடரின் அபிமானத்தினாலல்ல,
வானவரின் அருள் தானமாக வரும்; - வேறு

4. ஒன்றான ரட்சகர் வென்றியதை நம்பி,
மன்றாடுவோருக்கு ஒன்றுவதாகிய; - வேறு

5. மைந்தர் கெடாமல் உகந்து ஈடேறவே,
சொந்த மகன்தனைத் தந்த பிதா அருள்; - வேறு

6. மண்ணினில் பத்தராய் நண்ணி நடக்கவும்,
விண்ணினில் தூயராய் தண்ணளி கொள்ளவும்; - வேறு

## ஸ்தோத்திரம் இயேசு நாதா

1. ஸ்தோத்திரம் இயேசு நாதா
உமக்கென்றும் ஸ்தோத்திரம் இயேசு நாதா
ஸ்தோத்திரம் செய்கிறோம் நின்னடியார்
திரு நாமத்தின் ஆதரவில்!

2. வான தூதர் சேனைகள்
மனோகர கீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப் பாடித் துதிக்கப் பெறும்
மன்னவனே உமக்கு!

3. இத்தனை மகத்துவமுள்ள
பதவி இவ்வேழைகள் எங்களுக்கு
எத்தனை மாதயவு நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்!

4. நின் உதிரமதினால்
திறந்த நின் ஜீவப் புது வழியாம்
நின் அடியார்க்குப் பிதாவின் சந்நிதி
சேரவுமே சந்ததம்!

5. இன்றைத் தினமதிலும்
ஒருமித்துக்கூட உம் நாமத்தினால்
தந்த நின் கிருபைக்காய் உமக்கென்றும்
ஸ்தோத்திரம், ஸ்தோத்திரமே!

6. நீரல்லால் எங்களுக்குப்
பரலோகில் யாருண்டு ஜீவநாதா
நீரேயன்றி இகத்தில் வேறொரு
தேட்டமில்லை பரனே!